"நிருபர்னு சொல்லுங்க. பேரு?"

"ஜெயந்தன்"

"அப்ப அண்ணாமலைங்கறது...?"

★ ★ ★

"நீ பார்த்தது உண்மை. ஆனா அது இந்த உலகத்துக்கு பொய்யா இருக்கணும். இருந்தே தீரணும். அப்பதான் இச்சாதாரிகள் ஏகாந்தமா திரிய முடியும். இல்லேன்னா எங்களையும் பிடிச்சு அடக்கி ஆள ஒரு கூட்டம் கிளம்பிடும். அதனாலதான் ஷியானா வந்து விஞ்ஞானம் பேசினேன்.

உன் எதிரே நாகராஜனா நிக்கிறேன். நாங்க வடிவம் மாறும் போது யாரும் பார்க்க விட மாட்டோம். ஆனா நீ பார்த்துட்டே. எங்களப் பற்றின ரகசியம் தெரிஞ்ச ஒரே நபர், இந்த உலகத்துலையே நீ மட்டும்தான். என் பேச்ச கேட்டா நீ உயிர் பிழைப்பே. இல்லேன்னா நீ எங்க போனாலும் இந்த குடும்பத்தை அழிக்க வந்த மாதிரி உன்னையும் அழிக்க வருவேன்."

இச்சாதாரி பாம்பை மையமாக வைத்து 'நாகின்' என்று இந்தியிலும், 'நீயா' என்று தமிழிலும் திரைப்படங்கள் வெளியாகி சக்கை போடு போட்டன. அவற்றின் வெற்றிகளை முறியடிக்கும் விதத்தில் இச்சாதாரி பாம்பை மையமாகக் கொண்டு 'காண்பதெல்லாம் உண்மை' என்னும் இந்நாவலை நகர்த்தும் நாவலாசிரியர் இறுதியில் இந்நாவலின் விடை தெரியா முடிச்சை தனக்கே உரித்தான விதத்தில் அவிழ்க்கிறார்.

நாவல் உலகில் தனக்கென ஓர் பாணியைக் கொண்டு உலவும் நாவலாசிரியர் இந்திரா சௌந்தர்ராஜனின் இப்படைப்பு வாசகர்களிடையே பெரும் வரவேற்பைப் பெறும் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை.

—பதிப்பகத்தார்.

# காண்பதெல்லாம் உண்மை

## 1

**"பாம்புகளைப் பற்றி ஆராய்ச்சி செய்த பார்த்திபனுக்கு ஒரு அதிசயம் காத்திருந்தது. அவன் ஆராய்ச்சி செய்ய எடுத்துக் கொண்ட பாம்புகளில் ஒன்று இச்சாதாரி நாகம். அவன் ஒளிந்திருந்து பார்த்த ஒரு பொழுதில் அது அவனைப் போலவே வடிவம் எடுத்து வெளியேறத் தொடங்கியது."**

வண்ணமுத்து கிளம்பி விட்டான் அதுவும் தனியாக!

வெளியே நல்ல கும்மிருட்டு - இருந்தும் பௌர்ணமிச் சந்திரனின் வெளிச்சத்தில் ஓரளவு பார்க்க முடிந்தது.

இன்றைக்கு எப்படியும் அதைப் பிடிக்காமல் திரும்பக்கூடாது.

பிடித்து விட்டாலோ சுளையாக பத்தாயிரம்!

ஒரு ஆறடி நீள கருநாகத்துக்கு யாராவது பத்தாயிரம் தருவார்களா?

ஆனால் வடகரை வைத்தியர் மாசிலாமணி தருகிறேன் என்று கூறியிருந்தார்.

அட்வான்ஸாக ஆயிரம் ரூபாயையும் கொடுத்திருந்தார்!

"எதுக்கு வைத்தியரே கருநாகத்துக்கு இவ்வளவு தர்ரீக...?"

''கேள்வி கேக்காம பாம்போட வா. கருநாகம்தான் வேணும். கண்ட கழுதையை பிடிச்சிகிட்டு வந்தே வாங்கிக்க மாட்டேன்.''

''அதோட விஷத்துல ஏதாவது மருந்து பண்ணப் போறீகளா?''

''கேள்வி கேக்காதே. பாம்போட வா, போ...''

வைத்தியர் மாசிலாமணி இறுக்கமாக பேசி அவனை அனுப்பியிருந்தார்.

வண்ணமுத்துவுக்கு ஒன்றும் அதிகம் வயதாகி விடவில்லை.

இருபத்தைந்திருந்தால் அதிகம்.

மீசை கூட இன்னும் அடப்பமாக வளரவில்லை.

பாம்பு பிடிக்கும் கூட்டத்தைச் சேர்ந்தவன்.

மாசிலாமணிக்கு அவர் கேட்கும் போதெல்லாம் பாம்புகளை பிடித்துக் கொண்டு போய்த் தருவான்.

நூறு ஐம்பது என்றுதான் தருவார். ஆனால் ஒரு பாம்பிற்கு பத்தாயிரம் தருகிறேன் என்று சொன்னது இப்போதுதான்.

அது சரி... எதற்கு அந்த கருநாகம்?

## 2

**''பார்த்திபன் விக்கித்துப் போனான். ஐயோ இது எப்படி சாத்தியம் என்று பதைத்துப் போனான். வெளியே சிலரிடம் சொன்னபோது சிரித்து விட்டார்கள்...''**

''தப்பிக்க வழி இல்லை... ஒண்ணும் பண்றதுக் கில்லை'' - என்றபடியே ஜாதகத்தை மூடினார் வேடியப்ப ஜோசியர்.

எதிரில் மிரண்டு போய் அமர்ந்திருந்தார் திருப்பதி சாமிக்கவுண்டர்.



ஏழாயிரம் ஏக்கரா நிலம் இருக்கிறது.

ஏழெட்டு மில்கள் இருக்கின்றன.

போன வாரம் கூட ஒரு புதிய கார் வாங்கியிருந்தார்.

ஆனால் நிம்மதியைத்தான் வாங்க முடியவில்லை.

''ஒண்ணு வேணா பண்ணுங்க. நாகர்கோயில் போய் ஒரு சர்ப பலி பூசை பண்ணிட்டு வாங்க. எப்பவும் நாகதாளி வேர் கை விரல்ல இருக்கட்டும். அதனால் ஏதாவது மாற்றம் வரலாம்.''

வேடியப்ப ஜோசியர் இறுதியாக ஒரு பாதையை காட்டினார்.

''அதான் ஏழெட்டு தடவை சர்ப பலி பூசையை செய்தாச்சே?''

''இன்னொரு தடவை பண்ணுங்க. நாகராஜன் கோவம் தணிஞ்சா தான் வாழ்க்கை. இல்லாட்டி கைலாசம் தான்.''

திருப்பதிசாமிக் கவுண்டர் கும்பிடு போட்டுவிட்டு எழுந்து கொண்டார்.

வெளியே வந்தார்.

கார் காத்திருந்தது. பி.ஏ. ராஜ்குமாரும் காத்திருந்தான்.

கவுண்டர் வரவும் கதவைத் திறந்து விட்டான். அப்படியே முன்னால் ஏறிக் கொண்டான்.

கார் சீறத் தொடங்கியது. கவுண்டர் உள்ளே குறுகத் தொடங்கியிருந்தார். பல கோடிகளுக்கு அதிபதிக்கு அப்படி என்னதான் பிரச்சனை?

## 3

**''நாலு பேர் சிரிக்கிறார்களே என்பதற்காக தான் பார்த்தது பொய்யாகி விடுமா என்ன? பார்த்திபனுக்குள் இந்த அதிசயக் காட்சி திரும்பத் திரும்ப தோன்றியது. தன்னுடைய வடிவை எடுத்த அந்த பாம்பு எங்கே போனது?**

எதற்காக தன்னுடைய வடிவத்தை எடுத்தது...?''

பொள்ளாச்சி வட்டாரத்தில் இடும்பன் காடு கொஞ்சம் அதிசயமான இடம்தான். பெரும்பாலும் காட்டு வாசிகள் கூட அந்த காட்டுக்குள் தனியாக போக மாட்டார்கள். கூட்டமாக ஆட்டம் பாட்டம் தாரை தப்பட்டை என்றுதான் போவார்கள்.

இந்தக் காட்டில் ஒரு சுனை இருக்கிறது. அதை ஒட்டி இடும்பனுக்கு ஒரு கோவில் இருக்கிறது. சின்னக் கோவில்.

இந்த கோவிலுக்குத்தான் சாமி கும்பிடப் போவார்கள். அப்படிப் போகும்போது அங்கே நிறைய அதிசயக் காட்சிகளைப் பார்த்திருக்கிறார்கள்.

புலியும், புள்ளிமானும் ஒன்றாக ஒரு இடத்தில் படுத்துக் கிடப்பதையும், யானை மேல் சிறுத்தை அமர்ந்து விளையாடிக் கொண்டிருப்பதையும் பார்த்து அதிசயத்துப் போயிருக்கிறார்கள்.

அதனாலேயே அங்கே ஏதோ ஒரு அபூர்வ சக்தி இருப்பதாக நம்பிக்கை. இங்கே யாராவது வேட்டை யாடினால், காலம் அவர்களை வேட்டையாடி விடும் என்பது மிக அழுத்தமான நம்பிக்கை.

இது தெரியாத தீர்த்தமலை கவுண்டர், ஒருநாள் அந்த காட்டுக்குள் பிரவேசித்து சில மான்களையும் சுட்டுத் தாளித்து விட்டார். லண்டனிலிருந்து பல வருடங்களுக்குப் பிறகு திரும்பிய கித்தாப்பு வேறு.

அவைகளை அள்ளிப் போட்டுக் கொண்டு ஜீப்பில் திரும்பும் போதுதான் ஒரு பேரதிசயம் போல அந்தக் காட்சி கண்ணில் பட்டது.

ஒரு இடத்தில் கீரியும் இரண்டு பாம்புகளும் சண்டை போட்டுக் கொண்டிருந்தன. அதைப் பார்த்த தீர்த்தமலை கவுண்டருக்கு குஷியாகி விட்டது.



''விடாத பிடி... போடு...'' என்று கீரிக்கு வக்காலத்து வாங்கத் தொடங்கி விட்டார்.

ஒரு கட்டத்தில் கீரி சோர்ந்து போகத் தொடங்கியது. பாம்புகளின் பிடி இறுக ஆரம்பித்தது போலத் தோன்றியது. கவுண்டருக்கு அது அவமானமாகப் பட்டது.

துப்பாக்கியை எடுத்தார். இரண்டு பாம்பில் ஒன்றை நோக்கி தோட்டாவை அனுப்பினார்.

பீஸ்... பீஸ்!

கீரியும் மிரண்டு ஓடியது.

''அடச் சனியனே... உனக்கு உதவி செய்யத்தான் அதை சுட்டேன். நீ கோழை மாதிரி ஓட்றியா. இரு உன்னை...'' - என்றபடியே வேட்டைத் துப்பாக்கியை அது புகுந்து கொண்ட புதரை நோக்கிச் சுட்டார். அது ரத்தச் சகதியோடு எகிறி வந்து வெளியில் விழுந்தது.

இந்த களேபரத்தில் அந்த இன்னொரு பாம்பு ஓடியே போய்விட்டது.

செத்துப் போன கீரியை தூக்கி மான்களோடு போட்டுக் கொண்டார்.

'சேத்துமடை'யில் இருக்கும் தன் பங்களாவையும் அடைந்தார்.

வேலைக்காரர்கள் ஓடி வந்தார்கள்.

மானையும் கீரியையும் பார்த்து வாய் பிளந்தார்கள்.

''எங்க முதலாளி, டாப்சிலிப்ல அடிச்சதா?'' கணக்குப் பிள்ளை கனக ஷண்முகம்தான் கேட்டார்.

''அவ்ளோ தூரம் போகலடா. இங்க கீழையே கண்ணுல பட்டுச்சுங்க. கதையை முடிச்சுட்டேன்.''

''கீழன்னா... எங்க முதலாளி?''

''யாருக்குடா இடமெல்லாம் தெரியும். அடிவாரத்துல வடக்கு பக்கம் அடப்பமா இருக்குதே ஒரு காடு... அங்கன்னு நினைக்கறேன்.''

''ஐயோ அது இடும்பன் காடாச்சே''

''என்ன இப்போ அதுக்கு?''

''அங்கையா வேட்டையாடினீங்க...?''

''அங்க வேட்டையாடினா என்ன?''

''அது அபூர்வ காடுங்க... அங்க மிருகங்க சண்டையே போடாது. மானும் புலியும் ஒண்ணா இருக்குங்க. கீரியும் பாம்பும் ஒத்துமையா இருக்கற ஒரே இடம் அது.''

''யார்கிட்ட காது குத்தறே... வர்ற வழியில இரண்டு பாம்பும் ஒரு கீரியும் அடிச்சுகிட்டப்போ சுட்ட கீரிதான் இது.''

''இருக்காது முதலாளி - அதுங்க விளையாடியிருக்கும். நீங்க தப்பா எடுத்துக்கிட்டீங்க...''

''டேய் எந்த ஊர்லடா பாம்பும் கீரியும் சினேகமா இருக்கும்? ஏண்டா இப்படி ராட்சஸப் பொய் சொல்றே!''

''இல்ல முதலாளி... நீங்க சின்ன வயசுலையே லண்டனுக்கு படிக்கப் போயிட்டீங்க. அப்பப்பதான் வந்து போவீங்க. உங்களுக்கு அதனாலதான் இடும்பன் காட்டைப் பத்தி தெரியாம போயிடிச்சு. இடும்பன் காடு மட்டும் ஒரு உலக அதிசயம் முதலாளி....''

''சரி இருந்துட்டு போகட்டும். இந்த மானுங்கள பக்குவமா உரியுங்க. பாடம் பண்ணி இந்த பங்களால வைக்கணும். இந்த கீரியையும் முடிஞ்சா பாடம் பண்ணி வைய்யுங்க.''

''வேண்டாம் முதலாளி. இதுங்கள இடும்பன் காட்டுலையே குழியைத் தோண்டி புதைச்சு பால் விட்டுடுங்க. அதுதான் நல்லது.''

''இல்லேன்னா?''

''என்னத்த சொல்வேன்... இடும்பங்காட்டுல ஒருத்தர் வேட்டையாடினா அவங்க குடும்பத்தை அந்த இடும்பனே வந்து வேட்டையாடுவான்னு சொல்வாங்க.''



கணக்குப் பிள்ளையின் பதில் தீர்த்தமலைக்கு எரிச்சலைத் தந்தது.

''இதோ பார்... நான் லண்டன்ல படிச்சவன். என்கிட்ட இந்த நாலாந்தரமான கதைகளையும் நம்பிக்கைகளையும் சொல்லாதே. ஹண்டிங் என்னோட ஹாபி. அதை நான் எந்தக் காட்டுலையும் பண்ணுவேன். போய் வேலையைப் பாரு.

தீர்த்தமலை தெனாவெட்டாக சொல்லிவிட்டு நகர்ந்தார்.

அவரது அறை அந்த பங்களாவின் மாடியில் இருந்தது. நல்ல விசாலமான அறை. அந்தமான் தேக்குக் கட்டில். அதில் வார்னீஷ் வாசம்! சுவற்றில் தஞ்சாவூர் ஓவியங்கள். நல்ல லஸ்தர் விளக்கில் ஐம்பத்தி நான்கு கண்ணிகள். நல்ல அகலப்பட்டையான பிளேடுகளைக் கொண்ட மின் விசிறிகள் என்று அமர்க்களமாக இருந்த அந்த அறைக்குள் நுழைந்த தீர்த்தமலைக் கவுண்டர் நிலைக் கண்ணாடி அருகே சென்று தலையை கோதி விட்டுக் கொண்டார்.

வேட்டை அலைச்சலில் முகத்தில் எண்ணெய்ப் பசை. அதை துடைத்துக் கொண்டார். அப்படியே அழகும் பார்த்துக் கொண்டார்.

அப்பொழுது அந்த கண்ணாடியின் பின்னால் இருந்து கண்ணாடி மேலே ஏறியது நல்ல பாம்பு ஒன்று.

இடும்பன் காட்டில் கீரியைச் சுட்டபோது தப்பிச் சென்றுவிட்ட அதே பாம்போ?

தீர்த்தமலைக்கு நெஞ்சை அடைத்தது.

கண்கள் வெறித்து விட்டன. கத்தக் கூட வாய் வரவில்லை. அது அந்த பயமான இறுக்கத்தை பயன்படுத்திக் கொண்டபடி அங்கிருந்து சரிந்து கீழே இறங்கியது.

'ஐய்யோ...!' - அலறிக் கொண்டு விலகப் பார்ப்பதற்குள் கட்டை விரல் மேலேயே ஒரு போடு. அதன்பின் வேலைக் காரர்கள் வந்து பார்த்தபோது தான் விஷயம் தெரிந்தது.

உடம்பெல்லாம் நீலம் பாரித்துக் கிடக்க தீர்த்தமலைக் கவுண்டர் உடல் நிலைக்கண்ணாடி முன் மண்டியிட்டபடி விழுந்து கிடந்தது.

அருகிலேயே ஒரு பாம்புச் சட்டை!

ஒரு முக்கிய குறிப்பு இது நடந்த வருடம் 1968!

## 4

**அவன் கேள்விக்கு விடை வேறு விதமாய்க் கிடைத்தது. பார்த்திபனைப் பார்த்த ஒருவர், ''என்ன பார்த்திபன் திருப்பதி சாமிக் கவுண்டர் வீட்டு வேலையை விட்டு விட்டீர்களா?'' என்று கேட்ட போது ஆச்சரியமாகி விட்டது. 'பாம்புப் பண்ணை வைத்துக் கொண்டு அது பற்றி ஆராயும் நான், எதற்கு கவுண்டரிடமெல்லாம் வேலை செய்ய வேண்டும்?'**

கார் பங்களா முகப்பில் நுழைந்து நின்றது. ராஜ்குமார் முதலில் இறங்கி கவுண்டருக்கு கதவைத் திறந்து விட்டான்.

இறங்கி நடக்கிறவரின் நடையில் உயிரே இல்லை. ஹாலில் பிரவேசித்து சோபாவில் விழும்போது காத்திருந்த மாதிரி எதிரில் வந்து நின்றாள் பிரகதாம்பாள்.

கவுண்டர் அவளை கலக்கத்துடன் பார்த்தார்.

''என்ன சொன்னாரு ஜோசியரு?''

''என்னத்த சொல்வாரு... எல்லாரும் வரிசையா கைலாசம் போய்ச் சேர வேண்டியதுதான். வேற வழி இல்லையாம்.''

அவள் உடனே விசும்பி அழ ஆரம்பித்தாள்.

''அழுதா ஆச்சா... விதி பாம்பு ரூபத்துல துரத்தும் போது என்னத்த பண்ண முடியும்?''

அவரிடம் பெருமூச்சு. அருகிலேயே ஏதும் பேசாமல் மௌனமாக நின்று கொண்டிருந்தான் ராஜ்குமார்.

''அப்ப நம்ம அடுத்த மகனும் போயிடுவானா?'' - அவள் கேவியபடி கேட்டாள்.



''வரிசையா ஏழுபேர் செத்துருக்காக. மிச்சம் இருக்கறது மூணே பேர். நானும் நீயும் அதுல அடக்கம். நம்ம பய நாகராஜன் மூணாமவன். கூட்டிக் கழிச்சா நாமளும் போய்ச் சேர வேண்டியதுதான்... வேற வழி தெரியல.''

சொன்னபடி ஹாலின் ஒரு பக்கத்தை பார்த்தார். தென்பகுதி முழுக்க படங்கள் அவ்வளவும் திருப்பதிசாமிக் கவுண்டரின் வம்சாவளியினர் படங்கள்.

அப்பா தீர்த்தமலைக் கவுண்டர், அம்மா மகாலட்சுமி, அண்ணன் பெரியசாமிக் கவுண்டன், அவன் மனைவி தெய்வ நாயகி, அவன் மகன் மகேஸ்வரன், மகள் செல்வி அடுத்து பதினைந்து நாட்களுக்கு முன் செத்துப் போன அவரது மூத்த மகன் அவினாசிலிங்கம் - என்று வரிசையாக ஏழு பேரின் படங்கள். ஏழு பேரையும் பாம்புதான் கடித்துக் கொன்றிருந்தது.

எல்லாத்துக்கும் காரணம், அன்று தீர்த்தமலைக் கவுண்டர் இடும்பன் காட்டில் நடத்திய வேட்டைதான் என்று பேசிக் கொண்டார்கள்.

தீர்த்தமலைக் கவுண்டர் கொன்ற பாம்புகளில் ஒன்று இச்சாதாரி வகையை சேர்ந்த நாகமாம். நினைத்த வடிவத்தை எடுக்கும் வல்லமையை உடையதாம் அது.

அதுதான் வந்து கொல்வதாகச் சொன்னார்கள்.

கூட்டிக் கழித்துப் பார்த்தபோது அதை உண்மை என்று கூற வேண்டும். எப்படி?

## 5

**''இருந்தாலும் அவனிடம் கேள்வி கேட்டவர் ஒன்றும் குருடு இல்லை. ஒருவேளை தன்னைப் போல வடிவம் எடுத்துச் சென்ற அந்த இச்சாதாரி நாகம்தான் திருப்பதி சாமிக் கவுண்டர் வீட்டில் போய் வேலைக்குச் சேர்ந்ததோ? கவுண்டர் குடும்பத்துக்கும் பாம்புகளுக்கும்தான் என்றும் ஒத்தே வந்ததில்லையே!''**

அவினாசிலிங்கத்துக்கு முப்பது வயதென்றால் ஒருவரும் நம்ப மாட்டார்கள். பார்க்க இருபது வயசு இளைஞனைப் போல இருப்பான். திருப்பதிசாமிக் கவுண்டரின் மூத்த மகன். பார்க்க பவ்யமாக லட்சணத்தோடும் இருந்தவன். வீடு விட்டால் ஆபீஸ். ஆபீஸ் விட்டால் வீடு என்றே வாழ்ந்து பழகி விட்டவன். அது ஒரு நிர்பந்தமும் கூட. திருப்பதிசாமிக் கவுண்டர் ஷிப்ட் முறையில் அவனுக்கும் நாகராஜனுக்கும் எஸ்கார்ட்டுகளைக் கூட போட்டிருந்தார்.

பிரதமரின் அந்தரங்கக் காவலன் கூட கொஞ்சம் அப்படி இப்படி ஓய்வெடுக்கப் போவான். ஆனால் இவர்கள் அவினாசிலிங்கத்தையும் சரி, நாகராஜனையும் சரி, பிரியவே மாட்டார்கள்.

அதே போலத்தான் திருப்பதிசாமிக் கவுண்டரையும் விட்டு ராஜ்குமார் பிரியாமல் இருந்தான்.

கவுண்டர் மனைவி பிரகதாம்பாள் என்ன பாவம் செய்தாள்?

அவளுக்கும் காவலுக்கு சகாக்கள்.

ஒரு வகையில் இப்படி டாய்லெட், பாத்ரூம் போகக் கூட சுதந்திரமில்லாதபடி எஸ்கார்டுகளுடன் அலைவது என்பது இந்த நான்கு பேருக்குமே பெரிய அவஸ்தையாகத்தான் இருந்தது.

அவினாசிலிங்கத்துக்கு அது பெரிய அவஸ்தையாகவே இருந்தது. தன்னுடன் கூடவே திரிந்த இருளர் இனத்தைச் சேர்ந்த இளங்கோ என்பவனைப் பார்த்து ஒரு நாள் ''நீ வீட்டுக்கு போகலாம் - போய்விட்டு பத்து நாள் கழித்து வா...'' என்று அனுப்பி விட்டான். அவன் சொன்னவுடன் ஒன்றும் இளங்கோ போய் விடவில்லை.

செல்ஃபோனில் திருப்பதிசாமி கவுண்டரைப் பிடித்து ''ஐயா... சின்ன முதலாளி... நான் கூடவே இருக்கறதை பெரிய உபத்ரவமா நினைக்கறாங்க. எனக்கு ஒரு வாரம் லீவு



கொடுத்து வீட்டுக்கு போங்கறாரு. நானு போலாங்களா.'' - என்று கேட்டான்.

கவுண்டர் கட்டி ஏறிவிட்டார். 'அவனை விட்டு நீ அசையக் கூடாது' என்று உத்தரவு போட்டு விட்டார்.

அவினாசிலிங்கத்துக்கு கோபம் புடைத்துக் கொண்டு வந்தது.

ஆபீசிலிருந்து வீட்டுக்கு வந்தவன் கவுண்டரைப் பார்த்துக் கத்தினான்.

''அப்பா... என்னப்பா இது - இப்படி எப்பப்பார் எஸ்கார்டோட அலையறது பெரிய இம்சையா இருக்குதுப்பா. அதுக்கு பாம்பு கடிச்சு செத்துப் போறது ஆயிரம் மடங்கு மேலா தெரியுதுப்பா.'' என்று புலம்பினான்.

''என்னப்பா பண்றது... நாம வாங்கிட்டு வந்த வரம் அப்படி.'' - என்று பெருமூச்சு வீட்டார் கவுண்டர்.

''எல்லாம் வெறும் கற்பனைப்பா. நம்ம பெரியப்பா பெரியம்மா அவங்க பசங்களை எல்லாமும் பாம்பு கடிச்சிச்சின்னா, அதுக்கு பின்னால வேற எதோ காரணம் இருக்கணும். அதுக்குக் காரணம் நம்ம தாத்தா வேட்டையாடினதுதான்னா யாராச்சும் நம்புவாங்களா? இச்சாதாரி நாகமாம் - அது குடும்பத்தையே பழிவாங்க வருதாம். எனக்கு நம்பிக்கை இல்லப்பா...''

''சரி ஒருத்தருக்கு ஆறு பேர் நம்ம பரம்பரைல பாம்பு கடிச்சே செத்துப் போயிருக்காங்க. இதை நீ வேற எப்படி நினைக்கறே?''

''நம்ப விரோதிங்க யாரோ பாம்பு மேல பழியை போட்டு இப்படிச் செய்யலாமில்லையா?''

''குடும்பத்தையே வேரறுக்கற அளவுக்கு நமக்கு விரோதிங்களா? இல்லடா கண்ணு. உன் தாத்தா மிருகங்கள வேட்டையாடுவாரு. மனுஷங்களை வேட்டையாடினதில்ல. அப்படியே யாரையாவது வேட்டையாடியிருந்தாலும் பாதிக்கப்பட்டவங்க பல வருஷம் காத்திருந்து நம்மளை

எல்லாம் கொல்லனும்கற அவசியம் இல்லை. அவ்வளவு வெறி இருக்கறவங்களுக்கு ஒரே ஒரு குண்டு போதும். இந்த வீட்ல அதை வெச்சிருந்தா நாம எல்லாரும் ஒரே நாள்ல ஒரு நிமிஷத்துல கரியாயிருப்போம்.

யோசிச்சுப்பாரு...

உங்க தாத்தா இடும்பங்காட்டுல அந்த பாம்பை சுட்டது 1968-ம் வருஷம். இப்ப இரண்டாயிரம் நடக்குது. இடையில முப்பத்திரண்டு வருஷம் ஓடிப் போச்சு.

அப்பல்லாம் நீயோ, உன் தம்பியோ பொறக்கக்கூட இல்லை. குடும்பத்தை ஒருத்தன் அழிக்க நினைச்சிருந்தா எங்களுக்கு கல்யாணம் ஆக விட்டு நீங்கள்லாம் பொறந்து பெரிய ஆளாகிற வரைக்கும் வேடிக்கையா பாத்து கிட்டிருப்பான்...?''

திருப்பதிசாமி கவுண்டரின் கேள்வியிலும் நிறைய லாஜிக் இருந்தது.

''சரிப்பா இதே கேள்வியை நான் திருப்பி கேட்கிறேன். அந்தப் பாம்பு அப்ப முப்பத்திரண்டு வருஷமா உசுரோட இருந்துகிட்டு நம்மளை தீர்த்துக் கட்டிக்கிட்டு வருதா... தாத்தாவை அப்பவே தீர்த்துக் கட்டிட்ட அதுக்கு, நம்மளை கொல்றதுக்கு இத்தனை வருஷம் தேவையா?''

''நல்ல கேள்வி... ஆனா உன் தாத்தா சாவுதான் நம்மளை எல்லாம் முழிச்சிக்க வெச்சுடுச்சே? ரட்சை, தாயத்து, பூசை, புனஸ்காரம்னு நாம எவ்வளவு பண்ணிகிட்டு வரோம்?''

''அதெல்லாம் தான்பா நம்மளை இது வரையிலும் காப்பாத்திகிட்டு வருது...''

''என்னப்பா நீங்க.. எல்லா கேள்விக்கும் ஒரு பதில் வெச்சிருக்கீங்க. வெளிய எல்லாரும் சிரிக்கிறாங்க.''

''எருது வருத்தம் காக்காய்களுக்குத் தெரியுமா? அதெல்லாம் பார்த்தா நாம வாழ முடியாதுப்பா.''



''இல்லப்பா.. இப்படி எப்பப் பார் காவலோட வாழறதவிட செத்துடலாம். இதோ பாருங்கப்பா நான் பிஸ்டல் வெச்சிருக்கேன். இதோட தான் ஆபீசுக்கு போறேன். வரேன். இங்கல்லாம் பாம்பு இருக்க வாய்ப்பே இல்லை. வேணும்னா காட்டுப் பக்கம், புதர்ப்பக்கம், பச்சையா புல்வெளி பக்கம், அவ்வளவு ஏன்? ஒரு மரத்துகிட்ட கூட நான் போகாம இருந்துக்கறேன். எனக்கு இந்த எஸ்கார்ட்டெல்லாம் வேண்டாம். சொன்னா கேளுங்க...''

அவினாசிலிங்கம் கெஞ்சினான். திருப்பதிசாமி கவுண்டர் அவன் சொன்னதை எல்லாம் அசை போடத் துவங்கினார்.

''என்னப்பா யோசிக்கிறீங்க. நம்ம பெரியப்பா, பெரியம்மா அப்புறம் அவங்க மகன், மகள் இறந்து கூட அஞ்சாறு வருஷம் ஆச்சு. இந்த அஞ்சாறு வருஷத்துல நம்மள கடிக்க வராத பாம்பு இனிமேதானா வரப் போகுது...?'' அவினாசிலிங்கம் திருப்பதிசாமிக் கவுண்டரை விடுவதாக இல்லை. கவுண்டரும் சரி என்ற அரை மனதாக அவனுக்கான எஸ்கார்டுகளை விலக்கி விட்டார்.

''பார்த்து... நானும் சரி, உங்கம்மாவும் சரி, ரொம்ப எச்சரிக்கையா இருக்கோம். வீட்டைச் சுத்தி ஒரு மரம் கிடையாது. சதா காவல்தான். அந்த காலத்துல பரீட்சித்துங்கற ராஜாதான் இப்படி எல்லாம் இருந்ததா சொல்வாங்க. அப்படியும் பூ நாகம் கடிச்சு அவன் இறந்துட்டதா புராணம் சொல்லுது. ஆகையால உங்கம்மா தலைக்குக் கூட பூ வெச்சுக்கறதேயில்லை. நாங்க இப்படி இருக்கோம். எல்லாம் நீங்க நல்லா இருக்கணும்கறதுக் காகத்தான். புரிஞ்சுகிட்டு நடந்துக்கோ.''

திருப்பதிசாமி கவுண்டர் ஒரு நீண்ட விளக்கத்தோடு அவனுக்கு விலக்களித்தார். அவினாசிலிங்கம் அப்பாடா என்று பெருமூச்சு விட்டான்.

இந்த பாம்புச் சாவு பயத்தால் கல்யாணம் செய்து வைப்பது பற்றி நினைக்கவே முடியவில்லை. நினைத்தாலும் பயனில்லை.

பெண் கொடுக்க யாரும் தயாரில்லை.

இருந்தும் அவினாசிலிங்கத்தை ஒரு பெண் காதலித்தாள். அவனது ஸ்டேனோவாக வேலைக்குச் சேர்ந்தவள் அவனிடம் மயங்கி விட்டாள். எல்லாம் விதி!

அவினாசிலிங்கமும் அவளைக் காதலித்தான்.

மனோரஞ்சிதம் என்கிற பூவின் பெயர் அவளுக்கு. அவளிடம் கூட அவன் தன் குடும்பத்தவர்கள் பாம்பு கடித்து செத்துப் போன விஷயத்தை சொல்லியிருந்தான். அவன் சொல்வதற்கு முன்பே அவளுக்கும் தெரிந்திருந்தது. கவுண்டர் குடும்பத்துக்கே பாம்புன்னா அலர்ஜி என்பதுதான் ஊரறிந்த ரகசியமாயிற்றே? இருந்தும் அவன் எதையும் பூசி மெழுகாமல் மனோரஞ்சிதத்திடம் எல்லாவற்றையும் சொல்லி ''என்னையும் பாம்பு கடித்து விட்டால் என்ன செய்வாய்?'' என்று ஒரு நாள் கேட்டான்.

அவள் அழுதே விட்டாள்.

''அப்படி மட்டும் நடந்தால் அந்த பாம்பை நான் சும்மா விடமாட்டேன். அதை அடித்துக் கொன்றுவிட்டு நானும் தற்கொலை செய்து கொண்டு விடுவேன்.'' என்று சொல்லி தன் காதலைக் காட்டினாள்.

அதைக் கேட்டு புல்லரித்துப் போனான் அவினாசி லிங்கம். அப்படியே அவளை கட்டிக் கொண்டான்.

அதன் பின் பேச்சு கல்யாணம் பற்றி போனது, ''நீங்க என்னை விரும்பறத உங்கப்பா ஒத்துப்பாரா?''

''நிச்சயமா ஒத்துப்பாரு. அவருக்கு என் சந்தோஷம்தான் முக்கியம்.''

''அப்ப சீக்கிரமா கல்யாணத்துக்கு ஏற்பாடு பண்ணுங்க.''



''ஏன் மனோ இவ்வளவு அவசரப்படறே?''

''அவசரப்படறது கல்யாணத்துக்காக இல்ல, உங்க கூடவே காவலா இருக்க...''

''போச்சுடா... நான் இப்பதான் கொஞ்சம் சுதந்திரமா ஃபீல் பண்றேன். பள்ளிக்கூடம், காலேஜ்னு எங்கே போனாலும், ஒரு வேலைக்காரன் கூட வந்திடுவான். இப்பதான் ஃப்ரியா ஃபீல் பண்றேன். கொஞ்ச நாள் சுதந்திரமா இருக்கேனே...''

அவள் அவனை ஒரு மாதிரிப் பார்த்தாள்.

''சரி எவ்வளவு நாளைக்கு இப்படி சுதந்திரமா இருந்துட முடியும் சொல்லுங்க பார்ப்போம்.'' திருப்பிக் கேட்டாள்.

''என்ன என் சுதந்திரத்துக்கு கெடு உண்டா என்ன? நான் சாகற வரை சுதந்திரமா இருக்க விரும்பறேன் மனோ.'' என்று அவன் திரும்ப அவளைக் கட்டிக் கொண்டான்.

''கவலையே படாதீங்க. நான் உங்களை கண்ணப் போல பாத்துப்பேன். முதல்ல கல்யாணத்துக்கு ஏற்பாடு செய்யுங்க.'' என்றாள்.

அதே போல் அவினாசிலிங்கம் தன் காதலை திருப்பதி சாமிக் கவுண்டரிடம் கூறினான். அவர் பதிலுக்கு எதுவும் சொல்லவில்லை. மௌனமாக நின்றார்.

''என்னப்பா உங்களுக்கு இஷ்டமில்லையா?''

''அப்படி இல்லப்பா...அந்தப் பொண்ணுக்கு உன் மேல காதல். அதனால் உன்ன கட்டிக்க சம்மதிச்சிடுச்சு. ஆனா அவங்க குடும்பத்துல என்ன சொல்வாங்கன்னு விசாரிச்சியா?''

''அவங்க என்ன சொன்னாலும் அவ தன் முடிவை மாத்திக்க தயாரில்லப்பா...''

''இருந்தாலும் நான் அவங்க பேரனுட்ஸ்கிட்ட பேச விரும்பறேன். முறைப்படி நிச்சயதார்த்தம் பண்ணி கல்யாணத்துக்கு ஏற்ப்பாடு பண்றதுதான் நமக்கு மரியாதை.''

''சரிப்பா... அப்படியே செய்யுங்க. நானும் மனோ ரஞ்சிதத்துக்கிட்ட சொல்லிட்றேன்.''

அப்பாவும் பிள்ளையும் பேசிக் கொண்டதைத் தொடர்ந்து ஒரு நல்ல நாளில் நிச்சயதார்த்தம் ஏற்பாடானது.

மனோரஞ்சிதத்தின் அப்பாவும், அம்மாவும் பெரிய கோடீஸ்வர சம்மந்தம் என்று பணத்தாசையில் சம்மதித்தனர்.

அதே சமயம் அவினாசிலிங்கத்திடம் கேசவன் என்று புதியதாக ஒரு டிரைவர் வந்து சேர்ந்தான். பாம்பு பிடிக்கும் இருளர் இனத்தை சேர்ந்தவன் என்கிற தகுதி அவனுக்கு வேலையை வாங்கித் தந்தது.

நிச்சயதார்த்தத்துக்கு அவன்தான் காரை ஓட்டி வந்தான். நிச்சயம் முடியவும் திரும்பவும் அழைத்துச் சென்றான்.

ஒரு வாரம் கழிந்திருக்கும்.

கார் போர்டிகோவில் நின்று கொண்டிருந்தது.

வீட்டினுள் அவினாசிலிங்கத்தைக் காண முடியவில்லை. பல இடங்களிலும் தேடி விட்டு காரிலும் எட்டிப் பார்த்த போது இதயமே வெடித்து விட்டது திருப்பதிசாமிக் கவுண்டருக்கு.

பின் சீட்டில் நீலம் பாரிக்க சவமாகக் கிடந்தான், அவினாசிலிங்கம்.

டிரைவிங் சீட்டில் ஸ்டியரிங் மேல் ஒரு பாம்பின் தோல் உரிந்த சட்டை மாலை போல இருந்தது.

ஐய்யோ... பார்த்துப் பார்த்து எச்சரிக்கையாக இருந்தும் இப்படி நடந்து விட்டதே.

எங்கிருந்து வந்தது பாம்பு...?

அந்த டிரைவர் கேசவன் எங்கே போனான்?

கேள்வி மேல் கேள்வி.

பதில்தான் கிடைக்கவேயில்லை.



திருப்பதிசாமிக் கவுண்டர் மிச்சம் இருக்கும் ஒரே மகனான நாகராஜனையாவது எப்படியும் காப்பாற்றிக் கொண்டு விட தீர்மானித்தார்.

மலையாள ஜோதிடர் ஒருவரைப் போய் பார்த்து கதறி அழுதார். அவர் இச்சாதாரி நாகம்தான் டிரைவர் கேசவன் ரூபத்தில் வந்தது என்று சொன்னார். அப்படியே இதிலிருந்து தப்பிக்க ஒரு வழியும் இருப்பதாகச் சொன்னார்.

''என்ன வழி ஜோதிடரே?''

''நாகமாணிக்க மோதிரம் செய்து போட்டுக்குங்க. அந்த இச்சாதாரி கிட்ட நெருங்காது.'' என்றார்.

''நாக மாணிக்க மோதிரமா.. அதுக்கு எங்க போக?''

''கவலைப்படாதீங்க வடகரை வைத்யர் மாசிலா மணியைப் போய் பாருங்க. அவர் பார்த்துக்குவார் கொஞ்சம் செலவாகும்.'' என்றார்.

''சொத்தே போனாலும் சரி... என் மகனும் நாங்களும் உயிரோட இருந்தாப் போதும்..''

''அப்ப போங்க... போய் வடகரைப் வைத்யரை பாருங்க.''

''பார்க்கறோம்... இந்த மாதிரி நடந்துகிட்டா இச்சாதாரிகிட்ட இருந்து தப்பிச்சுடுவோமா?''

''அது உங்களுக்கு மாணிக்கம் கிடைக்கறத பொறுத்தது. வைத்யருக்குத் தான் பாம்பும் விஷம் சேகரிச்சு பழக்கம். பாம்பு பிடிக்கறவங்களும் பழக்கம். இனி உங்க வாழ்க்கை நாக மாணிக்கம் கிடைக்கறதுல தான் இருக்கு...''

ஜோதிடர் வழி காட்டி விட்டார். திருப்பதிசாமிக் கவுண்டரும் போய் வைத்யரைப் பார்த்தார். வைத்யர் நாக மாணிக்கத்துக்காக வண்ணமுத்துவை தேர்ந்தெடுத்தார்.

அதற்கு அவருக்குத் தேவை ஒரு கருநாகம். கருநாகத்துக்கும், மாணிக்கத்துக்கும் என்ன சம்மந்தம்?

போகப் போக தெரியுமோ?

# 6

**'தன்னை திருப்பதிசாமிக் கவுண்டர் வீட்டில் பார்த்ததாக சொன்ன நபரை பார்த்திபன் சந்தித்து நீங்கள் என்னை எங்கே எப்பொழுது பார்த்தீர்கள்? எப்படிப் பார்த்தீர்கள்? என்று கேட்டபோது அவர் மிரண்டு போனார். ''தம்பி உன்னை கவுண்டர் வலைவீசித் தேடிக் கொண்டிருக்கிறார். நீ இங்கே என்னிடம் கேள்வி கேட்டுக் கொண்டிருக்கிறாயே?'' என்று திருப்பிக் கேட்டார்.**

பௌர்ணமி வெளிச்சம் தரைமேல் பிரண்டு கொண்டிருந்தது. பொள்ளாச்சி மலை வனப்பகுதிகள் நிலாவின் ஒளியை பாலைப் போல நினைத்துப் பருகிக் கொண்டிருந்தன.

இப்படி உள்ள நாள் தான் பாம்புகள் இறைதேடி வெளியே வரும் நாள்.

'அவை எப்படி வரும்? எந்தப் பக்கமாக ஊர்ந்து செல்லும் என்பதெல்லாம் இருளர்களுக்கு பால பாடம்.

லேசாய் மழை பெய்திருந்தால் தரை மேல் ஈரம் சொத சொதப்பு இருக்கும். அதில் அதன் ஊர்ந்த தடம் ஒரு வளை கோடு போல பதிவாகியிருக்கும்.

அது தன் இருப்பிடத்தை விட்டு போன தடமா இல்லை வந்த தடமா என்பதை மண்ணின் சல்லிகள் பிரண்டு ஓரம் கட்டி நிற்பதை வைத்தே சொல்லி விடுவார்கள்.

வண்ணமுத்துவுக்கு பாம்பு பிடிக்கும் பயிற்சி ஐந்து வயதிலேயே ஆரம்பமாகிவிட்டது. கழுத்திலும் கையிலும் வாட்ச் கட்டும் இடத்திலும் நாகதாளி வேரை ஒரு கங்கணக் கயிறு போல கட்டிக் கொண்டு காலிலும் கொலுசு போல அதைக் கட்டி விட்டு, காட்டுக்குத் தன் அப்பன் வீர நாச்சியப்பன் அழைத்துச் சென்றதை வண்ணமுத்து நினைத்துப் பார்க்கிறான்.



தோள் மேல் ஒரு சாக்குப்பை. சாதாரணமாக ஒரு கூட்டமாகத்தான் போவார்கள். அந்த கூட்டத்தில் வளையாபதிக் கிழவன் என்று ஒருவனும் இருந்தான்.

அவனுக்கு தொண்ணூறு வயசு. அனேகமாக இந்தியா விலேயே அதிக பாம்புக்கடி பட்டவன் அவனாகத்தான் இருப்பான். அதிகம் பாம்புகளைப் பிடித்தவனும் அவனாகத்தான் இருப்பான்.

பாம்பு விஷம் பெரும்பாலும் அவர்களை எதுவும் செய்யாது. முறி மருந்து குப்பிகள் பையிலேயே இருக்கும். கடித்த நொடி அதை வாயில் போட்டு மென்று முழுங்கினால் விஷம் முறிந்து விடும்.

அப்படியும் ஒரு கார்கோடக நாகம் வளையாபதிக் கிழவனைக் கடித்து விட்டது. கார்கோடகப் பாம்பின் விஷம் சயனைடுக்கு சவால் விடக்கூடியது. ரத்தத்தில் ஒரு மைப் பொட்டு அளவு இறங்கினாலும் போதும். மொத்த ரத்தமும் திரிந்து போன பாலைப் போல விஷமாகி உடம்பு நெறி கட்டிக் கொண்டு விடும்.

அப்படித்தான் வளையாபதிக் கிழவனுக்கும் ஆயிற்று. வயதான உடம்பு வேறு. கிழவனை அன்று காப்பாற்ற முடியவில்லை. கிழவனும் தான் சாகப் போவது உறுதி என்று உணர்ந்தவனாக தன்னைக் கடித்த கார்கோடக நாகத்தை தாவிப் பிடித்து அதன் தலையைக் கடித்துத் துப்பி விட்டுத்தான் உயிரையும் விட்டிருந்தான். அவனை பிணமாகப் பார்த்த போது ஏழடி நீளத்துக்கு தலையில்லாத கார்கோடகன் அவன் உடம்பின் மேல் மாலை போல கிடந்தது. வாய்க்கரிசி போடு வதற்காக வாயைத் திறந்த போதுதான்... வாயின் உள்ளே அந்த பாம்பின் தலைப் பாகம் மட்டும் இருப்பது தெரிந்தது.

இருளர்கள் வாழ்க்கை பாம்களால்தான் நடக்கிறது. அவைகளாலேயே முடிவுக்கும் வந்து விடுகிறது.

வண்ணமுத்து காட்டுப் பக்கம் போகும் போதெல்லாம் அதை நினைத்துக் கொள்வான். அவன் சகாக்கள்

இப்பொழுது பாம்பு பிடிப்பதை விட்டு விட்டார்கள். கூலி வேலைக்கெல்லாம் போகத் தொடங்கி விட்டார்கள்.

வண்ணமுத்துவும் கூலி வேலைக்குத்தான் போனான். ஆனால் வடகரை வைத்தியர்தான் அவனைத் தடுத்து, "பைத்தியக்காரா! ஒரு மாணிக்க நாகத்தைப் பிடித்துக் கொடுத்து பல ஆயிரங்களைப் பார்ப்பதை விட்டு விட்டு கூலி வேலைக்குப் போகிறாயே!" என்று ஆசை காட்டினார்.

"மாணிக்க நாகம் நிஜமாலுமே இருக்கா சாமி?" என்று எதிர்க் கேள்வி கேட்டான் வண்ணமுத்து.

அவனறிய அவன் சாதியில் ஒருவர் கூட மாணிக்க நாகம் என்கிற ஒன்றைப் பார்த்தே அறியாதவர்கள்.

அப்படி எல்லாம் ஒன்று கிடையவே கிடையாது என்று சொன்னார்கள்.

"அப்படியானால் நாகரத்தினக்கல் என்று ஒன்று எப்படி கிடைக்கிறது... எங்கிருந்து வந்தது அது?" என்ற வைத்தியர் திருப்பிக் கேட்டார்.

அவரை நாக ரத்தினக்கல் பற்றி சித்தர் ஒருவர் எழுதிய ஓலைச் சுவடி குறிப்பு ஒன்றையும் அவனுக்குக் காட்டினார்.

அது அறுபது வருஷத்துக்கும் மேல் யாரையும் கடிக்காமல், பச்சைத் தவளைகளை மட்டும் உண்டு வாழும் பாம்புகளின் விஷம் கட்டிப் போய், கல்லாகி அதுதான் நாகரத்தினமாகிவிடுகிறது என்றது!

வண்ணமுத்து அதைக் கேட்டு ஆச்சரியப்பட்டான்.

"எப்படி சாமி ஒரு பாம்பு யாரையும் கடிக்காம கொள்ளாம தன் வாழ்நாள்ல இருக்க முடியும்...? கீரி மாதிரி தன் இனத்து எதிரிங்க தாக்க வரும் போது அது கடிக்கத் தானே செய்யும். அப்ப அதோட விஷம் கீரி உடம்புலையும் இறங்கிடுமே...? மனுஷங்கள வேணும்னா கடிக்காம பாம்புங்க காட்டுப் பக்கம் இருக்கலாம். ஆனா கீரி, கருடன், மர நாய்களை கடிக்காம ஒரு பாம்பு தன் வாழ் நாள்ல உயிரோட இருக்க முடியுமா?" என்று திருப்பிக் கேட்டான்.



"ஆயிரம் பாம்புகளில் ஒன்றிரண்டுக்கு அப்படி ஒரு அமைப்பு ஏற்படும். அவைகளை தேடிப் பிடித்தால் நாகரத்தினம் நிச்சயம் அதன் தலைப் பாகத்தில் இருக்கும்." என்றார் வடகரை வைத்தியர்.

"அப்படிப்பட்ட பாம்புகள், உடம்பு பருத்து, ஒரு அடியிலிருந்து ஒண்ணரை அடி நீளம் சுருங்கி விடும்." என்றார்.

"இந்த மாதிரி பாம்புகள், பெரும்பாலும் பச்சைத் தவளைகள் அதிகம் வசிக்கும். சுனைப் பக்கத்தில் அடர்ந்த சீரகச் செடி புதர்களில் இருக்கும். இந்தச் செடியின் முட்கள் காரணமாக இதனை எந்த மிருகமும் நெருங்காது. அதில் முள் படாதபடி உள்ளே அவை ஒளிந்து வாழும்." என்று மாணிக்க நாகங்களுக்கு ஒரு வரலாறே சொன்னார் வைத்தியர்.

அதிலிருந்து காட்டுப் பக்கம் வந்தால், சீரகச் செடிப் புதர்களை இமைக்காமல் நோட்டம் விடுவான் வண்ணமுத்து. அப்படியே மருந்துக்கு என்று அவர் பிடித்து வரச் சொல்லும் பாம்புகளையும் பிடித்துக் கொண்டு போய் கொடுப்பான்.

அப்படிப்பட்ட வண்ணமுத்துவிடம் இன்று வைத்தியர் கருநாகத்தைப் பிடித்து வரச் சொன்னதுதான் ஏன்? என்று தெரியவில்லை.

கருநாகம் அபூர்வமாக கண்ணில் பட்டால்தான் உண்டு. மனிதர்களில் பிறவியிலேயே தோல் கோளாறோடு தலை முதல் கால்வரை வெள்ளைக்காரன் போல வெளுப்பாக சிலர் பிறந்து விடுகிற மாதிரி, கருநாகப் பாம்பும் அபூர்வமாகவே பிறந்து இனப்பெருக்கமும் செய்கிறது.

அதை எங்கே என்று போய் தேடுவது?

ஜோல்னாப் பையில் மகுடியோடும், மூங்கில் நார்ப் பெட்டியோடும் இமைக்காதபடி பார்த்துக் கொண்டு மூச்சை உறிஞ்சி வாசமும் பிடித்தபடி நடந்து கொண்டிருந்த

வண்ணமுத்துவின் எதிரில் மலைப் பளியன் ஒருவன் தலையில் பருத்த பலாக்காய் ஒன்றின் சுமையோடு தாண்டிப் போனான்.

வண்ணமுத்து அவனை தடுத்துப் பேசினான். ''எலேய் நீ பளியன்தானே?''

''ஆமுங்க சாமி...''

''இந்த காட்டுல எங்கனையாச்சும் கருநாகத்த நீ பார்த்ததுண்டா?''

''கருநாகமுங்களா...?'' -அவன் தீவிரமாக யோசிக்கத் தொடங்கினான்.

''ஆமா... என் கைல மட்டும் அது சிக்கினா சுளையா பத்தாயிரம். உனக்கும் ஆயிரம் ரூபாய் தரேன். பாத்துருக்கியா?''

''ஐய்யா ஒரு சாமி நாகம் ஒண்ணு மேல காட்டு அய்யனார் கோவில்ல இருக்குது. அதை கருநாகமுன்னு சொல்லக் கேள்வி. ஆனா நான் பார்த்ததில்லீங்க.''

''இது போதுமே...''

வண்ணமுத்து முகம் நிஜமாலுமே வண்ணமயமானது.

''ஆமா இப்ப அந்த கோவிலுக்கு எப்படிப் போகணும்?''

''அது கிடக்குங்களே கொள்ள தூரம்?''

''கொஞ்சம் வந்து வழி காட்றியா?''

''சாமி இந்தப் பலாவை அடிவாரத்துல பாரெஸ்டர் அய்யாவுக்கு தரணும். தந்துப் போட்டு வாரேனே...''

''சரி... நான் இங்கையே அதோ அந்த பாறைமேல உக்காந்திருக்கேன். சீக்கிரமா வந்துடறியா?''

''நான் வந்துடுவேன் சாமி. ஆமா அந்த பாம்பை பிடிக்கப் போறீங்களா?''

''பின்ன பூசை பண்ணவா கேக்கறேன்.''

''சாமி... அது அய்யனார் பாம்பு சாமி. அத பிடிக்கக் கூடாது. புடிச்சா கேடும்பாங்க...''



''எலேய்... மலைக்கு மலை இப்படி ஒரு கதை இருக்குதுடா. நல்லபாம்புகளையே அடிக்கக் கூடாதும் பாங்க. நான் ஆயிரம் பாம்புகளுக்கும் மேல பிடிச்சவன். எனக்கு எதுனா ஆயிடிச்சா என்ன?''

''இல்ல சாமி... நான் இதுக்கு உங்களுக்கு ஒத்தாசிக்க முடியாது சாமி. அந்தப் பாவம் எனக்கு வேணாம்.'' - பளியன் அதிகம் பயத்தைக் காட்டினான். அப்படியே பலாக்காய் பாரத்தோடு நழுவத் தொடங்கினான்.

வண்ணமுத்துவுக்குக் கோபம் வந்தது.

அதே சமயம் 'எப்படியோ ஒரு கருநாகம் கோவிலை ஒட்டிச் சுற்றிக் கொண்டிருக்கும் தகவல் கிடைத்ததே! அது போதும்.' என்று தோன்றியது.

தானே தேடிச் செல்ல வேண்டியதுதான்.

தீர்மானத்தோடு கிளம்பக் காலெடுத்தவனுக்கு சற்று தாகமாய் இருந்தது.

பக்கத்திலேயே மலையருவிச் சுனை ஒன்று இருப்பது ஞாபகத்துக்கு வர அந்தப் பக்கமாகப் போனான்.

வெள்ளித் தட்டாட்டம் நிலா வானில் இருந்தபடி பார்த்துக் கொண்டிருந்தது.

காட்டின் வழித்தடங்களிலும் பளிச் சென்ற தெளிவு.

இதமாக போதுமான குளிர்ச்சியோடு வீசும் காற்றின் வீச்சலிலும் நல்ல இனிமை.

தண்ணீரிடம் சலசலவென்ற தாளம் கொண்ட ஓட்டம். குனிந்து அந்த நீரைப் பருகினவன் காதில் அங்கும் இங்குமாய் தேங்கிய நீரில் குடும்பம் நடத்தும் தவளைகளின் சப்தமும் கேட்டது.

தண்ணீரைக் குடித்து முடித்தவன் தவளைகளின் சப்தத்தை கேட்டுவிட்டு, சட்டென்று மாணிக்க நாகப் பாம்பு பற்றிய ஞாபகத்தில் விழுந்தான்.

பக்கமாக சீரகச் செடி புதர் இருக்கிறதா என்று பார்த்தான்.

சற்று மேட்டில் இரு பாறைகளுக்கு நடுவில் ராட்சஸன் தலை போல புதர் தெரிந்தது.

ஒரு வேளை அந்தப் புதரில் மாணிக்க நாகம் இருக்குமோ?

மெல்ல கிட்டே சென்றான். மகுடியை எடுத்து ஊதித்தான் பார்ப்போமே என்று ஊதத் தொடங்கினான்.

அந்த இரவுப் பொழுதில் அந்த வனாந்தரத்தில் அவன் தனக்குத் தெரிந்த புன்னாகவரளியை மகுடியில் வாசிக்க முதலில் எந்த விதமான சலனங்களும் இல்லை.

ஆனால் ஐந்து நிமிடக் கழிவில் சீரகச் செடி புதரிடம் அசைவு.

''ஐய்யோ... மாணிக்க நாகம் இருக்கிறதா?'' பரவசம் வண்ணமுத்துவை தொற்றிக் கொள்கிறது. துணிப்பை தோளை விட்டு இறங்குகிறது. தயாராக மூங்கில் தட்டுப் பெட்டியையும் எடுத்து வெளியே திறந்து வைத்துக் கொள்கிறான்.

அவ்வளவையும் இடைவிடாதபடி ஊதிக் கொண்டே செய்கிறான்.

பார்வை சீரகச் செடி புதர் மேலேயே இருந்தது. அதே வேளையில் அந்த பிராந்தியத்தில் எங்கெல்லாம் பாம்புகள் இருந்தனவோ அவ்வளவும் வெளியேறி அவனைச் சுற்றி வந்து படம் எடுக்கத் தொடங்கிவிட்டன.

ஒன்று

இரண்டு

மூன்று

நான்கு என்று திசைக்கு திசை, பாறைக்குப் பாறை பாம்புகள்தான். அதன் நிமிர்ந்து நேரெழுந்த தோற்றம்தான்...



சப்தம் தவளைகளின் வாயைக் கட்டி விட்டது போல. அவைகளிடமிருந்து எந்த சப்தமும் இல்லை. சீரகச் செடிப் புதரிலிருந்து மெல்ல வெளிப்பட்ட நாகத்தைப் பார்த்தவனுக்கு பிரமிப்பில் மூச்சு முட்டியது.

புடலங்காய் போல ஒரு வித ஒழுங்கில்லாத பருமன் - அதே சமயம் வடகரை வைத்தியர் சொன்னதுபோல் ஒண்ணரை அடிதான் நீளம். தரைக்கு ஒரு சாணுக்கு மேல் எழும்பிப் படம் எடுக்க முடியாத தள்ளாமை அதனிடம் நன்றாகவேத் தெரிந்தது.

இதேதான். இந்த பாம்புதான் வைத்தியர் சொன்ன நாகம்...

இன்று தனக்கு சரியான வேட்டைதான்.

உற்சாகமாக நாகதாளி வேரை அதன் முன் நீட்டியபடி அதை நெருங்கினான். அது புழுப் போல சுருண்டு கொண்டு புதரில் அடங்கப் பார்த்தது.

வேரை விட்டு விட்டு அதுதான் சாக்கு என்று அதன் கழுத்தருகே லபக் என்று பிடி போட்டான்.

அதற்கு சீறக் கூட சக்தியில்லையா, இல்லை, முடிய வில்லையா என்பது தெரியவில்லை, நல்ல கனம் கனத்தது.

அதை தொட்டுத் தூக்கியவன் சட்டென்று பெட்டியில் போட்டு மூடினான். அப்பொழுதுதான் சுற்றிலும் பார்த்தான். அங்கங்கே அவனது தொழில் எதிரிகள். அவன் மகுடியை நிறுத்தியதுதான் சாக்கு என்று சில நாகங்கள் அவனைத் துரத்துவது போல நெருங்கி வரத் தொடங்கின.

அதில் அந்த கருநாகமும் இருந்ததுதான் அதிசயம்.

வினாடியும் தாமதிக்காமல் மகுடியை திரும்ப வாயில் செருகியவன் வாசிக்க ஆரம்பித்தான். சீறி வந்த நாகங்கள் யாரோ பிடித்து நிறுத்தியதைப் போல நின்றன.

கருநாகமும் நின்றது. தரை மேல் ஒண்ணரை அடி உயரத்துக்கு முன்பாகத்தைத் தூக்கி படமெடுக்கவும் தொடங்கிற்று.

வேட்டை...

வேட்டை...

சரியான வேட்டை...

வண்ணமுத்து அதனிடமும் லாவகம் காட்டினான். எகிறிப் பிடித்தான்.

வாசிப்பதை மட்டும் நிறுத்தவில்லை. அது அவன் வலக் கரத்தில் கறுப்பு ரிப்பன் போல தொங்கித் தவழ தொங்கியது. மணிக்கட்டில் இருக்கும் நாகதாளி வேரின் வாசம் அதை அச்சுறுத்தியது.

அந்த வேருக்கு அப்படி என்ன தான் மகிமையோ?

கரத்தில் தொங்கிய அதையும் மூங்கில் பெட்டிக்குள் போட்டு மூடினான்.

வந்த வேலை முடிந்தது.

அய்யனார் கோவில் வரை போக வேண்டிய அவசியமே இல்லை.

மகுடியை வாசித்தபடியே பெட்டியை தூக்கிக் கொண்டவன் அங்கிருந்து நழுவத் தொடங்கினான்.

பௌர்ணமி சந்திரன் சாட்சிக்காரன் போல பார்த்துக் கொண்டிருந்தது.

## 7

**'திருப்பதிசாமி கவுண்டர் வீட்டுக்கு பார்த்திபன் போனபோது கவுண்டரின் இளையமகன் நாகராஜன் அவனை எகிறிப் பிடித்தான். ''டேய்... எங்கடா ஓடிப் போயிட்டே? எங்கண்ணனை பாம்பு எப்படி கடிச்சிச்சு. நீ அப்ப என்ன பண்ணிக்கிட்டிருந்தே? உண்மையைச் சொல்லு...'' என்று சப்தம் போட்டான். பார்த்திபன் ''அது நானே இல்லை. நான் பிடித்த இச்சாதாரி பாம்பு தான் அது.'' என்கிற உண்மையை பார்த்திபன் சொல்லவும், அவர்கள் அதை நம்பாதது போல அவனை முறைத்துப் பார்த்தனர்'**



மூங்கில் பெட்டியோடு அந்த அர்த்த ராத்திரியில் வடகரை வைத்தியர் வீட்டுக்கு வண்ணமுத்து வந்து சேர்ந்த போது மணி சரியாக ஒன்று.

வாயில் கொட்டாவி பிரிய எழுந்து வந்தார் வைத்தியர்.

''என்னய்யா... எதுக்கு இப்படி ராத்திரில வந்து தொந்தரவு பண்றே?''

''சாமி... நீங்க கேட்ட கருநாகத்தைப் பிடிச்சிகிட்டு வந்துட்டேன். அப்படியே! மாணிக்க நாகமும் மாட்டிகிட்சு சாமி..''

வண்ணமுத்து சொன்ன மறுநொடி வைத்தியரிடமும் தூக்கம் உதறிக் கொண்டு விடுபட்டது.

''நிஜமாவா?'' என்றுதான் அடுத்த கேள்வியே கேட்டார்.

பெட்டியை கீழே வைத்தவன் மகுடியை வாசித்தபடி அதன் மூடியைத் திறந்தான்.

உள்ளிருந்து - இரண்டு நாகங்களும் படம் எடுத்தபடி நிமிர்ந்தன. அப்படியே போட்டு அமுக்கித் திரும்பவும் மூடினான்.

வைத்தியர் சிலிர்த்துப் போனார்.

''வண்ணமுத்து, நீ அதிர்ஷ்டக்கார ஆளுய்யா!'' என்றார்.

''ஆமாம் சாமி.. எனக்கே சில பாம்புகள் பத்தி சரியாத் தெரியாது. ஆனா மாணிக்க நாகம் பத்தி எனக்கு சொல்லி நானே அதை பிடிக்கும்படியும் பண்ணிட்டீங்க. நீங்க கேட்டபடி இரண்டும் இங்க இருக்குது. கருநாகத்துக்கு பத்தாயிரம் - இந்த மாணிக்க நாகத்துக்கு எவ்வளவு சாமி?''

வண்ணமுத்து நேரடியாக வியாபாரத்துக்கு வந்தான். வைத்தியரை அது நெருடியது.

அவனை இடுங்கின கண்களோடு பார்த்தார்.

''என்ன சாமி அப்படி பாக்கறீங்க?''

''இல்ல. இவ்வளவு கறாரா வியாபாரம் பேசறியே அதான் பாக்கறேன்.''

''பின்ன என்ன சாமி... எங்காளுங்க எல்லாரும் இந்த தொழிலை விட்டுட்டாங்க. நான்தான் உங்களால இதை விடாம கட்டிக்கிட்டு மாரடிச்சிகிட்டிருக்கேன். இந்த மாணிக்க நாகத்துக்கு ஒரு நல்லவிலை கிடைச்சுட்டா ஒரு டாக்ஸியோ, லாரியோ வாங்கிகிட்டு நான் பாட்டுக்கு அதை ஓட்டியே பொழைச்சுக்குவேன்.''

அவன் லட்சக் கணக்கில் எதிர்பார்ப்பதை சொல்லாமல் சொன்னான்.

''அப்ப இனி எனக்கு நீ பாம்புங்கள பிடிச்சுகிட்டு வந்து தர மாட்டேங்கறே...''

''போதும் சாமி இந்த பொழப்பு. ஆளவிடுங்க இதுக்கு ஒரு விலை சொல்லுங்க...''

''முதல்ல அது தலைல நாக ரத்தினக் கல் இருக்கான்னு பாக்கணுமே?''

''அதுக்கென்ன இப்பவே பார்த்துடுவோம். நான் நாகரத்தினம்னு கேள்விப் பட்டிருக்கேன் ஆனா பார்த்தது இல்லை. உங்களால இன்னிக்கு அதைப் பார்த்துட்றேன்.''

''அதுக்கு முந்தி ஒரு வேலை இருக்கு உனக்கு...''

''என்ன சாமி?''

''அந்த கருநாகம் என்கிட்ட இருக்கற ஒரு தவளையை விழுங்கணும். அதுக்கு வழி பண்ணு...''

''அதுக்கு இப்ப இருக்கற கோவத்துக்கும் பசிக்கும் ஒரு தவளை இல்லை ஒன்பது தவளையை விழுங்கும். ஆமா எதுக்கு சாமி?''

''கேள்வி கேட்காதே. முதல்ல அதை வெளிய எடு.'' அவர் கட்டளையைத் தொடர்ந்து வண்ணமுத்து அதைப் பிடித்து வெளியே எடுத்தான்.



'புஸ், புஸ்' என்ற கொடூர சீற்றம். கண்ணிரண்டும் கருமுத்து போல வெறித்தது. மையில் புரண்டெழுந்தது போன்ற கறுப்பின் வால் பாகம் ஊசி போல் கூர்மையாக முடிந்திருந்தது.

வைத்தியர் சற்று வெளிறிப் போனார்.

மிரண்டு போன விழிகளோடு வீட்டில் கண்ணாடி சாடியில் இருந்த சில தவளைகளை இடுக்கியால் எடுத்து வெளியே போட்டார். அந்த தவளைகள் அரை மயக்கத்தில் இருந்தன.

''என்ன சாமி... தவளைங்ககிட்ட ஜீவனே இல்ல. உசுர் இருக்குதா இல்லையா?''

''கேள்வி கேட்காம அதை விழுங்கவை..'' அவர் அதட்டினார். அது அவன் கரத்தில் 'S' எழுத்து போல வளைந்து உட்கார்ந்திருந்தது. தரைமேல் கிடந்த தவளைகளை பார்க்கவும் முகத்தை முன் நீட்டியது.

''பாத்தீங்களா... நல்ல பசி...''

''விடு... விழுங்கட்டும்.''

வண்ணமுத்து வாலை பிடித்துக் கொண்டு அதன் முன்பாகம் மொத்தத்தையும் தரைமேல் விட்டான். அது போன வேகத்தில் தவளையை எகிறிக் கவ்வியது. ஒரே விழுங்குதான். வாய்ப் பிளவில் தவளையின் கால்கள் முதலில் தெரிந்தன. அடுத்த விழுங்கில் அதுவும் இல்லை.

''சபாஷ்... விழுங்கின தவளைக்குள்ள பட்டை தீட்டின கண்ணாடிக் கற்களை வெச்சு தைச்சிருந்தேன். வயித்துக் குள்ள தவளை தான் ஜீரணமாகும். ஆனா கண்ணாடி கற்கள் ஜீரணமாகாது. இந்த கருநாகம் அந்த கல்லோட வயிற்று வலியால சீரழியப் போகுது. புரண்டு புரண்டு நெளிஞ்சு ஒருவாரம் பத்து நாள் கழிச்சு உயிரை விடும். இல்லேன்னா சாமர்த்தியமா அந்தக் கல்லை தன் வாயாலேயே கக்கும். அப்படி கக்கற கல்லுக்கும் நாக ரத்தினத்துக்குண்டான சக்தியும் குணமும் உண்டு.

அது அவஸ்தையோட கக்கறதை அப்படியே வீடியோ படமாவும் எடுப்பேன். இல்லே செத்துட்ட அது வயித்தை கிழிச்சு கண்ணாடியை எடுப்பேன். அந்தக் கல்லுக்கு இன்னிக்கு பல லட்சம் விலை.''

வைத்தியர் வண்ணமுத்துவை அதிர விட்டார்.

''சாமி... என்ன சாமி இது பாம்புகளோடையே பழகற எங்களுக்குக் கூட தெரியாததெல்லாம் உங்களுக்குத் தெரிஞ்சிருக்கே?''

அவன் அந்த கருநாகத்தை லாவகமாகப் பிடித்து ஆட்டம் காட்டியபடியே பேசினான். ''சரி சரி அதை உள்ள போடு. அந்த கிழட்டுப் பாம்பை வெளிய எடு...''

அவன் அடுத்த சில நொடிகளில் அதை வெளியே எடுத்தான். கருநாகம் போல அதனிடம் சீற்றமில்லை. போதையில் இருப்பதைப் போல அரைக்கண் திறந்து பார்த்தது. அவன் கரங்கள் அதன் கழுத்தருகே நெறிப்போடு பிடித்தபடி இருந்தன. மீதமுள்ள ஒண்ணே கால் அடி நீள உடல் பாகம் எந்த துள்ளலும் வளைவும் இன்றி ஒரு குழாய் போலத் தொங்கியது.

வைத்தியர் அவனிடமிருந்து லாவகமாக அதை தன் கைகளுக்கு வாங்கிக் கொண்டார். ஒரு கையால் கழுத்தைப் பிடித்தபடியே மறுகையால் அதன் தலை பாகத்தை தொட்டார்.

அதுவரை சிவனே என்று அவர் பிடியில் துவண்ட பாம்பு தலை பாகத்தில் கை படவும் அதித சீற்றம் காட்டியது.

பிளந்து கொண்ட வாயில் இருந்து ஆக்ரோஷச் சத்தமும் சீற்றமும் வெளிப்பட்டது.

''ஆங்... இதுகிட்ட தலைல விஷயம் இருக்கு. சந்தேகமேயில்லை. பார்த்தியா தலைல கைபடவும் புஸ்சுங்கறதை...''

''அப்ப தலைல கல்லு இருக்கா சாமி.''



''இல்லாமலா... நல்லா புளியங்கொட்டை சைஸ்லயே இருக்குதுன்னு நினைக்கறேன்.''

''சாமி. அதை எப்படி எடுப்பீங்க... அதுவா கக்குமா?''

''அதுவால்லாம் கக்காது அதுக்குன்னு நிறைய வேலைங்க இருக்கு, அத நான் பாத்துக்கறேன். நீ போய்ட்டு நாளைக்கு வா...''

''என்ன சாமி... ரூவா எவ்வளவுன்னே சொல்லலியே...''

''ரூபா எதுக்கு... ஒரு காரையே உனக்கு வாங்கித் தந்துட்றேன் போதுமா?''

''நெசமாவா சாமி?''

''காலைல வா. நேரா கவுண்டர் அய்யாகிட்ட கூட்டிகிட்டு போறேன். அவர் மட்டும் நாகரத்தினம் உள்ள மாணிக்க நாகம் கிடைச்சுட்டது தெரிஞ்சா துள்ளிக் குதிப்பாரு.''

''அப்ப இந்தக் கல்லு அவருக்கா சாமி?''

''ஆமாலே. இதுதான் அவரை இச்சாதாரி நாகம் நெருங்காம பாத்துக்கும். இது இருக்கற இடத்துல இச்சாதாரி வராது.''

''இச்சாதாரியா.... அப்படின்னா?''

''என்னடா நீ... உன் அப்பன் இச்சாதாரி நாகம் பத்தி சொன்னதே இல்லையா?''

''அதெல்லாம் கதை சாமி... நினைச்ச உருவம் எடுக்கற பாம்பப் பத்திதானே சொல்றீங்க?''

''அதேதான்...''

''அதெங்க சாமி.. பொய் சாமி!''

''பொய்யா.... பைத்தியக்காரா...! ஒரு இச்சாதாரிய இடும்பன் காட்டுல கொன்னுட்டு, கவுண்டர் குடும்பமே வரிசையா சீரழிஞ்சுகிட்டு வருது பொய்ங்கறியே?''

''அது எப்படி சாமி இருக்கும்?''

''முதல்ல இதெ கூடைக்குள்ள போடு. காலைல வா. மத்த விபரத்தைச் சொல்றேன்.''

வைத்தியர் அந்த இரவில் அதிகம் பேசப் பிரியப் படாததை அவனுக்கு உணர்த்தினார்.

அவன் அதையும் ஒரு கூடைக்குள் விட்டான். அதை தன் ஜோல்னா பைக்குள் எடுத்து வைத்துக் கொள்ளவும் முயன்றான்.

''எலேய்... அது இங்கையே இருக்கட்டும். நீ போய்ட்டு காலைல வா.''

வைத்தியர் 'வந்ததை விடமாட்டேன்.' என்று சொல்லாமல் சொன்னார்.

வண்ணமுத்து மிடறு கட்டியபடியே ''காலைல வருவேன் சாமி... கழுத்தறுத்துடாதீங்க.'' என்று எச்சரித்தபடியே வெளியேறத் தொடங்கினான்.

வைத்தியர் கண்கள் ஆசை ஆசையாக அந்த பாம்புப் பெட்டிகளைப் பார்த்தன.

எச்சரிக்கையாக அதன் மேல் பெரிய கண்ணாடி ஜாடிகள் இரண்டைத் தூக்கி வைத்தார்.

கதவை மூடி அந்த அறையைத் தாழிட்டு விட்டு அரை மனதாகப் படுக்கப் போனார்!

## 8

**'திருப்பதிசாமிக் கவுண்டரும் பிரகதாம்பாளும் ஆழியாறு கேம்ப்பில் ஆசிரமம் அமைத்திருக்கும் சாமியார் ஒருவரைப் போய் பார்த்தனர். அவரிடம் தங்கள் குடும்ப சோகத்தை எல்லாம் சொல்லி இச்சாதாரி நாகம் பற்றிக் கேட்டார்கள். ''அப்படி ஒரு நாகம் இருக்க முடியுமா? இருந்தால் அது இப்படித்தான் விரட்டி விரட்டி பழி தீர்க்குமா?'' இதைக் கேட்டு சாமியார் சிரித்தார்.'**



பொலபொலவென்று விடிய ஆரம்பித்தது. போய் – படுத்த வண்ணமுத்துவுக்கு தூக்கம் வந்திருந்தால்தானே விழிப்பதற்கு...?

எப்பொழுது விடியும் என்றபடியே படுத்திருந்தான்.

அப்பொழுதே ஒரு அம்பாஸிடர் கார் வசப்பட்டு அதில் சவாரி ஏற்றிக் கொண்டு பறப்பது போல கற்பனை வேறு... பொழுது விடியவும் போய் வாய் கொப்பளித்தான். மூலைக்கடைக்கு டீ குடிக்கக் கிளம்பினான். கடையில் நூறு ரூபாயை சர்வ சல்லிசாக விட்டெறிந்தான்.

கடைக்காரனிடம் ஆச்சரியப் பார்வை.

''என்னா... நூறு ரூவாயா தள்றே? ஏகச் செழிப்போ?''

''ஆமாம்... ராத்திரி பெரிய வேட்டைல்ல...''

''அப்படி என்ன வேட்டை...''

''நல்ல கருநாகம் ஒண்ணு... அப்புறம் அம்புடவே அம்புடாதுங்கற மாணிக்க நாகமும் ஒண்ணு... போதாது..''

''கருநாகம் சரி... அது என்ன மாணிக்க நாகம்?''

''நாகரத்தினத்த வெச்சிருக்கற பாம்பைத்தான் மாணிக்க நாகம்பாங்களாம். அதுல்ல மாட்டுனுச்சு''

''நெசமாவா?''

''ஆமா... உன்கிட்ட பொய் சொல்லித்தான் எனக்கு ஆகப் போவுதா.''

''சரி... அப்ப நாகரத்தினக்கல்லு அதுக்கிட்ட இருந்துச்சா?''

''இல்லாம.. தலைமேல தடவிப் பார்த்தேனே... நல்ல திடமா பட்டாணி பருப்பாட்டம் நெருடினிச்சே...''

''ஆமா அத வெச்சுகிட்டு என்னா பண்ண?''

''என்னா பண்ணவா... சரிதான். தங்கம் வைரக் கல்லு இதை எல்லாம் வெச்சுக்கிட்டு என்ன பண்றாங்க?''

''அப்படியா... அப்ப அந்த கல்லுக்கு நல்ல விலை கிடைக்கும்னு சொல்லு.''

''வேணாம். ரொம்ப வாயை நோண்டாதே. மீதி சில்லரையைத் தா. ஒண்ணுமட்டும் நிச்சயம். நான் இனி பாம்பு பிடிக்கப் போக மாட்டேன். ஐயா லைஃப் செட்டிலாயாச்சுன்னு வெச்சுக்கையேன்.''

வண்ணமுத்து தெனாவெட்டாகப் பேசும் போது அங்கே ஒரு இளைஞன் பிரவேசித்தான். கையில் ஒரு சூட்கேஸ். கடைக்காரனிடம் அட்ரஸ் ஒன்றைச் சொல்லி விசாரிக்க ஆரம்பித்தான்.

''ஏங்க இங்க அண்ணாமலைங்கறவர் வீடு எங்க இருக்கு தெரியுமா?''

''அண்ணாமலையா... எந்த அண்ணமாலை? டோர் நம்பர், தெரு பேர் ஒண்ணும் கிடையாதா?''

''நம்பர் பத்து. ராஜாபிள்ளை தெருங்க...''

''அய்ய.. . அது கொள்ள தூரம் இருக்குதே?''

''கொள்ள தூரம்னா.. கொஞ்சம் இருங்க இவனுக்கு சில்லரையைக் கொடுத்துட்டு வந்துட்றேன். ஒரு டீ சாப்பிட்றீங்களா...?''

''போடுங்க.''

டீக்கடைக்காரன் உற்சாகமாக வண்ணமுத்துவுக்கு சில்லரையைத் தந்து விட்டு பாய்லர் வென்னீரைப் பிடித்து கண்ணாடி கிளாசைக் கழுவ ஆரம்பித்தான்.

வண்ணமுத்து துள்ளிக் கொண்டு அங்கிருந்து கிளம்பினான்.

''பாத்துவே... முடிஞ்சா அந்த நாகரத்தினத்தை கண்ணுல காட்டு அது எப்படி இருக்குன்னாவது பாத்துக்கறேன்....''

வண்ணமுத்து காதில் அது விழவேயில்லை. தொலை தூரம் போய் விட்டான். ஆனால் அந்த இளைஞன் முகம் ஆச்சரியத்தில் மிதந்தது.



டீ கிளாஸை வாங்கும் போது அவனிடம் அதன் எதிரொலி...

''என்னண்ணே நாகரத்தினம் அது இதுன்னுகிட்டு...''

''அத ஏன் கேக்கறீங்க. தோ போறானே வண்ணமுத்து சரியான பாம்பு பிடிக்கற இருளன். ராத்திரியிலே நாகரத்தினம் கக்கற ஒரு மாணிக்க நாகப் பாம்பையே பிடிச்சுட்டானாம். பயலுக்கு ஒரே குஷி''

கடைக்காரன் சொல்லச் சொல்ல அந்த இளைஞன் பார்வை நெடுந்தூரம் போய் விட்ட வண்ணமுத்துவையே ஆச்சரியத்தோடு பார்த்துக் கொண்டிருந்தது.

''டீயக் குடிங்க... ஆமா நீங்க அட்ரஸ் கேட்டீங்கல்ல?''

இளைஞன் திரும்பி தலையை அசைத்தான்.

''இப்படியே நேராப் போய் வலது பக்கம் திரும்புங்க. ஒரு மாரியம்மன் கோவில் வரும். அதை ஒட்டி ஒரு சந்து போகும். அதுல போங்க அந்த தெருவுக்கு நடுவுல ஒரு தெரு பிரியும். அதான் ராஜாபிள்ளை தெரு...''

டீக்கடைக்காரன் சொல்வது அந்த இளைஞன் காதில் விழவே இல்லை.

புத்தியில் நாகரத்தினம் தான் மின்னிக் கொண்டிருந்தது.

''தம்பி... உங்களத்தான்... காதுல விழுந்துச்சா?''

''ஆங்... என்ன சொன்னீங்க?''

''சரிதான்... சொன்னதே காதுல விழலையா?''

''அது இல்ல... இந்த நாகரத்தினம்னு ஏதோ சொன்னீங் கல்ல... அதை பத்திதான் யோசிச்சிக்கிட்டிருந்தேன்.''

''நான் எங்க சொன்னேன். வண்ணமுத்து சொன்னதைத் தான் சொன்னேன்.''

''யார் சொன்னா என்னங்க? பாம்பு நாகரத்தினத்தை கக்கும்கறதெல்லாம் சரியான டுபாக்கூர் கதைன்னுதான் கேள்விப்பட்டிருக்கேன். அதான் யோசிக்கறேன்.''

''அப்படியா. அப்ப நாகரத்தினம்னு சொல்றது எங்க இருந்து கிடைக்குது..?

''மத்த ரத்னக் கல்லுல்லாம் எங்க கிடைக்குதோ அங்க இருந்துதான்.''

''அப்ப பாம்பு ரத்தினம் கக்காதா?''

''எங்க... நம்ம எதிர்க்க கக்கச் சொல்லுங்களேன் பார்ப்போம்.''

''அப்ப வண்ணமுத்து பொய் சொன்னானா?''

''சாதாரண பொய் இல்ல. நல்ல ராட்சஸப் பொய். இந்த மாதிரி ஆளுங்களை எல்லாம் நம்பாதீங்க. பாம்பு முதல்ல பாலே குடிக்காது.''

''அட என்ன தம்பி நீங்க... நான் நிறைய சினிமா படத்துல பாம்பு பால் குடிக்கறத பாத்துருக்கேனே. இங்க எங்க ஏரியால கூட ஒரு பாம்பு புத்து இருக்கு. வெள்ளிக் கிழமைல எங்க ஊர் பொம்பளைங்க அங்க போய் பாம்புக்கு பால் தெளிச்சுட்டு வருவாங்களே...''

''அவங்க தெளிக்கறது இருக்கட்டும். நீங்க நேர்ல பார்த்திருக்கீங்களா?''

''இல்ல...''

''பாத்துட்டு சொல்லுங்க... குடிக்காது. குடிக்கவே குடிக்காது.''

அவன் கையில் டீ ஆறி விட்டிருந்தது. ஆனால் பேச்சில் சூடு ஏறி விட்டிருந்தது.

''அது சரி... பாம்பு பாலே குடிக்காதுங்கறீங்க. ஆனா எங்க ஊர்ல பெரிய பணக்காரக் கையான திருப்பதிசாமிக் கவுண்டர்ங்கறவர் குடும்பத்தையே அதுங்க தானே அழிச்சுக்கிட்டு வருது...''

''நானும் கேள்விப்பட்டேன். அது சம்மந்தமா விசாரிச்சு எழுதத்தான் மெட்ராஸ்ல இருந்து இந்த ஊருக்கு வந்திருக்கேன்...''



''அப்ப நீங்க...?''

''நான் ஒரு பத்திரிகை ரிப்போர்ட்டர்!''

''நிருபர்னு சொல்லுங்க. பேரு?''

''ஜெயந்தன்.''

''அப்ப அண்ணாமலைங்கறது...?''

''என் மாமா... அவர்தான் மெட்ராஸ் வந்தப்ப இந்த விஷயத்தைச் சொன்னாரு. நான் ஏதோ கதை உட்றாருன்னு தான் நினைச்சேன். ஆனா இப்பகூட, அவங்க குடும்பத்துல யாரோ ஒருத்தரை பாம்பு கடிச்சு, செத்துப் போயிட்டாங் களாமே...''

''ஆமா... ஆமா... கவுண்டரோட மூத்த மகன். பேர் கூட அவினாசிலிங்கம்.... பொத்திப் பொத்தி வெச்சிருந்தும் காப்பாத்த முடியல தம்பி...''

''அது சரி... விரோதிங்க யாராச்சும் ஒழிச்சுக்கட்ட நினைச்சிருப்பாங்க. துப்பாக்கி, கத்தின்னு போனா கொலைங்கறது பளிச்சின்று தெரிஞ்சிடும். அதான் பாம்பையும், நம்பிக்கையையும் வசமா பிடிச்சுட்டாங்க போல இருக்கு...''

''இல்ல தம்பி... கிட்டத்தட்ட நாப்பது ஐம்பது வருஷமா இப்படி நடக்குது... ஒரு கொலைகாரன் இம்புட்டு வருஷமாவா திட்டம் போட்டு கொல்லுவான்...?''

''ஏன் கூடாதா?''

''இந்த மாதிரி கேள்வி எங்களுக்கும் வந்துச்சு. ஆனா உண்மை அப்படி இல்லை. கவுண்டரோட அப்பாரு ஒரு இச்சாதாரி நாகத்தை இந்த ஊர் இடும்பன் காட்டுல வெச்சு கொன்னுபுட்டாருங்க. அதாங்க இம்புட்டு தூரம் அவங்க குடும்பத்தை அழிச்சிகிட்டிருக்குது...''

''இச்சாதாரி நாகமா...?''

''என்ன தம்பி... கேள்வி பட்டதில்லீங்களா? எத்தனை சினிமாவுல வந்துருக்கு...''

''சினிமால வந்துருக்கு சரி... நேர்ல பார்த்திருக்கீங்களா?''

''என்ன தம்பி எல்லாத்தையும் நேரில பார்த்திருக்கீங்களா. நேர்ல பார்த்திருக்கீங்களான்னே கேக்கறீங்க இப்படி பார்த்தா தான் ஒண்ணை நம்பணும்னா சிவனையும் முருகனையும் யாரு பாத்துருக்கா? ஜனங்க நம்பலையா?''

டீக்கடைக்காரர் கேட்டதிலும் நியாயம் இருக்கத்தான் செய்தது. ஜெயந்தன் என்னும் அவனால் பதிலுக்கு சிரிக்கத்தான் முடிந்தது.

டீ ஆறி ஆவியடங்கி விட்டிருந்தது.

''கொண்டாங்க சூடு பண்ணித் தர்றேன்'' என்றார்.

''இல்ல. இருக்கட்டும். ஒரே சூட்டுல எதையும் முடிச்சுடணும்.. சாரி குடிச்சுடணும் இல்லேன்னா இப்படித்தான்.'' என்றபடி கிளாஸை நீட்டினான்.

கிளம்பி விட்டான்!

அவன் சட்டையில் முதுகுப் பக்கம் ஒரு பாம்பு நெளியும் படம் மிரட்டுவது போல மின்னியது!

## 9

**''அந்த சாமியார் இச்சாதாரி நாகங்கள் எல்லாம் கற்பனை என்றார். அப்படியானால் ஏற்பட்ட மரணங்களுக்குக் காரணம்?''**

**''மனிதர்கள்தான்...!''**

**''எங்களுக்கு விரோதிகளா?''**

**''இருக்கக்கூடாதா?''**

**''யாருன்னு சொல்லுங்களேன், உங்க சக்தியால...''**

**அந்த சாமியார் கண்களை மூடிக் கொண்டார். சரியாக மூன்று நிமிடங்கள் கண்ணைத் திறக்கவில்லை. பிறகு திறந்தவர், ''என் திருஷ்டியில் ஒரு பெண் தான் தெரிகிறாள்.'' என்றார்!**



வண்ணமுத்து வைத்தியர் வீட்டுக்குள் நுழைந்த போது அந்த மாணிக்க நாகத்தின் உரித்தெடுத்த தோலை கழுவிக் கொண்டிருந்தார் வைத்தியர்.

வண்ணமுத்துவுக்கு பக்கென்றது.

''வைத்தியரே... என்ன இது - பாம்பகொன்னு போட்டீங்களா?''

''பின்ன...''

''அப்ப நாகரத்தினம்...?''

அவர் உடனே தன் வீட்டின் பூஜை அறைக்கு அவனை அழைத்துச் சென்றார்.

அங்கே ஒரு பால் கிண்ணம். அதில் கைகளை விட்டவர் விரல்களில் ஒரு கரு நீலக்கல் வந்து சிக்கியது.

எடுத்து பக்கத்து அகல் விளக்கின் தீச்சுடர் அருகே பிடித்த போது மின்னிக் கூத்தாடியது.

''ஆத்தி... ஆத்தி... என்னா ஒரு ஒளி. எங்க... எங்க...''

வண்ணமுத்து வேகவேகமாக கைகளை நீட்டினான்.

''அவசரப்படாதே... குளிச்சிட்டியா?''

''ஐய்யோ இல்லியே...''

''குளிச்சாதான் இதை தொடலாம்.''

வைத்தியர் குரலில் அதட்டல்.

''எப்படியோ கல்லு கிடைச்சிச்சே. அந்த மட்டுல பிரச்சினை தீர்ந்துச்சு. ஆமா எப்ப கவுண்டரை பார்க்கப் போறீங்க...''

''நான் கிளம்பிட்டேன்... நீயும் வரியா?''

''என்ன கேள்வி இது வைத்தியரே... அந்த கல்லுக்குச் சொந்தக்காரன் நான்.''

''நான் இல்லேன்னு சொல்லலை. ஆனா அங்க வந்தா வாயை மூடிகிட்டு இருக்கணும். அப்ப தான் உன் காரியம் நடக்கும்...''

''சரி வைத்தியரே... ஆமா இதுல உங்களுக்கு என்ன கிடைக்கும்?''

வைத்தியர் அந்த கேள்வி முன் மர்மச் சிரிப்பு சிரித்தார்.

''ஆமா... எங்க அந்த கருநாகம்?''

''இருக்கு பத்ரமா... கல்லை விழுங்கிட்டு...''

''அப்படின்னா அதுகிட்டேயும் ஒரு நாகரத்னம் கிடைக்கப் போகுதுன்னு சொல்லுங்க...''

''ஆமா... இப்ப இங்க கைல இருக்கற கல் கவுண்டருக்கு. அடுத்தது அவர் மகனுக்கு...''

''இந்த கல்ல அவங்க வாங்கி என்ன செய்வாங்க வைத்தியரே...''

''மோதிரம் பண்ணி போட்டுக்குவாங்க...''

''போட்டுகிட்டா...''

''இச்சாதாரியால கிட்ட நெருங்க முடியாது.''

''நெசமாவா?''

''பாக்கத்தானே போறே?''

அவன் திரும்பி அந்த வீட்டில் ஒரு மேஜை மேல் கிடந்த பிரம்புக் கூடையைப் பார்த்தான். போய் மெல்லத் திறந்தான்.

உள்ளே ஒரு கறுப்புப் கயிறை சுருட்டிப் போட்டது போல படுத்திருந்தது அந்த நாகம். லாவகமாக தொட்டு கையில் எடுத்தான். கழுத்தருகே பிடித்த போது கரளையாக நிரடியது.

வைத்தியர் சிரித்தார்...

''அங்கதான் இப்ப கல்லு இருக்கு. தவளை ஜீரணமான பின்னே கல்லு ஜீரணமாக பாம்பு படாத பாடு படும். பாக்க பாவமா இருக்கும்...''

அது அவர் பேச்சைக் கேட்டபடியே படம் விரித்து அவனை கொத்தப் பார்த்தது. லாவகமாக விலகியவன் ஆத்திரத்துடன் அதன் தலையில் ஒரு போடு போட்டான்.



''நாயி... என்னையே கடிக்கப் பாக்கறியா... பிச்சுப் பிடுவேன்...''

வைத்தியர் சிரித்தார்.

''சரி சரி அதை கூடைல விட்டுட்டு புறப்படு.'' என்றார். ஞாபகமாக அந்த அறைக்கு இரட்டை பூட்டை போட்டார். இருவரும் கிளம்பி விட்டனர்!

## 10

'சாமியார் சொன்னதை அசை போட்டார் திருப்பதி சாமிக் கவுண்டர். மிஞ்சியிருக்கும் ஒரே மகன் நாகராஜன் அவரை ஒரு மாதிரிப் பார்த்தான். ஆனால், ''அந்த சாமியார் உளறுகிறார்.'' என்றார் கவுண்டர்! ''நம் விஷயத்தில் யாராலும் தீர்வு சொல்ல முடியாது. அந்த இச்சாதாரி நாகத்திடமிருந்து நாம் தப்பிக்க வைத்தியர் சொல்வது போல் நடந்து கொள்வது தான் சரியான வழி.'' என்றார்.

கவுண்டர் மனைவியும் இறுதியில் அதைத்தான் ஒத்துக் கொண்டாள். 'தன் பரம்பரையை ஒரு பெண்ணால் எல்லாம் வேரறுக்க முடியாது.' என்று நம்பினாள். ''அப்படி எந்த ஒரு பெண்ணுக்கும் தான் துரோகம் செய்ய வில்லை'' என்றும் கூறியவள்... ''வைத்தியர் வரட்டும், அவர் சொல்லும் வழிதான் சரியான வழி.'' என்றாள்.

இதை எல்லாம் அறிந்த பார்த்திபனுக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை.

அப்படியானால் தன்னைப் போலவே வந்த இச்சாதாரி நாகம் வைத்தியர் சொல்கின்ற மாதிரி நடந்து கொண்டால் வழிக்கு வந்து விடுமா?'

வைத்தியரும், வண்ணமுத்துவும் வந்தபோது திருப்பதிசாமிக் கவுண்டர் பங்களாவில் பார்த்திபனும் உடன் இருந்தான். கவுண்டரையும், மிஞ்சியிருக்கும் அவரது கடைசி மகன் நாகராஜனையும் சுற்றிலும்

தடிதடியாக ஆட்கள். வீடு முழுக்க ஒரே நாகதாளி வேரின் வாசனை!

வைத்தியர் மூச்சை உறிஞ்சியபடியே கேட்டார். "என்ன கவுண்டரே நாகதாளி வேரை அரைச்சு திரும்பின பக்கமெல்லாம் பூசியிருக்கீங்க போலிருக்கு..."

"ஆமாம்... நீங்க எவ்வளவோ வழிங்க சொன்னீங்க அதுல இதுவும் ஒண்ணாச்சே? அவினாசி போன பிறகு எல்லாருக்குமே திகில் ஜாஸ்தியாயிடிச்சு. அதான் நல்லா பத்து கிலோ வேரை வாங்கி இடிச்சு நசுக்கி, அரைச்சு பூசிட்டாங்க... ஆமா... கூட இது யாரு?"

"இவனா... இவன் என் சிஷ்ய புள்ள. உங்களுக்காக நானும் இவனும் நேத்து ராத்திரி படாதபாடுபட்டு காட்டுல சுத்தி அலைஞ்சு ஒரு மாணிக்க நாகத்தை பிடிச்சுட்டோம்ல...!"

வைத்தியர் வண்ணமுத்துவை வைத்துக் கொண்டே சொன்ன விஷயம் அவனை சற்று உறுத்தியது. வைத்தியரை ஒரு மாதிரி பார்த்தான். கவுண்டரிடம் பரவசம் உருவாகியிருந்தது.

"நெசமாவா வைத்தியரே... மாணிக்க நாகம் பிடிபட்டுச்சா... நாகரத்தினக் கல் அம்புட்டுச்சா?"

"என்ன கவுண்டரே... எத்தன வருஷமா தேடிகிட்டு இருக்கேன் இதுக்காக... உங்க இளைய மகன் அதிர்ஷ்டம் பண்ணவன். அதான் கல் கிடைச்சிடுச்சு..."

"எங்கே... காட்டுங்க பார்ப்போம்..."

"காட்றேன் அதுக்குதானே வந்திருக்கேன். அதுக்கு முந்தி ஒரு முக்கியமான விசயம்."

"என்ன?"

"நம்ம சிஷ்ய பிள்ளை இனி பாம்பு பிடிக்க வர மாட்டேன், எனக்கு கார் ஓட்டத் தெரியும். ஒரு கார் வாங்கிக் கொடுத்துடுங்க. நான் ஒதுங்கிக்கறேன்னு சொல்றான். ஆகையால அவனுக்கு நீங்க ஒரு கார் வாங்கித் தரணும்..."



கழுத்தில் கத்தியை வைப்பது போல பேசினார் வைத்தியர். கவுண்டர் படபடத்தார்.

"யோவ் என்னய்யா பெரிய காரு... பிசாத்து முதல்ல கல்ல காட்டுய்யா..."

"காட்றேன். காட்றேன்... இப்படி கோபப்பட்டா எப்படி?" என்றபடியே வைத்தியர் ஒரு தூக்கு வாளியை தன் மருந்து பெட்டியில் இருந்து எடுத்தார்.

சிறிய வெள்ளித் தூக்கு வாளி

உள்ளே தளும்பத் தளும்ப பால்!

மூடியைத் திறக்கவும் தெரிந்தது.

எல்லோர் பார்வையும் அந்த தூக்கு வாளியில் பதிந்து கிடந்தது. உள்ளே பூஜையில் இருந்த பிரகதாம்பாளும் அரக்க பரக்க ஓடி வரலானாள்.

வைத்தியர் தூக்குவாளி முன் பெரிதாகக் கும்பிட்டார். பின் கும்பிட்ட கையை விட்டு நாக ரத்தினத்தை வெளியே எடுத்தார்.

"நல்லா பாத்துக்குங்க. இதான் நாகரத்தினம். இது எப்பவும் தங்கம் இல்லன்னா வெள்ளியோட சேர்ந்து இருக்கணும். தனியா பிரிஞ்சு இருக்கைல இப்படி பால்லதான் கிடக்கணும்.

லட்சம் பாம்புகள்ள ஒரு பாம்போ, இரண்டு பாம்போ தான் மாணிக்க நாகமாகுதுங்க. அதுங்க தல பாகத்துல விஷப்பைல இருக்கற விஷம்தான் இப்படி திரண்டு நாகரத்தினமா மாறிடுது. இது சந்திர ஒளி பட்டா மின்னும். சந்திர ஒளில ஒருத்தர் இதை கைல வெச்சுகிட்டிருந்தா அவர் மனசுல அவர் நினைக்கறதெல்லாம் நடக்கும்பாங்க. பாருங்க... நல்லா பாருங்க..."

பட்டாணி அளவு நீலக்கல்லை காட்டியபடி வைத்தியர் பேச எல்லாரும் எட்டி எட்டிப் பார்த்தார்கள்.

''இந்தாங்க கவுண்டரே... இது வந்த நேரம் இனி உங்க குடும்பத்துக்கு இச்சாதாரியால ஒரு மரணமுமில்ல. எல்லா சனியனும் இந்த நொடியோட விலகுது. பிடியுங்க...''

வைத்தியர் பேசிக் கொண்டே அந்த நாகரத்தினக் கல்லை எடுத்து திருப்பதிசாமிக் கவுண்டர் கையில் வைத்தார்.

கவுண்டர் கைகளில் மெலிதான நடுக்கம்.

பார்வையில் அதிகபட்ச விரிவு...

மூச்சுக் காற்றில் அதீத உஷ்ணம்.

''பிரகதா... நாகராஜி... நாம நெடுங்காலமா தேடிக்கிட்டிருந்த நாகரத்னக்கல்... இனிமேட்டு நமக்கு பிரச்சினையில்ல பார்த்தியா. வைத்தியரே, பெரிய ஆளுய்யா நீர். நெசமாலுமே பெரிய ஆள்...''

''ஒரு நிமிஷம்பா!'' கத்தரித்தான் நாகராஜன்.

''என்ன நாகராஜி...?''

''இது அசல் நாகரத்தினம் தான்னு எதை வெச்சு நம்பறது?'' கேட்க வேண்டிய கேள்வியைத்தான் கேட்டான்.

முகத்தில் குத்து விழுந்த மாதிரி ஆனது வைத்தியருக்கு. ''தம்பி நாகராஜி... உசுரை கையில் பிடிச்சுக்கிட்டு காட்டுல அலைஞ்சு மாணிக்க நாகத்தை பிடிச்சு இதை எடுத்துருக்கேன். போதாதுக்கு ஒரு மாணிக்க கருநாகத்தை வேறு பிடிச்சு வீட்ல வெச்சிருக்கேன். அதுகிட்டயும் ஒரு கல் இருக்கு. முதல்ல இந்த கல்ல கொடுப்போம்னுதான் வந்தேன். என்னையே சந்தேகப் பட்றியேப்பா...''

வைத்தியர் பேச்சில் மிக மிக இதம். நாகராஜன் அதைக் கேட்டு தன் கருத்தை மாற்றிக் கொள்ள தயாராக இல்லை.

''சாரி வைத்தியரே... நாங்க யாரை நம்பறது. யாரை நம்பக் கூடாதுன்னே தெரியாதபடி பாதிக்கப் பட்டிருக்கோம். நான் இப்ப யாரையும் எதையும் எதுக்காகவும் நம்பத் தயாரா இல்லை. நீங்க இந்த கல்ல கொடுத்துட்டு போங்க. அது



என்ன மாதிரி கல் - அசலா, போலியாங்கறத நான் சோதிச்சு பாத்துட்டு பிறகு உங்களுக்கு சொல்லியனுப்பறேன்...''

வைத்தியர் முகம் இருண்டு போகத் தொடங்கியது.

''ஏ தம்பி.. என் மேலேயே சந்தேகமா? உங்க குடும்பத்துக்கு நாங்கதானே தம்பி பரம்பரை பரம்பரையா வைத்யம் பாக்கறோம். நீங்க நல்லாருந்தா தானே தம்பி நாங்க நல்லா இருப்போம். அப்படி இருக்க நான் உங்கள ஏமாத்த நினைப்பேனா?''

''இதோ பாருங்க வைத்தியரே... நீங்க ஏமாத்தறீங்கன்னு நான் சொன்னேனா. நான் சொல்லாததை எல்லாம் ஏன் சொன்னதா எடுத்துக்கறீங்க.''

''அப்படி பரிசோதனை பண்ணிப் பாக்கனும்னா, என்ன அர்த்தம் தம்பி?''

''உங்களுக்கே தெரியாம கூட உங்கள யாராவது ஏமாத்தியிருக்கலாம் இல்லியா?''

''எனக்கே தெரியாம நான் ஏமாந்து போறதா... வாய்ப்பே இல்லை. இது மாணிக்க நாகத்துக்கிட்ட இருந்து நானே எடுத்த கல். வேணுமின்னா, அந்த பாம்போட தோலை காட்டவா? டேய் வண்ணமுத்து சொல்லேண்டா...''

''ஆமாங்கய்யா... ராத்திரி நான்தாங்க அதை புடிச்சேன். காலைல ஐய்யா அதுகிட்ட இருந்து கல்ல எடுத்தார்.''

''வேலிக்கு ஓணான் சாட்சியாக்கும். நீங்க என்ன சொன்னாலும் சரி. பரிசோதனை பண்ணிப் பார்க்காம நான் இதுல நல்ல முடிவெடுக்க முடியாது.

அப்படியே இது நாகரத்தினம்னு முடிவானாலும் இதனால எங்களுக்கு மரணம் நேராதுங்கறதும் முடிவாகணும். அப்பதான் இதுக்கு நீங்க கேட்ட பணத்த தருவோம்.''

நாகராஜன் தீர்மானமாகப் பேசினான். வெட்டு ஒண்ணு துண்டு இரண்டு என்று இருந்தது அவன் பேச்சு. திருப்பதிசாமி கவுண்டரே அவன் பேசுவதைப் பார்த்து சற்று கலங்கிப் போனார்.

பிரகதாம்பாள் ''தம்பி. பாத்து பேசுய்யா. எங்களுக்கு மிச்சம் இருக்கறது நீ தான். உன்னையும் நாங்க இழக்க விரும்பல...'' என்றாள்.

''அம்மா கொஞ்சம் சும்மா இருங்கம்மா. உயிர் மேல இருக்கற ஆசை உங்க எல்லார் கண்ணையும் நல்லாவே கட்டிடிச்சு. போகட்டும் போகட்டும்னு பார்த்தா போய் கிட்டே இருக்கீங்க. சாமியாரை போய் பார்க்கறீங்க. இவங்க கிட்ட நாகரத்தின மோதிரம் பண்ணித்தான்னு சொல்றீங்க.

எதைத் திண்ணா பித்தம் தெளியும்னு இருக்கு உங்க நிலைமை. அதை மத்தவங்களும் நல்லாவே பயன் படுத்திக்கறாங்க.''

நாகராஜன் சொன்னதில் கொஞ்சம் அவநம்பிக்கையும் தெரியவே வைத்தியர் பாம்பைப் போலவே சிருட்டென்று நிமிர்ந்தார்.

''தம்பி அளந்து பேசுங்க. இப்ப சொல்றேன் நல்லா கேட்டுக்குங்க. இது அசல் நாகரத்தினம் தான். இது உங்ககிட்ட வந்தாதான் நீங்க உயிரோடயே இருக்க முடியும். இதோட விலை உங்க சொத்துல சரிபாதி.

இல்லாட்டி நீங்களும் உங்க அண்ணனைப் போலவே பாம்பு கடிச்சு செத்துப் போவீங்க. உங்க அப்பா, அம்மா அத்தினி பேரையும் பாம்புங்க கடிச்சு உங்க குடும்பமே அழியும். சொத்து அப்புறமா கவர்மெண்டுக்கோ இல்லை ஏதாவது கோவிலுக்கோதான் போகும்.

இதை நீங்க புரிஞ்சுக்கப் போறதில்ல. ஆனா இன்னும் இரண்டு சாவுங்க விழட்டும். அப்ப தானா என்னப்பாக்க ஓடி வருவீங்க. அப்ப வெச்சுக்கறேன்...''

வைத்தியர் சபதம் போட்டபடி கொண்டு வந்த நாகரத்தினக் கல்லையும் திரும்ப எடுத்துக் கொண்டு புறப்பட்டார்.

கார், லாரி என்கிற கனவோடு வந்த வண்ணமுத்து நடந்ததை எல்லாம் பார்த்து நொந்து போய்விட்டான்.



ச்சே... தன் நேரத்துக்கு எங்கே போனாலும் எல்லாமே நேர் எதிராகி விடுகிறதே... புலம்பிக் கொண்டே வைத்தியரை பின் தொடர்ந்தான்.

நாகராஜை கவண்டர் முறைத்தபடி இருந்தார்.

''ஆனாலும் உனக்கு இந்த அவசரம் ஆவாது நாகராஜி...'' என்றாறர்.

''அட சும்ம இருங்கப்பா. இப்ப சொல்றேன்பா. நம்ம குடும்பத்துக்கு எந்த சாபமும் கிடையாது. இச்சாதாரி நாகம் இஷ்டப்பட்ட வடிவம் எடுக்கும்கறதும் பொய். பாம்பு பேரால நம்ப குடும்பத்தையே அழிக்க யாரோ போட்ற ட்ராமாதான் நம்ம குடும்பத்தோட சாவுங்க. அதை நான் நிச்சயம் கண்டு பிடிப்பேன்.''

நாகராஜன் குரலில் ஆவேசமும், ஆத்திரமும் மண்டிக் கிடந்தது. ''போடா போடா முட்டாள் பயலே... இந்த புத்தி எங்களுக்கு இல்லேன்னு நினைச்சுட்டியாக்கும். நாங்க கேட்டுக்காத கேள்வியா? இல்ல நாங்க பாக்காத பார்வையா? தம்பி பார்த்திபா... நீயே சொல்லு. உன் வடிவத்துல வந்தது யாரு...?''

கவுண்டர் ஓரம் கட்டி நின்று கொண்டிருந்த பார்த்திபனை பிடித்து முன்னால் இழுத்தார்.

ஒரு பெரிய பணக்கார குடும்பம் அடித்துக் கொள்கிறது. அவ்வளவும் உயிர்ப்பிச்சினை. இதில் தன்னைப் பணயம் வைத்துக் கேள்வியா? பார்த்திபன் நாகராஜனை மலங்க மலங்கப் பார்த்தான்.

''என்ன பார்த்திபன்... சொல்லுங்க! உங்களப் போலவே ஒருத்தன் வந்து எங்கண்ணனுக்கு கார் டிரைவராகவும் இருந்தது வாஸ்தவம்தான். அதுக்குக் காரணம் இந்த இச்சாதாரி நாகம்னு சொல்ல வறீங்களா?''

''ஆமாங்க...'' பார்த்திபன் குரலில் அரை சப்தம். ''என்ன ஆமாங்க... ஏன் உங்களைப் போலவே ஒருத்தர் இந்த

உலகத்துல இருக்கக் கூடாதாக்கும்? அவர் எங்கண்ணன் கிட்ட வேலை பார்த்திருக்கக் கூடாதாக்கும்...?''

''இல்லீங்க... அந்த இச்சாதாரி என்னைப் போலவே வடிவம் எடுத்துப் போனதை, நான் என் கண்ணால பார்த்தேனே.''

''நீங்க பொய் சொல்றீங்கன்னு சொல்றேன். நீங்க, அந்த வைத்தியர் எல்லாரும் கூட்டு. எங்க குடும்பப் பிரச்சினையை வைத்து பிளாக் மெயில் பண்ணாத குறையா எங்கிட்ட பணம் புடுங்கப் பார்க்கறீங்கன்னு சொல்றேன்.''

''ஐய்யோ. சத்யமா அப்படி இல்லை! நான் இந்த காலத்து ஆள். சினிமால கூட எனக்கு மாயம் மந்திரம்னு ரீல் விட்டா பிடிக்காது. அப்படிப்பட்ட நானே இச்சாதாரி நாகத்தையும், அதோட வடிவ மாற்றத்தையும் பார்த்து அதிர்ந்து போய் இருக்கேன் தம்பி...''

''இல்ல.. எல்லாரும் ஏதோ பிளான் பண்றீங்க. இச்சாதாரி, அப்புறம் வடிவ மாற்றம், அப்புறம் நாகரத்தின மோதிரம் போட்டா அது சரியாயிடும்கறது எல்லாமே புருடா! என் பெரியப்பா குடும்பமும், எங்க அண்ணனும் கொலை செய்யப்பட்ட மாதிரி என்னையும் கொலை செய்ய முயற்சி செய்தா நடக்காது.

நான் கொஞ்ச கொஞ்ச பாம்பு விஷத்தைச் சாப்பிட்டு இப்ப எவ்வளவு பெரிய பாம்பு கடிச்சாலும் எனக்கு எதுவும் ஆகாதுங்கற அளவுக்கு மாறியிருக்கேன். அதான் தைரியமா பேசறேன். என்னைக் கொலை செய்ய பாம்பை பயன்படுத்த முடியாது. வேற வழியில தான் முயற்சி செய்யணும். அப்படி செய்யும்போது தெரிஞ்சிடும். சாபமா... சதியாங்கறது...''

நாகராஜன் பதிலில் திருப்பதிசாமியே ஒரு கணம் ஆடிவிட்டார்.

''தம்பி நாகராஜ் நீ சொல்றது நெஜமாய்யா...?''



''ஆமாம்ப்பா... இத நான் உங்களுக்குக் கூட சொல்லல. அவ்வளவு ஏன் உங்கள பாம்பு கடிச்சாலும் நீங்க சாக மாட்டீங்க. அம்மா உங்களுக்கும் தான்...''

நாகராஜன் அதிர்ச்சிக்கு மேல் அதிர்ச்சியளித்தான்.

''எப்படிய்யா... எத வெச்சு சொல்றே?''

''ராஜஸ்தான்ல ஒரு பாம்பு பண்ணை வெச்சிருக்கறவர் ஒரு நாள் என்னை சந்திச்சார். பாம்புகளோட பழகி, அதையே வெச்சு பிழைப்பு நடத்தற அவர் தன் அனுபவ அறிவை வெச்சு ஒரு மருந்து கண்டுபிடிச்சார். அதை தினமும் பால்ல ஒரு மிளகு அளவு சாப்பிடவும் செய்தார். பதினைந்து நாள்தான். அதுக்குப் பிறகு அவரோட உடம்புல விஷத்தை எதிர்க்கிற தன்மை வந்துடுச்சு. அவர் நம்ம விஷயத்தை பத்தி கேள்விப்பட்டு என்னை வந்து சந்திச்சார். மருந்தையும் தந்து சாப்பிடச் சொன்னார்.

நான் சாப்பிட்டேன். அதன் பிறகு பதினைந்து நாள் கழிச்சு அவரே ஒரு பாம்பை விட்டு கடிக்க வெச்சார். எனக்கு ஒண்ணும் ஆகலை. அதுக்கு பிறகு அந்த மருந்தை தினம் நீங்க ரெண்டு பேரும் சாப்பிட்ற பால்லயும் கலந்து கொடுக்க வெச்சேன். இது வெளில யாருக்கும் தெரியாது. உங்களுக்கே இப்பதான் தெரியும்னா பார்த்துக்குங்களேன்.''

நாகராஜன் புதிர் மேல் புதிர் போல அடுக்கிக் கொண்டே போனான்.

திருப்பதிசாமிக் கவுண்டர் பிளந்த வாயை மூட வில்லை. பிரகதாம்பாளும் மகனின் புத்திசாலித்தனத்தை நினைத்து ஆச்சரியப்பட்டாள்.

பார்த்திபன் மட்டும் கேட்க வேண்டிய அந்தக் கேள்வியைக் கேட்டான்.

''இத ஏன் நீங்க அப்பவே இவங்ககிட்ட சொல்லலை?''

''நல்ல கேள்விதான். இப்படி பாம்பு விஷத்தை முறியடிக்கற ஒரு நிலைக்கு நாங்க போய்ட்டோம்னு எதிரிக்கு தெரிஞ்சா அவன் வேற விதமா பழி வாங்க முயற்சி

செய்வான். அப்புறமா அதைச் சமாளிக்கணும். அதுக்கு ஒரு வழியைக் கண்டுபிடிக்கணும். அதனாலதான் யார்கிட்டேயும் சொல்லலை.''

''அப்ப உங்க குடும்பச் சாவுக்கெல்லாம் காரணம் உங்க எதிரிங்கதானா... பாம்புங்க இல்லையா?''

''நிச்சயமா இல்லை. இது இன்டர்நெட் யுகம். இதுல போய் இச்சாதாரி. அது பழி வாங்குதுன்னா சிரிப்பாங்க.''

''எந்த யுகமா இருந்தா என்ன... தண்ணிய குடிச்சா தானே தாகம் அடங்கும்? பெண்ணால தானே பிள்ளைய குடுக்க முடியும்? அப்படி சில விஷயங்கள்ளாம் மாற வாய்ப்பே இல்லை நாகராஜா ஐம்பது அறுபது வருஷத்துக் கெல்லாம் ஒருத்தரால தொடர்ச்சியா பழி வாங்க முடியாது...''

திரும்பவும் வக்காலத்து வாங்கி நம்பிக்கை பக்கம்தான் நிற்க முயன்றார் திருப்பதிசாமிக் கவுண்டர்.

''அப்படியா... அப்படின்னா அந்த இச்சாதாரி நாகத்தை இனி எப்ப வேணா வரச் சொல்லுங்க. அது மட்டுமில்ல. ஒரு நாகப் படையே வந்து கடிச்சாலும் இனி நம்மை அசைக்க முடியாது. இந்த நிலைல அந்த பாம்பு என்ன செய்யும்?

பல உருவம் எடுக்கத் தெரிஞ்ச அது புலியா சிங்கமா மாறி நம்ம எதுக்க வருமா?

அப்படி வரட்டும்... வரும்போ நான் நீங்க சொல்ற எல்லாத்தையும் நம்பறேன்.

அதுவரை யார் எது சொன்னாலும் நான் நம்ப மாட்டேன்.''

நாகராஜன் அடித்துப் பேசி விட்டு அங்கிருந்து விலகத் தொடங்கினான்.

திருப்பதிசாமிக் கவுண்டர் பிரமை பிடித்தது போல பார்த்துக் கொண்டிருந்தார்!



# 11

**'பார்த்திபன் பலமுறை யோசித்துப் பார்த்தான். நாகராஜ் சொன்னதை கூட்டிக் கழித்து வகுத்து என்ன வெல்லாமோ செய்து பார்த்தான். 'நாகராஜ் சொல்வதுதான் உண்மையோ?'**

**கேள்வியை புறம் தள்ளியது அவன் பார்த்த காட்சி. அவன் கண் எதிரில் இச்சாதாரி பார்த்திபனைப் போலவே மாறிச் சென்றதே...?**

**அது ஒன்றும் கனவில்லையே...?**

**ஒரு வேளை இந்த மாதிரி விஷயங்களில் அனுபவப் பட்டால் தான் நம்பிக்கை வருமோ?**

**கேள்விகளில் ஊஞ்சல் கட்டி ஆடத் தொடங்கிவிட்டது அவன் மனது...'**

சோகமாக இருந்தான் வண்ணமுத்து. எதிரிலேயே கோபவேசமாக வைத்தியர். அவர்கள் இருவர் எதிரில் கண்ணாடி சாடி ஒன்றுக்குள் அந்தக் கருநாகம்!

அது படம் எடுத்தபடி இருவரையுமே பார்த்தபடி இருந்தது.

'நான் பாட்டும் காட்டில் சுற்றிக் கொண்டிருந்தேன். என்னை பிடித்து இப்படி அடைத்து வைத்து விட்டாயே?' என்று கேட்கிற மாதிரி கூடத் தோன்றியது.

''வைத்தியரே கடைசில இப்படி பண்ணிட்டீங்களே'' வண்ணமுத்து குரல் கமறியது.

''வாயை மூடு வண்ணமுத்து. நானே இடிஞ்சு போய் கிடக்கேன்.''

''என்னத்த... பேசாம அந்த நாகரத்தினத்தைக் கொடுத்துட்டு வந்திருக்கலாம். அதான் சுத்தமான ரத்தினமாச்சே அப்புறம் எதுக்கு தராம வந்தீங்க?''

''இதோ பார் என்னைக் கேள்வி கேக்காதே. நீ சொ...

''என்ன வைத்தியரே கிளம்புன்னு சாதாரண...
சொல்லிட்டீங்களே. நான் புடிச்ச மாணிக்க நாகத்...
இந்த கருநாகத்தையும் தாங்க நான் போயிட்றேன்.''

''வண்ணமுத்து உன்னை நான் ஏமாத்த மாட்டே...
நம்பலாம். இப்ப கிளம்புன்னுதான் சொன்னேன்.''

''இல்ல வைத்தியரே... நான் இனியும் உங்கள நம்ப
தயாரா இல்லை. கவுண்டர் வீட்ல பேசும்போது நான் உ...
சிஷ்யன்னீங்க. பாம்பு புடிக்க நீங்க என்னமோ பாடா ப...
மாதிரி பீலால்லாம் விட்டீங்க. அவங்ககிட்ட சொத்துல...
பாதி கேட்டீங்க.

நீங்க பயங்கரமான ஆள் வைத்தியரே!''

பேசியபடியே கருநாகம் அடங்கிக் கிடந்த சாடியை...
தூக்கினான்.

அதைப் பிடித்து, தன் பிரம்புப் பெட்டிக்குள் வைத்து...
கொள்ள முயன்றான்.

வைத்தியர் முறைத்துப் பார்த்தார். கத்தவு...
தொடங்கினார்.

''வண்ணமுத்து கருநாகத்தை தொடாதே வை! அ...
எனக்கு வேணும்.''

''உங்களுக்கு வேணும்னா காட்டுக்குள்ற போ...
பிடிச்சுக்குங்க. அப்படியே அந்த நாகரத்தினக் கல்லையு...
தர்றீங்களா?''

வைத்தியர் முகத்தில் கோபம் ரேகைக் கோடுகளைப்...
போடத் தொடங்கியது.

அவனை முறைத்து பார்த்தபடியே கிட்டே நெருங்கினார்.

அந்த முறைப்பில் கொலை வெறியின் ஒரு வித ஒளிர்வு
தெரிந்தது.

''என்ன வைத்தியரே ஒரு மாதிரி பார்க்கறீங்க.
இதுக்கெல்லாம் நான் பயப்பட மாட்டேன்.''



''வேண்டாம் வண்ணமுத்து. வெண்ணெய் திரண்டு வரும் போது தாழியை உடைச்சிடாதே.''

''என்ன சொல்றீங்க. வெண்ணெய் தாழின்னுகிட்டு...''

''தமிழ்ல தான் சொல்றேன் புரியலயா..''

''நெஜமா புரியல..''

''இன்னும் இரண்டு நாள் எதுவும் பேசாம என் பேச்சக் கேளு. அந்த நாகராஜன் சாவான். அப்பால கவுண்டர் நிச்சயம் என்னைத் தேடி வருவார். இந்த நாகரத்தினத்தை மட்டுமில்ல - உன் கைல இருக்கிற கருநாகத்தோட கல்லையும் அப்ப அவர் தலைல கலபமா கட்டலாம்.

ஒரு காருக்கு ஒன்பது கார் உனக்கு வாங்கித் தரேன். கொஞ்சம் பொறுமை காட்டு...''

''அது எப்படி இரண்டு நாள்ல அந்த நாகராஜன் சாவான்னு அவ்வளவு கரெக்டா சொல்றீங்க...''

''எல்லாம் ஒரு கணக்குதான்...''

''எனக்கு நம்பிக்கை இல்ல. அந்த பையன் பயங்கர விவரம். அதோட ஒரு சேதி வேற கேள்விப்பட்டேன்.''

''தெரியும்... பாம்பு கடிச்சாலும் விஷம் அவனை ஒன்னும் பண்ணாதுங்கற விஷயம்தானே?''

''ஆமாம்... கவுண்டர் குடும்பம் ஏதோ ஒரு வகைல முழிக்கிச்சு. இச்சாதாரியால என்னா பண்ண முடியும்?''

''அதால எதுவேனா பண்ண முடியும்? பொறுத்திருந்து பாருன்னு சொல்றேன்ல...''

''சரி உங்களுக்காக இரண்டு நாள் நான் கம்மா இருக்கேன். இந்த இரண்டு நாள்ல எதுவும் நடக்கலை என் கல்லையும், இந்த கருநாகத்தையும் என்கிட்ட ஒப்படைச்சுடணும்.''

வண்ணமுத்து கெடு விதித்து விட்டுக் கிளம்பினான். வைத்தியர் அவன் போவதையே பார்த்தபடி தன் சிறிய தாடியை நீவிக் கொள்ளத் தொடங்கினார்.

மர்மமாக ஒரு சிரிப்பு வேறு உதட்டில் பரவியது.

## 12

பார்த்திபனும் அந்த சாமியாரைப் போய் பார்த்... ''சாமி நான் ஒரு சின்னப் பாம்புப் பண்ணை நடத்தறவன். என் பண்ணைல ஒரு இச்சாதாரி நாகம் எனக்கே தெரியாம இருந்துச்சு. அது என்னைப் உருவம் எடுத்து வெளிய போனதை என் கண்ணால பார்த்தேன். அதுதான் திருப்பதிசாமி கவுண்டர் குடும்பத்துக்குள்ள புகுந்து அவர் மூத்த மகன் அவினாசிலிங்கத்தை கொன்னுச்சு. நல்ல வேளை கவுண்டர் அப்புறமா என்னை சந்தேகப்படல... இருந்தாலும் அவர் மகன் என்னை சந்தேகப்பட்றார். நான் தான் பாம்பை விட்டு அவினாசிலிங்கத்தை கொன்னுட்டதா நினைக்கிறார். ஒரு பாவமும் தெரியாது. இச்சாதாரி நாகம்னே ஒன்று கிடையாது. எல்லாம் பொய்ங்கறார். ஆனால் நான் கண்ணால பார்த்தவன். எனக்கு ஒரே குழப்பமா இருக்கு சாமி. நீங்கதான் நல்ல வழி காட்டணும்.'' என்றபடி அவர் காலில் விழுந்தான். சாமியார் சிரித்தபடியே சொன்னார்.

கோயமுத்தூரில் ஒரு குறிப்பிட்ட கலையரங்கத்தில் நடக்க உள்ள நிகழ்ச்சிக்கு போய் விட்டு வரச் சொன்னார்!

அவன் கேள்விக்கு அதுவா பதில்?'

கோயமுத்தூர்.

தமிழ் நாட்டிலேயே அற்புதமான சுரப்பதம் கொண்ட ஒரு ஊர்.

சூரியமகா பிரபுவுக்கு இந்த ஊர் மக்களிடம் மட்டும் பெரிய அளவில் கருணை உண்டு. அதனால் தானோ என்னவோ பார்த்திபனுக்கு கொஞ்சம் குளிர்க் கட்ட செய்தது.



ஆனால் மனதில் மட்டும் தீராத அந்த நடுக்கம் தொற்றிக் கொண்டிருந்தது.

கண்கள் சாலையைப் பார்த்து அலைக்கின்றன.அதில் அந்த கலையரங்கத்தைத் தேடும் மும்முரம். அப்பொழுது ஒரு குரல்...

''ஹலோ மிஸ்டர் பார்த்திபன்...''

பார்த்திபனும் திரும்பினான். பக்கத்திலேயே ஜெயந்தன்!

''நீங்க...?''

''என் பேர் ஜெயந்தன்... பத்திரிகை ரிப்போர்ட்டர்.''

''உங்களுக்கு எப்படி என்னைத் தெரியும்?''

''வின்டன் மோனிகாலெவின்ஸ்கியை எத்தனை தடவை கிஸ் அடிச்சார்ங்கறதையே நாங்க கண்டுபிடிச்சு எழுதற ஜாதி. உங்களத்தானா தெரியாது...?''

''நல்லது.... என்ன விஷயம் மிஸ்டர் ஜெயந்தன்?''

''மிஸ்டர் பன்னீர்தாஸ் நடத்தப்போற மேஜிக் ஷோவுக்கு வந்திருக்கீங்களா?''

''பன்னீர்தாஸ் மேஜிக் ஷோவா... என்ன சொல்றீங்க...?''

''நம்ப ஆழியார் சாமியார் சொன்ன கலை நிகழ்ச்சிக்குத் தானே வந்திருக்கீங்க?''

''ஆழியார் சாமியார்.... Yes... yes... அது எப்படி உங்களுக்குத் தெரியும்?''

ஜெயந்தன் பதில் சொல்லாமல் குறும்பாகச் சிரித்தான். அந்தச் சிரிப்பு 'இப்பத்தானே நான் கிளின்டன் கிஸ் பத்தி சொன்னேன் - திரும்பவும் முட்டாள் மாதிரி அதே கேள்வி கேக்கறியே நைனா...' என்றது.

பார்த்திபன் கொஞ்சம் லேட்டாகப் புரிந்து கொண்டான்.

''வாங்க நானும் அந்த மேஜிக் ஷோவை பார்க்கத்தான் வந்திருக்கேன்.''

சொல்லியபடியே தோள் மேல் கைகளைப் போட...
ஜெயந்தன்.

பார்த்திபனுக்கு நெற்றியைச் சுட்டது.

'யார் இவன்? இவனுக்கு எப்படி நம்மைத் தெரி...
ஏதோ பல வருஷம் பழகினது போல பாவனை...
புரிகின்றானே!'

மனதுக்குள் கேள்விகள் சரசரவென்று பெருகி ஓட...

''என்ன பார்த்திபன்... நான் யார்? உங்களை எப்படி...
தெரியும்னுல்லாம் யோசிக்கிறீங்களா?''

கச்சிதமாகக் கேட்டான் ஜெயந்தன். பார்த்திபனு...
கொஞ்சம் சுருக்கென்றது.

'அடேயப்பா... என்னமாக மனசைப் படிக்கிறா...
ஆச்சரியம் தொற்றிக் கொண்டது.

''ஆச்சரியமே படாதீங்க... பத்திரிகை நிருபர்ங்கறது...
ஒரு சி.ஐ.டி. மாதிரி. எல்லோருக்கும் இரண்டு கண்ணுன்னா...
அவனுக்கு மட்டும் இருபது கண்ணு. இல்லேன்னா தொழி...
பண்ண முடியாதே...?''

கேள்வி கேட்ட விதத்தில் நல்ல ஸ்டைல்.

''சரி... இன்னிக்கு கலையரங்கத்துல என்ன நிகழ்ச்சி...?''

''அதான் சொன்னேனே மேஜிக் புரோக்ராம்னு...''

''இதை எதுக்கு என்னை பார்க்கச் சொன்னார் ஆழியா...
சாமியார்...''

''இப்ப நடக்கற எல்லாத்தையும் கேட்டா மேஜிக்...
மாதிரிதானே இருக்கு. அதனால சொல்லியிருப்பார்...''

''நடக்கற எல்லாம்னா?''

''ஒரு தலைமுறையே பாம்பு கடிச்சு அழிஞ்சு...
போய்கிட்டிருக்குங்கறதுல இருந்து, மாணிக்க நாகம் அ...
வாய்ல நாகரத்னம் இருக்குங்கறது வரை எல்லாம்தான்.''

''ஓ... உங்களுக்கு எல்லா விஷயமும் தெரியுமா?''



''தெரியுமாவா... உங்களுக்கு என்ன தெரியணும் கேளுங்களேன். நான் பதில் சொல்றேன்.''

''எனக்கு ஒண்ணுதான் தெரியணும். கவுண்டர் குடும்பமே பாம்பு கடிச்சு இறந்து போனதுக்கு காரணம் சாபமா... இல்லை சதியா?''

''சாபமெல்லாம் இல்லை மிஸ்டர் பார்த்திபன். எல்லாம் சதிவேலைதான்...''

''அப்படித்தான் கவுண்டர் மகன் நாகராஜனே சொல்றார். ஆனா என் கண்ணால பார்த்ததை நான் எப்படி இல்லேன்னு சொல்ல முடியும்?''

''எதை கண்ணால பார்த்தீங்க?''

''ஒரு இச்சாதாரி பாம்பு என்னைப் போலவே வடிவம் எடுத்து வெளியே போச்சு. நான் என் இரண்டு கண்ணால பார்த்தேன்.''

''இன்னிக்கு மேஜிக் ஷோவுல அதைவிட பெரிய பெரிய காட்சியை எல்லாம் பார்க்கப் போறீங்க...''

''அப்படி என்ன மேஜிக்ல காட்டப் போறாங்கறீங்க.''

''ஒரு பெண்ணை நம்ம பன்னீர்தாஸ் இரண்டா அறுக்கப் போறார்! பாக்கப் போறீங்க...

அதேபோல ஒரு மலைப்பாம்பை அப்படியே விழுங்கிக் காட்டப் போறார்.

எல்லாத்துக்கும் மேலா ஒரு சின்ன பெட்டில அவர் ஒளிஞ்சுக்கப் போறார். அதை ஒருத்தர் தூக்கியும் வீசப் போறார். ஆனா பன்னீர்தாஸ் வேறு ஒரு இடத்துல இருந்து வருவார் பார்க்கத்தானே போறீங்க.''

ஜெயந்தன் கண்களைச் சிமிட்டிக் கொண்டு சிரித்தான்.

''இதெல்லாம்தான் மேஜிக்னு தெரியுமே?''

''ஓஹோ.. நீங்க அப்ப இந்த மாதிரி மேஜிக்கை எல்லாம் நம்பத் தயாரா இல்லை. அப்படித்தானே?''

''அது எப்படி மேஜிக்கை நம்ப முடியும்...?''

"அதே மாதிரி ஏன் உங்க பாம்புப் பண்ணையும் ... மேஜிக் நடந்திருக்கக் கூடாது?"

ஜெயந்தன் விஷயத்துக்கு வந்தான். பார்த்திபன் அ... கேட்ட நொடி கண்களை அகலமாகத் திறந்தான்.

"என்ன பார்த்திபன்... கமான் பதில் சொல்லுங்க..."

"கேட்ட கேள்வி புத்திசாலித்தனமா இருக்கு. ஆ... அதை எப்படி மேஜிக்கா எடுத்துக்க முடியும்? மேஜி... பண்றவங்களுக்கு ஸ்பெசிபிக்கா ஒரு இட... திட்டமிடுதலும் வேணும்னு சொல்வாங்களே..."

"நிச்சயமா... ஒரு நிகழ்ச்சிக்கு திட்டமிடல் ரொ... முக்கியம்தான். அதேபோல ஒரு தலைமுறையை... வேரறுக்கவும் பெரிய அளவுல திட்டமிடல் இருக்கத்தா... செய்யும்."

"நான் மறுக்கல. இந்த மாயம் என் பாம்புப் பண்ணை... எதுக்கு நடக்கணும்? எனக்கும் கவுண்டர் குடும்பத்துக்கு... என்ன சம்பந்தம்?"

"நீங்க ஒரு பாம்புப் பண்ணை அதிபர்ங்கற ஒ... காரணம் போறாதா...?"

"அது எப்படிப் போதும்?"

"என்ன பார்த்திபன் புரியாம பேசறீங்க. இப்ப... எல்லாரும் அவ்வளவும் திட்டமிட்ட செயல்னு சொல்லு... போதும் நான் என் கண்ணால பார்த்தேன். இச்சாதாரி நாக... இருக்கறது உண்மை அது என்னைப் போலவே வடிவ... எடுத்து போயிச்சுன்னு சொல்லிட்டு இல்லையா"

"ஆமா..."

"இப்படி நீங்க சொன்னாதானே கவுண்டர் தொடர்ந்து பயப்படுவார். சாபம்னு நம்புவார்."

ஜெயந்தன் பார்த்திபனை கூர்மையாக்கினான்.

"அப்படின்னா நான் பார்த்ததும் ஒரு மேஜிக் மாதிரி திட்டமிட்ட நிகழ்ச்சிதான்னு சொல்ல வரீங்களா...?"



"நிச்சயமா வாங்க வந்து மேஜிக்கை முதல்ல பாருங்க. அப்ப தெரியும் நம்ம கண்ணை எப்படி எல்லாம் கட்ட முடியும்கறது."

ஜெயந்தன் சொல்லிக் கொண்டே கலையரங்கத்திலுள் நுழைந்தான். நல்ல கூட்டம்!

பார்த்திபனுக்கு எல்லாமே பிரமிப்பாக இருந்தது.

ஜெயந்தனே போய் டிக்கட் எடுத்து வந்தான்.

கான்டீனில் காப்பி வாங்கித் தந்தான்.

"உங்களுக்கு நான் ரொம்ப செலவு வைக்கறேன்னு நினைக்கறேன்."

"அதெல்லாம் ஒண்ணுமில்ல பார்த்திபன். கவுண்டர் குடும்பத்துக்கு நான் ரொம்பவும் கடமைப்பட்டவன். அதனாலதான் கொஞ்சம் தீவிரமாவே இந்த விஷயத்துல இறங்கியிருக்கேன்." அண்ணாமலைங்கற என் மாமாதான் எனக்கு இந்த விஷயங்களை எல்லாம் சொன்னார்.

அப்புறம்தான் தெரிஞ்சது... நான் படிச்ச முடிக்கவே கவுண்டர்தான் காரணம்! அவரோட ட்ரஸ்ட்தான் என் படிப்புக்கு உதவி செஞ்சது அப்படின்றது.

இதனால ஒரு பக்கம் கடமை. மறுபக்கம் நன்றின்னு இரண்டு விஷயங்கள் என்னை இந்த விஷயத்துல இழுத்து விட்டது. அவர் மகன் நாகராஜனை சந்திச்சேன். அவர் ரொம்ப பயத்துல இருந்தார். நான் தான் தைரியம் கொடுத்தேன். நான் சொல்ற மாதிரி நடந்துக்குங்க. பேசுங்க. அப்புறம் பாருங்கன்னு சொன்னேன்.

அதன்படியே அவரும் பேசினார். பாம்பு கடிச்சா விஷம் ஏறாது.நான் மருந்து சாப்பிட்டிருக்கேன் - உங்களுக்கும் தந்திருக்கேன்னு அவங்க அம்மாகிட்டல்லாம் சொன்னார். ஆனா உண்மை அது இல்லை."

"அப்ப அவர் எந்த மருந்தையும் சாப்பிடலையா?"

''அதே மாதிரி ஏன் உங்க பாம்புப் பண்ணையிலயும் ஒரு மேஜிக் நடந்திருக்கக் கூடாது?''

ஜெயந்தன் விஷயத்துக்கு வந்தான். பார்த்திபன் அதைக் கேட்ட நொடி கண்களை அகலமாகத் திறந்தான்.

''என்ன பார்த்திபன்... கமான் பதில் சொல்லுங்க.''

''கேட்ட கேள்வி புத்திசாலித்தனமா இருக்கு. ஆனா அதை எப்படி மேஜிக்கா எடுத்துக்க முடியும்? மேஜிக் பண்றவங்களுக்கு ஸ்பெசிபிக்கா ஒரு இடமும் திட்டமிடுதலும் வேணும்னு சொல்வாங்களே...''

''நிச்சயமா... ஒரு நிகழ்ச்சிக்கு திட்டமிடல் ரொம்ப முக்கியம்தான். அதேபோல ஒரு தலைமுறையையே வேரறுக்கவும் பெரிய அளவுல திட்டமிடல் இருக்கத்தானே செய்யும்.''

''நான் மறுக்கல. இந்த மாயம் என் பாம்புப் பண்ணையில எதுக்கு நடக்கணும்? எனக்கும் கவுண்டர் குடும்பத்துக்கும் என்ன சம்பந்தம்?''

''நீங்க ஒரு பாம்புப் பண்ணை அதிபர்ங்கற ஒரு காரணம் போறாதா...?''

''அது எப்படிப் போதும்?''

''என்ன பார்த்திபன் புரியாம பேசறீங்க. இப்ப எல்லாரும் அவ்வளவும் திட்டமிட்ட செயல்னு சொல்லும் போதும் நான் என் கண்ணால பார்த்தேன். இச்சாதாரி நாகம் இருக்கறது உண்மை அது என்னைப் போலவே வடிவம் எடுத்து போயிச்சுன்னு சொல்லிட்டு இல்லையா''

''ஆமா...''

''இப்படி நீங்க சொன்னாதானே கவுண்டர் தொடர்ந்து பயப்படுவார். சாபம்னு நம்புவார்.''

ஜெயந்தன் பார்த்திபனை கூர்மையாக்கினான்.

''அப்படின்னா நான் பார்த்ததும் ஒரு மேஜிக் மாதிரி திட்டமிட்ட நிகழ்ச்சிதான்னு சொல்ல வரீங்களா...?''



''நிச்சயமா! வாங்க வந்து மேஜிக்கை முதல்ல பாருங்க. அப்ப தெரியும் நம்ம கண்ணை எப்படி எல்லாம் கட்ட முடியுமங்கறது.''

ஜெயந்தன் சொல்லிக் கொண்டே கலையரங்கத்தினுள் நுழைந்தான். நல்ல கூட்டம்!

பார்த்திபனுக்கு எல்லாமே பிரமிப்பாக இருந்தது.

ஜெயந்தனே போய் டிக்கட் எடுத்து வந்தான்.

கான்டீனில் காப்பி வாங்கித் தந்தான்.

''உங்களுக்கு நான் ரொம்ப செலவு வைக்கறேன்னு நினைக்கறேன்.''

''அதெல்லாம் ஒண்ணுமில்ல பார்த்திபன். கவுண்டர் குடும்பத்துக்கு நான் ரொம்பவும் கடமைப்பட்டவன். அதனாலதான் கொஞ்சம் தீவிரமாவே இந்த விஷயத்துல இறங்கியிருக்கேன்.'' அண்ணாமலைங்கற என் மாமாதான் எனக்கு இந்த விஷயங்களை எல்லாம் சொன்னார்.

அப்புறம்தான் தெரிஞ்சது... நான் படிச்சு முடிக்கவே கவுண்டர்தான் காரணம்! அவரோட ட்ரஸ்ட்தான் என் படிப்புக்கு உதவி செஞ்சது அப்படின்றது.

இதனால ஒரு பக்கம் கடமை. மறுபக்கம் நன்றின்னு இரண்டு விஷயங்கள் என்னை இந்த விஷயத்துல இழுத்து விட்டது. அவர் மகன் நாகராஜனை சந்திச்சேன். அவர் ரொம்ப பயத்துல இருந்தார். நான் தான் தைரியம் கொடுத்தேன். நான் சொல்ற மாதிரி நடந்துக்குங்க. பேசுங்க. அப்புறம் பாருங்கன்னு சொன்னேன்.

அதன்படியே அவரும் பேசினார். பாம்பு கடிச்சா விஷம் ஏறாது.நான் மருந்து சாப்பிட்டிருக்கேன் - உங்களுக்கும் தந்திருக்கேன்னு அவங்க அம்மாகிட்டல்லாம் சொன்னார். ஆனா உண்மை அது இல்லை.''

''அப்ப அவர் எந்த மருந்தையும் சாப்பிடலையா?''

''ஆமா... எல்லாம் கப்ஸா... அப்படி எல்லாம் மருந்துகளே கிடையாது. இந்த உலகம் ஆனாலும் மோசம். பாம்புகளை வெச்சுகிட்டு நீங்க எவ்வளவு பொய் சொன்னாலும் நம்பிட்றாங்க.''

ஜெயந்தன் தலையில் அடித்துக் கொண்டான். பார்த்திபனுக்குப் பிரமிப்பாக இருந்தது.

''ஆமா எதுக்காக அப்படி சொல்லச் சொன்னீங்க?''

''அப்பதானே பாம்பை விட்டு கொலை செய்யற எதிரி வேறு முறைக்கு மாறுவான்?''

''ஐ. சீ.''

பார்த்திபன் ஆமோதித்தபோது பெல் அடித்தது. ''வாங்க போய் நிகழ்ச்சியைப் பார்க்கலாம். நிகழ்ச்சியில் உங்களுக்கு ஒரு பெரிய ஆச்சரியமும் அதிர்ச்சியும் காத்திருக்கு...''

சஸ்பென்சுடன் அழைத்துக் கொண்டு போனான். அரங்கம் நிரம்பி வழிந்தது. இந்த நாட்டில் மேஜிக் நிகழ்ச்சிகளுக்கெல்லாம் இத்தனை கூட்டம் வருகிறதா என்கிற கேள்வியும் ஆச்சரியமும் அவனிடம் பொங்கி வழிந்தது.

''பன்னீர்தாஸ் ஒரு பிரமாதமான மேஜிக் நிபுணர். அவர் ஒரு பஸ்ஸையே அது ஓடிகிட்டிருக்கும்போதே மறைஞ்சு போகச் செஞ்சிடுவார். எல்.ஐ.சி. கட்டிடத்தையே மறைச்சு அங்க ஒரு பெரிய ஆலமரத்தை எல்லாருக்கும் காட்டப் போறதா சொல்லிக்கிட்டிருக்காரு.''

சீட்டை தேடிப் பிடித்து அமர்ந்த ஜெயந்தன் பன்னீர்தாஸ் பற்றி சொல்லிக் கொண்டே போனான்.

''ஆமா நான் சாமியாரைப் பார்த்தது உங்களுக்கு எப்படி தெரியும்? சாமியார் சொன்னாரா...?''

பார்த்திபன் உறுத்திக் கொண்டேயிருந்த அந்த கேள்வியைக் கேட்டான். சிரித்தான் ஜெயந்தன்.



சட்டென்று விளக்குகள் அணைந்து காட்சிகள் ஆரம்பமாகத் தொடங்கியது.

மேடையில் பன்னீர்தாஸ் என்னும் அந்த மேஜிக் நிபுணர் வண்ணமயமான உடையில் தலையில் நீண்ட மேஜீஷியன் குல்லாயுடன், வெல்வெட் கோட்டுடன் பிரசன்னமாகி எல்லோரையும் வணங்கினார்.

பார்த்திபனுக்கு அவரை எங்கேயோ பார்த்தது போலவே இருந்தது. பேச ஆரம்பிக்கவும் அந்தக் குரல் கூட இதற்கு முன் எங்கேயோ கேட்டது போல இருந்தது.

கச்சிதமாக அதைப் புரிந்து கொண்டது போல கேட்டான் ஜெயந்தன்.

''ஆமாம் ஜெயந்தன்...''

''குரல் கேட்ட மாதிரியே இருக்குமே...''

''ஆமாம்... ஆமாம்.''

''ஆனா யார்னு ஞாபகம் மட்டும் வரமாட்டேங்குது. அப்படித்தானே?''

''எக்ஸாட்லி.''

''கொஞ்சம் வைத்தியரை ஞாபகப்படுத்திக்கங்க பார்ப்போம்'' எடுத்துக் கொடுத்தான் ஜெயந்தன்.

''வைத்தியர்... வைத்தியர்... யா இவர் வைத்தியரே தான். எப்படி கண்டு பிடிச்சீங்க...?''

''அதான் சொன்னேனே... பத்திரிகைகாரங்களுக் கெல்லாம் இருபது கண்ணுன்னு. சரி சரி நிகழ்ச்சியைப் பாருங்க..''

அந்த நொடி ஜெயந்தன் ஒரு பெரிய கில்லாடியாகத் தான் பார்த்திபன் கண்களுக்கு தெரிந்தான். ஆனால் அடிக்கடி அவன் நாக்கை வெளியே நீட்டி நீட்டி உதட்டை ஈரப்படுத்தி விட்டுக் கொள்வதுதான் சுத்தமாக பிடிக்கவில்லை.

அவனது பண்ணைப் பாம்புகள்தான் எதற்கெடுத்தாலும் நாக்கை வெளியே நீட்டும். ஈரப்படுத்திக் கொள்ளும்.

பார்த்திபன் மிரட்சியோடு நிகழ்ச்சியைப் பார்க்கத் தொடங்கினான்.

வைத்தியர் என்று பார்த்திபனும், ஜெயந்தனும் ஐடெண்டி செய்த பன்னீர்தாஸ் மேஜிக்கில் பிய்த்து உதற ஆரம்பித்தார். ஒரு பாம்பைப் பிடித்து அப்படியே உருவினார். அடுத்த நொடியே அது முருங்கைக்காய் ஆனது. அந்த முருங்கைக்காயையும் தூக்கி கூட்டத்தில் விட்டெறிந்தார்!

ஒரே களேபரம்... பரபரப்பு...!

''பாருங்க... நல்ல பாருங்க நீங்க பாக்கற எல்லாம் உண்மையா பொய்யான்னு அப்புறமா, சொல்லுங்க...''

ஜெயந்தன் காதோரத்தில் கிசுகிசுத்தான். ''இதுல என்ன சந்தேகம்... எல்லாம்தான் மேஜிக்னு தெரியுமே. பொய் தான்...''

அதே கிசுகிசுக்குரலில் பதில்.

''அப்ப இந்த ஆள் எவ்வளவு பெரிய புத்திசாலி.''

''நிச்சயமா... இவன்தான் கவுண்டர் குடும்பத்தை பழி வாங்கறவனா?''

''இன்னுமா இந்தக் கேள்வி..?''

''எதுக்கு பழிவாங்கறான்?''

''அது போகப் போகத் தெரியும்.''

''போகப் போகன்னா...''

''அதிகபட்சம் இரண்டு நாள்ல...''

''இரண்டு நாள்லயா?''

''ஆமாம்... இரண்டே நாள்ல தெரிஞ்சிடும்.''

ஜெயந்தன் எந்த நம்பிக்கையில் அப்படிச் சொன்னான் என்று தெரியவில்லை. ஆனால் பார்த்திபன் அந்த நொடியிலிருந்தே, எப்பொழுதடா நாப்பத்தெட்டு மணி நேரம் கழிந்து முடியும் என்று எண்ணத் தொடங்கி விட்டான்.



# 13

**'அதெப்படி வைத்தியர் மேஜிக் நிபுணராகவும், வைத்தியராகவும் இரட்டை வேடம் போட முடியும்?' கேள்வி பார்த்திபனை கொத்திக் குடைந்தது.**

**'அதெப்படி இந்த இரட்டை வேடதாரி பலப்பல வருடங்களாக ஒரு குடும்பத்தை பழி வாங்க முடியும்? அடுத்த கேள்வி தீச்சூடுபோல பரவித் தகித்தது.**

**ஆனால் முக்கியமான ஒரு கேள்வி மட்டும் தோன்றவே யில்லை. அது... ''ஜெயந்தன் எப்படி இந்த பிரம்ம ரகசியத்தைக் கண்டுபிடித்தான்?'' என்பதுதான் அது.**

இரண்டு நாள் முடியப் போகிறது.

திருப்பதிசாமி கவுண்டர் பயங்கர டென்ஷனில் இருந்தார்.

எந்த காரணத்தைக் கொண்டுத் தனியாக வெளியே போகக் கூடாது என்று நாகராஜுக்கு பலத்த காவலை வேறு போட்டுவிட்டார்.

நாகராஜ் அந்த பங்களா வீட்டில் சுற்றிச் சுற்றி வந்தான்.

திருப்பதிசாமி கவுண்டரையும், பிரகதாம்பாளையும் ஒரு வட்டம் சுற்றிச் சுற்றி வந்தது.

விஷயம் போலீஸ் வரை போய்விட்டது.

எஸ்.பி. வடிவேலு ஒரு பட்டாலியனோடு வந்து பார்த்துவிட்டுப் போனார்.

வைத்தியர் இரண்டு நாள் என்று கெடு விதித்து விட்டு போனதைக் கேள்விப்பட்டு அவரையும் போய் பார்த்தார்.

பணம்தான் பாதாளம் வரை பாயுமே? அது எஸ்.பி. ரூபத்தில் வைத்தியர் மேல் கர்ண கடூரமாகப் பாய்ந்தது.

''என்ன வைத்தியரே... கவுண்டர் ஃபேமிலியை மிரட்டினீர் போலிருக்கே?''

''மிரட்டலை சார். உள்ளதைச் சொன்னேன்.''

''எதுய்யா உள்ளது...? இச்சாதாரியா...''

''ஆமாம்...''

''ஏன்யா, அந்த பாம்பு - எங்ககிட்டல்லாம் வரமாட்டேங்குது?''

''இதை நீங்க அதுகிட்ட கேட்கணும்.''

''இருந்தால்ல வரும்... வந்தால்ல கேக்க முடியும்?''

''இல்லாமலா ஏழு பேர் வரிசையா செத்துப் போனாங்க?''

''பாம்பு பேரால எவனாவது விளையாடியிருக்கலாம் இல்லையா?''

''அப்படி நீங்க நினைச்சா யார்னு கண்டு பிடியுங்க பார்ப்போம்.''

''என்ன சவாலா... கண்டு பிடிக்கத்தானே போறேன். எப்பவுமே முடியாததை முடிச்சே பிரமோஷன் வாங்கி எஸ்.பி.யானவன் நான். இங்க கவுண்டர் குடும்பத்து மர்மத்தையும் கண்டுபிடிக்கத் தான் போறேன்.''

''நல்லது... கண்டுபிடிச்ச பிறகு சொல்லியனுப்புங்க. நானும் அப்ப வந்து பாராட்டறேன்.''

வைத்தியர் துளி கூட அச்சமின்றி பேசினார். பதட்டமின்றி நடந்து கொண்டார். ஏராளமான ஆச்சரியத்தை அளித்தார். எஸ்.பி.க்கே கொஞ்சம் டல்லடித்தது.

'மிரட்டலாக பேசினால் வைத்தியர் வழிக்கு வருவார் என்று நினைத்தது தவறோ?'

கேள்வியின் எதிரொலியாக பணிவுக்கு மாறினார்.

''ஆமாம். நாகரத்தினம் வெச்சிருக்கீறாமே.''

''ஆமாம்.''

''எங்க காட்டுங்க பார்க்கலாம்.''

எடுத்துக் காட்டினார். மின்னியது.

''இந்த கருநீலமா நாகரத்தினம்..''



''ஆமாம். இது கைல இருந்தா எந்தப் பாம்பும் எதுவும் செய்யாது.''

''நிஜமாவா?''

''பாக்கறீங்களா?''

''எப்படி?''

எஸ்.பி. எதிரில் தன் வீட்டில் உள்ள அத்தனை பாம்புகளையும் எடுத்து வெளியே போட்டார். குறிப்பாக அந்தக் கருநாகத்தையும். அது கல் உள்ளிருக்கும் வேதனையோடு இரண்டடிக்கு மேல் எம்பி நிமிர்ந்து சீறியது.

எஸ்.பிக்குள் உதறல் எடுக்கத் தொடங்கியது.

''பயப்படாதீங்க. கிட்டப் போங்க. உங்கள எந்தப் பாம்பும் எதுவும் பண்ணாது...''

''இல்ல வைத்தியரே... எதுக்குய்யா விஷப்பரிட்சை.''

''விஷப்பரிச்சைதான். சக்தி தெரிய வேண்டாமா? இந்த நாகரத்தினம் கைல இருக்கும் போது எந்த பாம்பும் எதுவும் செய்யாது. மிரண்டு திரும்பி ஓடும் பாருங்க.''

எஸ்.பி. கையில் இருந்து கல்லை வாங்கிக் கட்டை விரலுக்கும் ஆள்காட்டி விரலுக்கும் நடுவில் பிடித்துக் கொண்டு ஒவ்வொரு பாம்பின் முன்னும் கொண்டு சென்றார்.

பாம்புகள் தழைந்து ஊர்ந்து விலகிப் பதுங்கத் தொடங்கின. எஸ்.பி. கண்கள் காதுவரை விரிந்தது.

''பாத்தீங்களா... இதான் நாகரத்தினத்தோட மகிமை. ஆனால் கவுண்டர் மகன் நாகராஜுக்கு கொடுத்து வைக்கல. அவன் நாக்குல சனி. அதான் என்னை எடுத்தெறிஞ்சு பேசிட்டான். நான் ஏமாத்தறதாவும் நினைச்சிட்டான்.''

''அதனால என்ன... அதான் மருந்து சாப்ட்டு எந்த விஷமும் எதுவும் செய்ய முடியாதபடி உடம்பை மாத்திக்கிட்டாங்களே...?''

''இச்சாதாரி பாம்பாதான் வந்து கடிக்கும்னு யார் சொன்னது? அது புலி சங்கமா கூட வரலாமே...''

''ஓ... அப்படி கூட மாறுமா அது?''

''அதுதான் அந்த பாம்போட சக்தி...''

''வைத்தியரே.. கண்ணால பாத்தா கூட என்னால நம்ப முடியாதுய்யா...''

''நாம யார் நம்பி அதுக்கு என்ன ஆகப்போகுது. இயற்கை கிட்ட எவ்வளவோ மர்மங்கள். எல்லாமா நமக்குத் தெரிஞ்சிருக்கு?''

''அப்ப இச்சாதாரி வேற வடிவத்துல வந்து கவுண்டர் குடும்பத்தை அழிக்கும்னு சொல்றீங்களா?''

''ஆமாம். அத தடுக்கத்தான் உயிரை கைல பிடிச்சுகிட்டு இந்த பாம்பை கண்டுபிடிச்சேன். நாகரத்தினத்தையும் எடுத்தேன். என் திறமையையோ அக்கறையையோ பாராட்டாம அந்த நாகராஜன் அவசரப்பட்டுப் பேசிட்டான்.''

''சரி இள ரத்தம்... பேசிட்டான்! ஆமா அது எப்படி இரண்டு நாள்ல சாவான்னு அவ்வளவு கச்சிதமா சொன்னீங்க. உங்களுக்கெப்படி நாள், நேரமெல்லாம் தெரியும்?''

எஸ்.பி.யின் கச்சிதமான மடக்கல் வைத்தியரைக் கொஞ்சம் திணற அடித்தது. இருந்தாலும் சமாளித்தார்.

''நான் சும்மா குத்துமதிப்பா சொன்னேன்.''

''குத்து மதிப்பாவா... இல்ல சொத்து மதிப்பாவா?''

எஸ்.பி. விபரமாக எங்கோ நெருங்கிக் கொண்டு வருவதை வைத்தியரும் புரிந்து கொண்டு வழிய ஆரம்பித்தார்.

''என்ன எஸ்.பி. சார்... சொத்து மதிப்பு, அது இதுங்கறீங்க. நான் கவுண்டர் குடும்பத்தோட வைத்தியன். அவங்க நல்லதுக்காக பாடுபட்றவன். என்னை ஏதோ ஒரு குற்றவாளிய பாக்கற மாதிரி பாக்கறீங்களே.''

எஸ்.பி.யிடம் சன்னமான ஒரு சிரிப்பு. கூடவே கேள்வி.



''ஆமா... கவுண்டர் குடும்பத்தோட நல்லதுக்கு பாடுபட்றதா சொல்றீங்களே. உங்க தொழிலே வைத்தியம் பாக்கறது மட்டும்தானா?''

''ஆமா.. வேற என்ன?''

''இல்லையே நீங்க வேற சில தொழில்களும் செய்யற மாதிரி தெரியுதே...''

''நானா... என்ன உளர்றீங்க?''

எஸ்.பி. இனி பேசக் கூடாது என்கிற மாதிரி ஒரு புகைப்படத்தை எடுத்துப் போட்டார்.

அதில் வைத்தியர் மேஜிஷியனாக காட்சி தரும் தோற்றம்.

''இவன் என் தம்பியாச்சே!'' என்றார் வைத்தியர் அடுத்த நொடியே.

''தம்பியா... இப்ப எங்க இருக்கார்?''

''கோயமுத்தூர்லதான். வேணும்னா போன் நம்பர் தரட்டுமா. பேசிப்பாக்கறீங்களா? நாங்க இரட்டைப் பிறவிங்க.''

எஸ்.பி. முகத்தில் தடுமாற்றம்.

''அது சரி... இந்த கேள்வி எல்லாம் எதுக்கு?''

''காரணமாகத்தான்...''

''என்ன காரணமாகத்தான். மேஜிக் தெரிஞ்ச என் தம்பிதான் இச்சாதாரியா நடிச்சு ஏமாத்தறான்னு யாராவது சொன்னாங்களாக்கும்?''

எஸ்.பி.க்கு கொஞ்சம் கிர்ர்ரடித்தது.

''என்ன எஸ்.பி. சார் சும்மா சொல்லுங்க.''

''அது... அது...''

''என்ன அது இதுன்னுகிட்டு. இப்ப நான் ஒரு உண்மையை உங்களுக்குச் சொல்லட்டுமா?''

''என்ன?''

''இதை யார் உங்களுக்கு சொன்னது?''

''அதெல்லாம் உங்களுக்கெதுக்கு வைத்யரே...''

''என்ன எஸ்.பி.சார். என்னை நீங்க நூறு கேள்வி கேட்கலாம். உங்களை நான் ஒரு கேள்வி கேட்கக் கூடாதா?''

''எனக்குக் கடமையும், ரைட்சும் இருக்கு. அ... புரிஞ்சுக்கோங்க.'

''எது இருந்தாலும் இல்லேன்னாலும் உண்மைன்னு ஒண்ணு கட்டாயம் இருக்கணும். எஸ்.பி. சார்.''

''புரியும்படி சொல்லுங்க வைத்தியரே...''

''புரியும்படியே சொல்றேன். நான் மட்டும் நாகரத்தினத்தை கவுண்டர் குடும்பத்துகிட்ட கொடுத்துட்டா அப்புறம் அவங்க்ள பழிவாங்கறதுங்கறது முடியவே முடியாதுன்னு அந்த இச்சாதாரிதான் மனுஷ ரூபத்துல வந்து உங்ககிட்ட என்னைப் பத்தி இல்லாத பொல்லாததெல்லாம் சொல்லியிருக்கு.''

எஸ்.பி. சொல்ல முடியாத அளவுக்கு அதிர்ந்தார்.

''நான் சொல்றதையும் கொஞ்சம் கேளுங்க. சொன்ன நபர் யார்? அவனை என் எதிர்க்கக் கொண்டு வாங்க. நான் அவன் இச்சாதாரியா இல்லையான்னு காட்றேன். அதே சமயம் அவன் சொன்னது பொய்னு என் தம்பியையே கூட்டிகிட்டு வந்து நான் நிரூபிக்கிறேன்.''

எஸ்.பி குழம்பத் தொடங்கினார். வைத்தியரைப் பிடித்து நெருங்கினால் உண்மை தெரியும் என்று நம்பியது வாஸ்தவம்தான். ஆனால் அந்த உண்மை இப்படியா நேர் எதிராக இருக்க வேண்டும்?

''என்ன யோசிக்கிறீங்க. நான் வைத்தியன். கவுண்டர் குடும்பத்தை கொல்ல நினைச்சா அதுக்கு எதுக்கு எனக்கு நாப்பது ஐம்பது வருஷம்? எதுக்கு இச்சாதாரிங்கற வேஷம்? ஒரு குந்துமணி அளவு பாஷாணம் போதுமே...? மருந்துன்னு சொல்லிக் கொடுத்தா சாப்பிட மாட்டாங்களா?



இப்படியா சுத்தி வளைச்சு மூக்கைத் தொடுவேன். யோசியுங்க நல்லா...''

வைத்தியரின் கேள்வியிலும் பொறி பறந்தது. வாஸ்தவம்தான் என்கிற உண்மை பளிச்சென்று மின்னியது.

கூடவே தனக்கு எல்லா விஷயங்களையும் சொல்லி தன்னை மோடிவேட் செய்த ஜெயந்தனின் நினைவும் வந்தது.

'ஜெயந்தா நீ பத்திரிகையாளனா? இல்லை நீதான் வைத்தியர் சொல்கிற மாதிரி இச்சாதாரியா?'

எஸ்.பிக்கு நெற்றிப் பொட்டில் நமைச்சல் எடுத்து வியர்த்து வடியத் தொடங்கியது.

வைத்தியர் அதைப் பார்த்து ரசித்துச் சிரித்தார். சிரித்த படியே கேட்டார்.

''என்ன எஸ்.பி. சார், யார் சொல்றத நம்பறதுன்னு தெரியலியா?''

''ஆமாம்... அதே சமயம் இது எப்படி சாத்யம்னும் குழப்பமா இருக்கு...''

''எல்லா குழப்பமும் தீர்ந்துடும். செல்ஃபோன் கைல இருக்கா?''

''இருக்கு.''

''உங்க ஆட்களுக்கு போன் பண்ணி என்னப் பத்தி உங்ககிட்ட கம்ப்ளைண்ட் பண்ணின நபர் இருக்கானான்னு கேளுங்க. இருந்தா இங்க என் வீட்டுக்குக் கூட்டிக்கிட்டு வரச் சொல்லுங்க. தைரியம் இருந்தா என் வீட்டுக்கு வரட்டும். அப்ப தெரிஞ்சிடும் உண்மை...''

வைத்தியரிடம் ஆக்ரோஷம் வெளிப்பட்டது. எஸ்.பி.க்கும் அது நல்ல யோசனையாகவே பட்டது. செல்லைக் கையிலெடுத்தார். ஏ.எஸ்.பி. நிஜாம் ஞாபகம் வந்தது.

''நிஜாம் நான் எஸ்.பி. சிவபாஸ்கர் பேசறேன்.''

''சொல்லுங்க சார்...''

''அந்த ரிப்போர்ட்டர் ஜெயந்தன் எங்க இருந்தாலும் பிடிங்க. அவனோட நீங்க வைத்தியர் மாசிலாமணி வீடுக்கு வரணும்.''

''ஓ.கே. சார்...''

செல்லை முடக்கிவிட்டு நிமிர்ந்தார் எஸ்.பி.

''தகவல் கொடுத்துவிட்டேன். அவனை பிடிச்சு இழுத்துக்கிட்டுவர கொஞ்சம் டயமாகலாம்.''

''எவ்வளவு நேரமானாலும் சரி, கூட்டிக்கிட்டு வாங்க.''

''ஆனா ஒண்ணுமட்டும் உண்மை. அவனை நீங்க கூட்டிக்கிட்டு வர முடியாது. அவனும் வரமாட்டான்.

''பார்ப்போம்... நீங்க சொன்னது போல அவன் வரமறுத்தா அவன்தான் இச்சாதாரின்னு ஒத்துக்கறேன்.''

''ஜாக்கிரதை எஸ்.பி. சார். அவன் எந்த வடிவமும் எடுக்க முடிஞ்சவன். உண்மையைத் தெரிஞ்சுகிட்டா உங்க கூட்டத்தையும் அவன் சும்மா விட மாட்டான். எச்சரிக்கை.''

வைத்தியர் எச்சரிக்கை வேறு செய்தார்.

''என்ன வைத்தியரே கூட்டிகிட்டு வாங்கன்னும் சொல்றீங்க. அதே சமயம் வரமாட்டான்... அப்படி இப்படின்னும் சொல்றீங்க. மீறி இழுத்துகிட்டு வந்தா இழுத்துகிட்டு வர்றவங்களுக்கும் ஆபத்துன்னா என்ன அர்த்தம்?''

''நான் உள்ளதைச் சொல்றேன். நல்லது கெட்டது எல்லாத்தையும் சொல்லிடணுமில்ல...''

எஸ்.பி. தாடையை தடவிக் கொண்டார்.

வைத்தியர் சொன்னதால் உருவான எச்சரிக்கை ஒருபுறம் புழுவாக நெளிந்தது. மறுபுறம் வைத்தியர் ஒரு முட்டாள்தனமான நம்பிக்கையை வெளிப்படுத்துகிற மாதிரியும் தோன்றியது.

இருந்தும் எச்சரிக்கையாக இருப்பது புத்திசாலித்தனம் என்று தோன்றியது.



திரும்பவும் செல்ஃபோனைத் தட்டி ஏ.எஸ்.பி நிஜாமைப் பிடித்தார்.

''நிஜாம்... அந்த ஜெயந்தனை பிடிக்கும்போது கொஞ்சம் எச்சரிக்கையா இருங்க. அவன்தான் இச்சாதாரி நாகம்னு ஒரு டவுட் இருக்கு...''

மறு முனையில் நிஜாம் களுக்கென்று சிரித்து விட்டார்.

''என்ன சிரிக்கிறீங்க.''

''பின்ன என்ன சார், நீங்களும் இச்சாதாரி அது இதுன்னுகிட்டு...''

''ஒரு எச்சரிக்கைதான்...''

''எப்படி சார்... எப்படி..? சைன்ஸ் ஃபிக்ஷன்ல கூட இந்த மாதிரி வடிவ மாற்றங்கள் கற்பனை செய்யப்பட்டதில்ல சார்.''

''வாட் டு யூ மீன்...?''

''எல்லாம் பூச்சுத்தல்.''

''இல்ல நிஜாம்! வைத்தியர் பேசியதை கேட்டா நீங்களே மாறிடுவீங்க.''

''சார், ஆயிரம் பேர் ஆயிரம் சொல்லட்டும். நமக்கு பகுத்தறிவுன்னு ஒண்ணு இருக்குல்ல.''

''சரி... சரி... நீங்க அந்த ஜெயந்தனோட இங்க வாங்க. அப்ப எது பகுத்தறிவு? யார் சொல்றது உண்மைன்னு தெரிஞ்சிடும்.''

''ஓ.கே. சார்.. அவரைப் பிடிக்கத்தான் இப்ப போய்க்கிட்டிருக்கேன்.''

''குட்... ஒரு அரைமணி நேரத்துல உங்களை எதிர்பார்க்கறேன்.''

செல்ஃபோனை முடக்கிவிட்டு திரும்பவும் வைத்தியரை பார்த்தார்.

வைத்தியர் முகத்தில் வெறிப்பு. கூடவே கேள்வி.

''என்ன உங்க சகாங்க நம்ப மாட்டேங்கறாங்களா?''

''யார்தான் நம்புவாங்க சொல்லுங்க பார்ப்போம். கண்ணால பார்த்தாதான் இந்த விஷயத்துல நம்பிக்கை வரும்.''

அப்பொழுது எஸ்.பி.யின் செல்ஃபோன் சிணுங்கியது. காதைக் கொடுத்தவருக்கு கண்ணில் பீதி வழிந்தது.

''என்ன சார்?''

''அந்த ஜெயந்தன் இப்ப கவுண்டர் வீட்ல அவர் மகன் நாகராஜனோட இருக்கானாம்.''

''போச்சுடா.. நான் நினைச்சேன். அதே மாதிரி நடக்கப் போகுது.''

''என்ன வைத்தியரே சொல்றீங்க?''

''இந்த இச்சாதாரிகளே எப்பவும் இப்படித்தான். எப்படியாவது கிட்ட நெருங்கிடுவாங்க. இன்னிக்கு அந்த நாகராஜ் கதை முடியப் போறது நிச்சயம்.''

வைத்தியர் பரபரத்தார்.

''சரி இப்ப என்ன பண்ணலாம்கறீங்க.''

''வாங்க கவுண்டர் வீட்டுக்கு போவோம். என்னைப் பார்த்ததும் அவன் ஓடிப் போறத பார்த்து உண்மையை தெரிஞ்சுக்குங்க.''

இருவரும் கிளம்பினார்கள். வைத்தியர் ஞாபகமாக அந்த நாகரத்தினத்தை எடுத்துக் கொண்டார்.

## 14

**'பார்த்திபன் உச்சபட்ச பரபரப்பில் இருந்தான். உண்மை தெரியப் போகிறதே... பல வருட மர்மம் ஒன்றின் முடிச்சு அவிழப் போகிறதே?'**

கவுண்டர் வீடே அல்லோல கல்லோலத்தில் இருந்தது. ஓயாமல் சப்தமிடும் தொலைபேசி, வந்து சென்ற



வண்ணமிருக்கும் உறிவினர்கள். மெயின் கேட்டிலிருநுது கொல்லைக் கதவு காவலிருக்கும் வேலைக்காரர்கள் என்று மொத்த வீடும் 'ஜே ஜே' என்று இருந்தது.

தெரியாத்தனமாக அந்த பக்கம் வந்து விட்ட அரணை ஒன்றின் முகத்தைப் பார்த்து அதைப் பாம்பு என்று நினைத்து இழுத்துப் போட்டு அடித்து சட்னியாக்கி விட்டார்கள். வெகு தூரத்தில் ஒரு வேப்பமரம் இருந்தது. அதில் ஒரு பறவை வந்து உட்கார்ந்ததைக் கூட அனுமதிக்கவில்லை.

கவுண்டரும் டென்ஷனில் முறுக்கேறிப் போயிருந்தார். அவர் அருகிலேயே உட்கார்ந்து கொண்டிருந்தான் ஜெயந்தன்.

''தைரியமா இருங்க கவுண்டரே... உங்க பிரச்சினை ஒட்டு மொத்தமா தீரப் போகுது. வைத்தியர் வரட்டும். உண்மை தெரிஞ்சிடும் பாருங்க...''

கவுண்டர் அவனை ஒரு மாதிரிப் பார்த்தார். நாக்கை வெளியே நீட்டி நீட்டி ஈரப்படுத்தியபடி இருந்தான்.

அதைப் பார்த்த நொடி செல்ஃபோனில் காதோரமாக எஸ்.பி. சிவபாஸ்கர் சொன்னதுதான் ஓடியது.

''அந்த ஜெயந்தனையும் நம்பிட வேண்டாம். அவன் கிட்ட வைத்தியர் தான் குற்றவாளிங்கற மாதிரி பேசிட்டு இருங்க. நான் வைத்தியரோட வந்துகிட்டிருக்கேன். உங்களைச் சுத்தி ஆட்கள் இருக்கறதால அவனால உங்கள ஏதும் பண்ண முடியாது.

நீங்க ரொம்ப தைரியமா இருக்க வேண்டிய நேரம் இது. உங்க மகன் நாகராஜனை மட்டும் எச்சரிக்கையா தனியா இருக்கச் சொல்லுங்க.''

எஸ்.பி. சொன்னதற்கேற்ப நாகராஜனை தனியே கழட்டி விட்டு விட்டார். மாடியில் அவன் அவனது பிரைவசி அறையில் இருந்தான்.

கவுண்டருக்கு அவரையும் மீறி வியர்த்து வடிந்து கொண்டிருந்தது. வீடு முழுக்க நாகதாளிவேரின் வாசனை

ஊடுருவியிருந்ததால் நிச்சயம் ஜெயந்தன் இச்சாதாரியாக இருக்க முடியாது என்றும் மனது நம்பியது.

இந்த வாசனைக்கு எந்த பாம்பும்தான் கிட்டே வராதே?

''என்ன கவுண்டரே... உங்களைப் பார்த்தாலே எனக்கு ரொம்ப பரிதாபமா இருக்கு. ஐ திங்க்.... நீங்க என்னையே சந்தேகப்பட்டுகிட்டிருக்கீங்கன்னு நினைக்கறேன்.''

கச்சிதமாகக் கேட்டான் ஜெயந்தன்.

''சேச்சே.... அதெல்லாம் ஒண்ணுமில்ல.'' சமாளித்தார் கவுண்டர்.

''எல்லாம் எனக்குத் தெரியும் கவுண்டரே. நானே இச்சாதாரியா இருக்கலாம்னு கூட உங்களுக்கு யாராவது சொல்லியிருக்கலாம். ஆனா எனக்கு அதைப்பத்தி கவலையோ, பயமோ துளி கூட கிடையாது. இச்சாதாரியெல்லாம் கதைல மட்டும்தான்.

வரட்டும் சொன்னவங்க வரட்டும். நான் யார்னு நிரூபிக்கிறேன்.

இப்ப கூடச் சொல்றேன். அந்த வைத்தியர் இங்க வரவே மாட்டார் பாருங்க. வந்தா அவர் சாயம் வெளுத்துப் போயிடும்ல...?''

ஜெயந்தன் பேசுவதை நம்புவதா, இல்லை எஸ்.பி. போனில் சொன்னதை நம்புவதா என்று கவுண்டருக்குள் ஒரு யுத்தமே நடந்தபடி இருந்தது.

பார்த்திபன் எல்லாவற்றையும் பார்த்தபடி இருந்தான்.

கவுண்டருக்கும் அவ்வப்போது தைரியம் தந்து கொண்டிருந்தான்.

''கவுண்டரே... இத்தனை நாள்ல இப்படி யாரையும் நீங்க சந்தேகப்பட்டதே இல்லை. இப்ப ஒருத்தருக்கு இரண்டு பேர் மேல சந்தேகம் வந்துருக்கு. இது நல்லதுக்குத்தான்.

பல நாள் திருடன் ஒரு நாள் அகப்படுவான்கற மாதிரி இன்னிக்கு இவங்க இரண்டு பேர்ல ஒருத்தன் நிச்சயமா நம்மகிட்ட மாட்டப் போறான். எனக்கென்னமோ வைத்தியர் மேல தான் சந்தேகம். நீங்க வேணும்னா பாருங்க எஸ்.பி. அய்யாவால வைத்தியரை இங்க கூட்டிக்கிட்டு வர முடியாது.



வழியிலேயே அவர் எஸ்.பி.க்கு தண்ணி காட்டிட்டு தப்பிச்சு ஓடிடுவார். இச்சாதாரியும் இல்ல ஒரு எழவும் இல்லைன்னு அப்ப தெரிஞ்சிடும் பாருங்க.''

பார்த்திபன் சொல்லிக் கொண்டிருக்கும் போதே, வைத்தியர், எஸ்.பி. இருவரும் அந்த பங்களாவினுள் பிரவேசிக்கத் தொடங்கியிருந்தார்கள்.

பார்த்திபன் நெற்றியை தேய்த்துக் கொண்டான். ஜெயந்தன் எகிறி எழுந்தான். கவுண்டர் ஓடி வந்தார். பிரகதாம்பாளும் சேர்ந்து ஓடி வந்தாள்.

எல்லோரும் சூழ்ந்து கொண்டனர். பெரிதாக இடி இடித்து மின்னல் வெட்டி மழை பொழிந்து வெள்ளம் ஓடப் போகிறது என்று நினைத்திருந்ததற்கு நேர்மாறாக வைத்தியர் நேராக ஜெயந்தன் எதிரில் வந்து நின்றார்.

உள்ளங்கையில் இருந்தது அந்த நாகரத்தினம்.

நேராக நீட்டினார். ஜெயந்தன் சிரித்தான். ''இந்த கண்ணாடி கல்ல எதுக்கு காட்றீங்க வைத்தியரே?'' என்று எதிர்க் கேள்வி கேட்டான்.

''இதுவா கண்ணாடி கல்லு..? நாகரத்தினம்டா! உன்னை ஓட ஓட விரட்டப் போற நாகரத்தினம். ஏ இச்சாதாரி இனி உன் நாடகம் இங்க நடக்காது. எவ்வளவு தைரியம் இருந்தா நீ இப்படி ஒரு வடிவம் எடுத்து வீட்டுக்குள்ளேயே வருவே...?''

அவர் கேட்டபடியே நாகரத்தினத்தை அவன் மேல் தூக்கிப் போட்டார். அப்படிச் செய்தால் அவன் திரும்ப பாம்பாகி விடுவான் என்று நினைத்தாரோ என்னவோ?

அவன் அவர் தூக்கிப் போட்டதை பிடித்துக் கொண்டு சிரித்தான்.

''மேஜிக் மேன்... எதுக்கு இப்படி எல்லாம் பண்றீங்க? நான் பத்திரிகைக்காரன். உங்களைக் கண்டு பிடிச்சுட்டேன்கற கோபத்தை இப்படி எல்லாம் வெளிக்காட்றீங்களா? உங்கள ஒரு விஷயத்துக்காக நான் பாராட்டியே தீரணும். பாதி வழியில ஓடிப் போயிடுவீங்கன்னு நினைச்சேன். ஆனா தைரியமா இன்னமும் நின்று தப்பிக்க முயற்சி பண்ணிக்கிட்டிருக்கீங்க பாருங்க. உங்களை பாராட்டியே தீரணும்.''

அவன் பேச்சு வைத்தியரைக் கூட கலக்கியது. ஆச்சரியமாக அவனைப் பார்த்தார். எஸ்.பி.யையும் பார்த்தார்.

''என்ன வைத்தியரே... இந்த கல் பட்டா உண்மை தெரிஞ்சிடும். ஓடி ஒளிஞ்சிடுவான்னு சொன்னீங்க. ஒண்ணும் நடக்கலையே...''

''அதான் எனக்கும் ஆச்சரியமாயிருக்கு...''

''எது ஆச்சரியமாயிருக்கு. நான் மனுஷன்தான்கறதா?''

''ஆமாம்... நான் இச்சாதாரியா இருப்பியோன்னு நினைச்சேன்.''

''நவீன இச்சாதாரி நீங்கதான். உங்க மேஜிக் டேலன்ட் தான். என்னை குத்தம் சொல்றத விடுங்க. குற்றத்தை ஒத்துக்குங்க.''

''நான் எதுக்கு குத்தத்தை ஒத்துக்கணும். நான் என்ன குத்தம் செஞ்சேன்...?''

''கவுண்டர் குடும்பத்தையே வரிசையாக அழிச்சுகிட்டு வந்தீங்களே... அது குற்றம் இல்லையா? கொலைகளை நீங்க செய்துட்டு இச்சாதாரி பாம்பு செய்ததா நம்ப வைச்சீங்களே அது குற்றம் இல்லையா?

ஒரு கண்ணாடி கல்லை நாகரத்தினம்னு சொல்லி விற்க பார்த்தீங்களே, அது குற்றம் இல்லையா? கவுண்டர் எங்க பயப்படாம போயிடுவாரோங்கறதுக்காக பார்த்திபன் மாதிரி ஆளுங்ககிட்ட உங்க மேஜிக் வேலையை காட்டி இச்சாதாரி தான்னு நம்ப வெச்சீங்களே அது குற்றமில்லையா?''



''எல்லாம் பொய்... நான் கவுண்டர் குடும்பத்து விசுவாசி. மேஜிக் பண்ணினது பண்ணிக்கிட்டிருக்கறது என் தம்பி. நானில்லை. இதுவும் அசல் நாகரத்தினம் தான். மாணிக்க நாகத்துகிட்ட இருந்து என் கையால எடுத்தேன். இன்னும் கூட ஒரு கல் என்கிட்ட இருக்கற கருநாகம் உடம்புல இருக்கு. உங்க எதிர்க்கையே வேணா எடுத்துக் காட்றேன். அதே சமயம் இது இருக்கற இடத்துல அந்த இச்சாதாரி வராது. இது இருக்கறவங்களை அதால ஒண்ணும் பண்ண முடியாது...''

வைத்தியர் தீர்க்கமாக பேசினார்.

''எதுக்கு குழப்பம்... நவரத்னங்களை பரிசோதனை செய்யறதுல எக்ஸ்பர்ட். ஒருத்தர் இருக்கார். அவரை நான் வரவழைச்சிருக்கேன். அவர் சொல்லட்டுமே'' எஸ்.பி. கச்சிதமாக நறுக்கினார்.

ஒரு சீனாக்காரரைப் போன்ற தோற்றமுள்ள ஒருவர் அந்தக் கூட்டத்திலிருந்து வெளிப்பட்டார்.

அவர் கைகளில் நாகரத்தினமும் ஒப்படைக்கப்பட்டது. வாங்கிப் பார்த்தவர் முகம் பிரமிப்பில் மின்னத் தொடங்கியது.

''என்ன மிஸ்டர் ஷியான் என்ன சொல்றீங்க? இது அசல் நாகரத்தினமா?'' எஸ்.பி.யின் குரலில் ஆர்வம் அலை மோதியது.

''யெஸ்... திஸ் ஈஸ் ட்ரூ கோப்ராஸ் டைமண்ட்!''

அடுத்த நொடி வைத்தியர் முகம் ராட்சஸ பிரகாசத்துக்குத் தாவியது. ஜெயந்தன் முகத்தில் கரி பூசின மாதிரி ஒரு இருட்டு வந்து கூடு கட்டத் தொடங்கியது.

''பாத்தீங்களா... பாத்தீங்களா.. நான் சொல்லும் போது நம்ப மாட்டேன்னீங்களே... இப்ப என்ன சொல்றீங்க? கவுண்டரே நான் உங்க விசுவாசி கவுண்டரே. அதுல உங்களுக்கு சந்தேகமே வேண்டாம்.''

தடதடவென படபடத்தார் வைத்தியர்.

''வெயிட். வெயிட். மிஸ்டர் ஷியான். இச்சாதாரி நாகம்னு ஒன்னு இருக்கா. அது இந்த நாகரத்தினத்தை பார்த்தா பயப்படுமா?'' எஸ்.பி. சிவபாஸ்கர் அந்த சீனாக்காரரை நிமிண்டி விட்டார்.

''நோ... அப்படி ஒரு பாம்பு இருக்க வாய்ப்பே இல்லை. ஐநூறு வருஷமா பாம்புகளை பிடிச்சு வளர்த்து அதுகிட்ட விஷம் எடுத்து மருந்து தயாரிக்கறதுதான் எங்க குலத் தொழில். எனக்கு தெரிஞ்சு இந்த உலகத்துல இரண்டாயிரத்துக்கும் மேல பாம்புகள்ள ரகங்கள் இருக்கு. அது அங்குல நீளமே உள்ள பூ நாகத்துல இருந்து, இருபது மீட்டர் நீளமுள்ள அனகோண்டா வரை நான் பார்த்திருக்கேன்.

அலாஸ்கா, ஆப்பிரிக்கா, அமேஸான்னு நான் சுத்தாத இடமும் இல்ல. பார்க்காத பாம்புகளும் இல்லை. இச்சாதாரி நாகம்கறது பயங்கர பொய். இந்து மதத்துல நிலவற ஒரு வித நம்பிக்கைதான் அது.'' ஷியான் குரலில் நல்ல உறுதி தொனித்தது.

''அப்படின்னா கவுண்டர் குடும்பத்துல பாம்பு கடிச்சு நடந்த மரணங்களுக்குக் காரணம்?''

''ரொம்ப சிம்பிள்... ஆப்பிரிக்காவுலையும் ஒரு குறிப்பிட்ட குடும்பத்தை பாம்புகள் தான் கடிச்சு கொன்னுச்சு, முதல்ல அதுக்கு யாராலயும் காரணம் கண்டுபிடிக்க முடியல. ஆனா ஒரு ஆராய்ச்சியாளர் தற்செயலா உண்மைய கண்டுபிடிச்சார்.''

''எப்படி?''

''அந்த குடும்பத்து உறுப்பினர் ஒருத்தரை ஒரு பாம்பு கடிச்சுட்டு போயிடிச்சு. இந்த ஆராய்ச்சியாளர் போய் பார்த்தப்போ பிணம்தான் கிடந்தது.

உடனே விஷயத்தை சொல்ல அவர் ஓடி வந்து எல்லாரையும் கூட்டிக்கிட்டு போனார். போய் பார்த்தப்போ அந்த உடம்பை ஒரு மலைப்பாம்பு விழுங்கி முடிச்சிருந்தது. அங்க வேற பாம்புகளும் வந்திருந்தன.



பழி வாங்கணும், கொலை செய்யணும்னு மட்டும் நினைச்சிருந்தா கடிச்சிட்டு போயிருக்கும் பிணத்தை எதுக்கு சூழ்ந்துக்கணும்னு ஒரு கேள்வி வந்தது.

பிறகுதான் விடை தெரிஞ்சது. அவர் உடம்புல சுரக்கற வியர்வை வாசம்தான் பாம்புகள் அவரை தேடி வரக் காரணம் என்று.

கிட்டத்தட்ட எலியோட உடல் வாடையோட அந்த வியர்வை வாடை ஒத்துப் போனது... பாம்புகளுக்கு வாசனை உணர்ச்சி மிக அதிகம். அதனாலதான் சில வேர்கள் இருக்கற பக்கம் அது போகவே போகாது. அதே போல சில வாசனை இருக்கற பக்கத்தை விடவும் விடாது. உதாரணம் தாழம்பூ புதர், ஏலக்கா புதர்.

ஆகையால என்னோட கணிப்பு என்னன்னா... கவுண்டர் ஃபேமிலில அப்பப்ப சிலர் பாம்பு கடிபட்டு சாக இந்த வியர்வை மாதிரி பொதுவான ஏதோ ஒரு வாசனை காரணமா இருக்கலாம். அதுக்காக வரும் பாம்புதான் இரைன்னு நினைச்சு கடிச்சிடுது. மற்றபடி இச்சாதாரி... அது மாய வடிவம் எடுக்கும் அப்பிடிங்கறதெல்லாம் கட்டுக் கதை.

அது மட்டுமில்ல இந்த நாகரத்தினம் கூட பாம்போட விஷத்தால் உருவாகற கல் கிடையாது. இது ஒருவித கல். அதாவது பவழம், கோமேதகம், மாணிக்கம் மாதிரி பூமியில கிடைக்கிற ஒரு வித கல். இதை பாம்புகள் இரையோட சேர்த்து விழுங்கிடுது. அப்படி உள்ள போன கல்லு பாம்பு உடலில் தட்ப வெப்பத்துக்கும், ரசாயனங்களுக்கும் ஏற்ப சில சின்ன மாற்றத்துக்கும் உள்ளாகுது. இப்படி பல கற்களை பல சமயம் நான் தோல் உரிக்கும் போது எடுத்திருக்கேன். பாம்புகளோட பல வருஷம் பழகி ஆராய்ச்சி செய்தவன்கற முறைல ஆணித்தரமா இதைச் சொல்றேன்.

மற்றபடி நாகலோகம், நாகராஜன், நாக ராணி, அப்புறம் இச்சாதாரி பாம்பு பழி வாங்குதுங்கற எண்ணம் எல்லாமே பொய்...

உண்மையில் பாம்பு ஒரு சாதுவான ஜீவன். அதோட புஸ்ஸ் சப்தம் பயத்தோட குரல். நாம அதை நேர் எதிரா எடுத்துக்கறோம்...''

ஷியானிடம் மிக நீண்ட விளக்கம். திருப்பதிசாமி கவுண்டர் பாம்பு நிம்மதியில் அப்படியே பொங்கி அடங்கியது.

பிரகதாம்பாளும் அரைக் கண் மூடி கன்னத்தில் போட்டுக் கொண்டாள்.

எஸ்.பி. முகத்தில் அசாத்ய பெருமிதம். அவர் கவனம் ஜெயந்தன் பக்கம் திரும்பியது.

''ஜெயந்தன்... இப்ப என்ன சொல்றீங்க?''

''என்னத்த சார் சொல்லட்டும். அதான் சீனாக்காரரை சமயத்துக்கு கூட்டிகிட்டு வந்து புட்டு புட்டு வெச்சிட்டீங்களே. நானும் இச்சாதாரின்னுல்லாம் ஒண்ணு இருக்க முடியாதுன்னு தானே சொன்னேன்...''

''ஆனா... வைத்தியரை சந்தேகப்பட்டீங்களே?''

''அது என் தொழில் தர்மம் சார். எனக்கு அவர் தம்பி ஒருத்தர் மேஜிக் பண்ற விஷயமோ, அவரும் இவரும் இரட்டைப் பிறவிங்கறதோ தெரியவே தெரியாதே. இந்த பார்த்திபன் வேற பாம்பு தன்னைப் போலவே மாறிச்சுன்னு சொன்னாரா.. அதான் ஏதாவது மேஜிக் வேலையா இருக்கும்னு நினைச்சு வைத்தியர் மேல சந்தேகப் பட்டுட்டேன்.''

''நல்லவேளை எஸ்.பி.சார் இந்த சீனாக்காரரை கூட்டிக்கிட்டு வந்து என் மானத்தை காப்பாத்திட்டீங்க. நான் கூட இச்சாதாரிதான் என்மேல பழி போடுது அதுதான் இந்த ஜெயந்தன் ரூபத்துல வந்து கலாட்டா செய்யிதுன்னல்லாம் நம்பிட்டேன்.''



வைத்தியர் கொஞ்சம் அசடு வழிந்தார்.

''எது எப்படியோ... ஒரு முட்டாள்தனமான நம்பிக்கை இன்னிக்கு தூள் தூளாயிடிச்சு. சாபமோ பாபமோ காரணமில்லைன்னும் தெரிஞ்சு போச்சு. சக்கரை கொட்டிக் கிடக்கற இடத்துக்கு எறும்பு வந்து போற மாதிரிதான் கவுண்டர் சந்ததிகள் கிட்ட பாம்புகள் வந்து போயிருக்கு.

அவங்க எப்பவும் போல எச்சரிக்கையா இருந்தாலே போதும். சுகர் கம்ப்ளைண்டுக்கு இன்சுலின் எடுத்துக்கற மாதிரி இந்த விஷயத்துக்கு எச்சரிக்கையை மருந்தா எடுத்துகிட்டா போதும். பாம்பு நடமாட்டமுள்ள இடத்துக்கு போகாம இருந்தாலே போதும். முக்காலே மூணு வீசம் பிரச்சினை தீர்ந்துடும்.''

எஸ்.பி.யின் கருத்துக்கு திருப்பதிசாமி கவுண்டரிடமும் உற்சாகமான ஆமோதிப்பு.

''சார் ரொம்ப நன்றி சார். இனி நாங்க எச்சரிக்கையா இருப்போம். காக்கா உட்கார பனம்பழம் விழுந்த மாதிரி எங்கப்பா வேட்டைக்குப் போய், ஒரு பாம்ப சுட்ட சம்பவமும் அதைத் தொடர்ந்து பாம்பு கடிச்சே அவர் செத்துப் போகவும் கூட்டிக் கழிச்சு முட்டாள்தனமா ஒரு கணக்கு போட்டுட்டோம்.

இனி தெளிவாக இருப்பேன். திடமாகவும் இருப்பேன்.'' திருப்பதிசாமி கவுண்டரிடம் உற்சாகம் பொங்கி வழிந்தது.

பார்த்திபன் மட்டும் குழப்பத்திலிருந்து விடுபடவே இல்லை.

''என்ன பார்த்திபன் ஏன் நீங்க மட்டும் ஏதோ சிந்தனைலயே இருக்கீங்க?''

''என்னுடைய பண்ணைல ஒரு பாம்பு என்னைப் போலவே மாறிப் போனதை என் கண்ணால நான் பார்த்தேனே சார். அது எப்படின்னு யாரும் சொல்லவே யில்லையே...''

''அது நீங்க கண்ட கனவாயிருக்கும்.'' எஸ்.பி. சொல்லிவிட்டு சிரித்தார்.

''இல்ல சார். கனவு இல்ல. நிஜம் - நன் கண்ணால பார்த்த நிஜம்.''

''என்ன மிஸ்டர் பார்த்திபன். ஒருத்தரை ஒருத்தர் குறை சொன்ன வைத்தியரும், ஜெயந்தனுமே உண்மை புரிஞ்சு கை குலுக்கிவிட்டு நிக்கறாங்க. நீங்க போய் அதைப் பார்த்தேன் இதைப் பார்த்தேன்னுகிட்டு...''

உரத்த குரலெடுத்து அடக்கினார் எஸ்.பி. பார்த்திபனும் வாயை மூடிக் கொண்டான்.

ஆனால் மனது பார்த்த காட்சியிலேயே இருந்தது. காண்பதெல்லாம் உண்மையா? பொய்யா? குழம்பியது. தத்தளித்தது. தடுமாறியது.

இங்கே எதையும் பேச முடியாது...

எல்லாமே உரத்த குரலில் அடக்கப்பட்டு விடும்.

பார்த்திபன் தனக்குத்தானே சமாதானம் சொல்லிக் கொண்டான்.

''ஆமாம் எங்க உங்க மகன் நாகராஜன்?''

''மாடியில அவனோட ரூம்ல இருக்கான்.''

''நான் அவரை பார்க்கணும். அவர்கிட்ட எல்லா உண்மைகளையும் சொல்லணும்.''

ஷியான் ஆங்கிலத்தில் எஸ்.பி.யிடம் கூறினார்.

''வித் ப்ளெஷர்.'' - என்று எஸ்.பி. மாடிப் படியைக் காட்டினார்.

ஷியான் நாகரத்தினமுடன் படிகளில் கால் வைத்தார். ஞாபகமாக பார்த்திபனை மட்டும் ஒரு தினுசாகப் பார்த்தார். மிக மிக சன்னமான ஒரு கேலிப் புன்னகை இதழில் தொற்றிக் கொண்டிருந்தது.

பார்த்திபனும் புரிந்து கொண்டான்.



''சார் அவரோட யாராவது போங்க.'' என்று கத்தினான்.

''சார் ஷியான் திரும்பிப் பார்த்து சிரித்தார். ''யார் வேணும்னாலும் வரலாம்'' என்றார்.

''நோ மிஸ்டர் ஷியான். யு கேன் கோ. பார்த்திபன் அவரோட யாராவது போங்கன்னா என்ன அர்த்தம்? அவர் மேலேயே சந்தேகமா?''

எஸ்.பி.யின் கேள்வியில் நெருப்பின் ஜுவாலை...

''சார் வந்து... சும்மா துணைக்கு...''

''நோ... இத்தனை பேர் இருக்கோம்ல. அவரும் கிளிப் பிள்ளைக்கு சொல்ற மாதிரி சொல்லியிருக்கார். இன்னும் சந்தேகப் பார்வை என்ன அர்த்தம்? இச்சாதாரியெல்லாம் இருக்க முடியாதுங்கறது இன்னுமா உங்களுக்கு புரியல... நான்சென்ஸ்...''

''நான் கண்ணால பார்த்தவனாச்சே சார்..''

''அது பொய். கற்பனை. இல்லைன்னா கனவு. அதுவும் இல்லைன்னா பிரமை. இனிமே கண்ணாலே பார்த்தேன், காதால பார்த்தேன்னு நீங்க எதுவும் பேசக் கூடாது. ஷியான் என் விசேஷ முயற்சியால தாய்வான்ல இருந்து வந்துருக்கறவர். பத்திரிகை, டி.வி., பொது ஜனம்னு எங்க பார் இச்சாதாரி பற்றி நம்பிக்கையும் கேள்விகளும் நிலவி கிட்டிருந்ததை நான் இப்ப உடைச்சு காட்டியிருக்கேன். தெரியுமில்ல.

இதை புரிஞ்சு சந்தோஷப்படாம நீங்க பாத்ததை பத்தியே பேசி கிட்டிருந்தா என்ன அர்த்தம்?''

எஸ்.பி.யின் அதட்டல் குரல் ஷியான் நாகராஜின் ரூமிற்குள் நுழையவும் அடங்கிப் போனது.

பார்த்திபன் குழப்பத்தோடு மாடி அறையை ஒரு பார்வையும், மற்றவர்களை மறுபார்வையும் பார்த்தபடி இருந்தான்.

எஸ்.பி. ஜெயந்தனிடம் சொல்லிக் கொண்டிருந்தார். ''ஜெயந்தன் ஷியான் சொன்னதை நல்லா விலாவரியாக உங்க பத்திரிகைல எழுதுங்க. என்ன?''

''ஷ்யூர் சார்...''

''கவுண்டரே.. அது நாகரத்தினம் கல்லோ இல்ல மண்ணோ. வைத்தியர் உங்களுக்காக சிரமப்பட்டு அதை கொண்டு வந்துருக்கார். அவருக்கு உரிய தொகையை கொடுத்துடுங்க.''

''நிச்சயமா... அந்த பாம்பு பிடிக்கற வண்ணமுத்துவை யும் கவனிச்சிட்றேன்.''

''இருங்க. எல்லாரும் சாப்டுட்டுதான் போகணும்.'' பிரகதாம்பாள் தன் பங்குக்கு அன்பைக் காட்டியபடி சமையல் கட்டை நோக்கி நடந்தாள்.

பார்த்திபன் பார்வை மட்டும் சுழன்று கொண்டே இருந்தது.

அந்த சந்தடியில் இருந்து நழுவி மேலே போய் பார்க்கும் ஆசை தோன்றத் தொடங்கியது.

அதை வேறு விதமாக நிறைவேற்றிக் கொள்ளத் திட்டமிட்டான்.

எஸ்.பியிடம் நெருங்கினான்.

''சார் நான் புறப்பட்றேன்.''

''இருங்க சாப்ட்டு போகலாம். என்ன அவசரம்?''

''அவசரம்தான். மிஸ்டர் ஷியானோட ஒரு தடவை நீங்க என் பாம்புப் பண்ணைக்கு வரணும்.''

''அதுக்கென்ன வந்துட்டா போச்சு.''

''ஒரு வார்த்தை அவர்கிட்ட சொல்லிட்றேனே.''

''மேல போய் செக் பண்ணிப்பாக்க ஆசைப்பட்றேன்னு பச்சையா சொல்லுங்களேன். இப்ப என்ன?''

எஸ்.பி. கலகலவென்று சிரித்தபடி சமிக்ஞை கொடுத்தார்.



பார்த்திபன் தாவி ஏறினான். அறைக் கதவின் முன் போய் நின்றான். தட்டுவதற்கு முன் சாவித் துவாரம் என்னைப் பார் என்றது.

பார்த்தான்.

பகீரென்றது!

உள்ளே நாகராஜன் வயிற்றின் மேல் ஒரு நாகம் படம் எடுத்தபடி அமர்ந்திருந்தது. நாகராஜன் பிணமாகக் கிடந்தான். தான் நினைத்தது. சந்தேகப்பட்டது எல்லாம் சரிதான்.

இச்சாதாரிதான் ஷியான் ரூபத்தில் வந்திருக்கிறது.

''சர்ர்ர்ர்...!''

அங்கிருந்தபடியே தொண்டை கிழிய கத்தினான். கீழிருந்த எல்லோருமே பார்த்தார்கள்.

''நான் சந்தேகப்பட்டப்போ கண்டிச்சீங்க. இப்ப வந்து பாருங்க.''

எல்லோரும் திபுதிபுவென்ற மாடியில் ஏறினார்கள். கதவையும் உடைக்க ஆரம்பித்தார்கள். அவசியமில்லை என்கிறார் போல கதவு உள்ளிருந்தே திறக்கப்பட்டது.

கதவுக்கு பின்னால் நாகராஜன் நின்று கொண்டிருந்தான்.

''என்ன விஷயம் சார்...?'' பவ்யமாக கேட்டான். பார்த்திபன் வெலவெலத்து விட்டிருந்தான்.

''ஒண்ணுமில்ல நாகராஜ். ஆமா எங்க மிஸ்டர் ஷியான்.''

''அவர் பேசிட்டு போய்ட்டாரே...''

''போய்ட்டாரா - எப்போ?''

''போய் பத்து நிமிஷமாச்சு. நிறைய விஷயங்கள் சொன்னார். மனசுக்கும் இதமா இருந்தது. இச்சாதாரி அது இதுன்னு ரொம்பதான் எல்லோரும் பயந்துட்டோம்

எல்லாமே கற்பனை. பொய்...'' நாகராஜ் நிறுத்தி நிதானமாக பேசினான். எஸ்.பி. பார்த்திபன் பக்கம் கோபமாக திரும்பிக் கத்தினார்.

''மிஸ்டர் பார்த்திபன் இப்ப எதுக்கு கத்தினீங்க. என்ன ஆயிடிச்சுன்னு கத்தினீங்க?''

''சார் அது வந்து...''

''என்ன அது வந்து.. போய் வேலைய பாருங்க உங்களுக்கு பயந்துகிட்டே அந்த ஷியான் சொல்லாம கொள்ளாம ஓடிட்டார்.

மிஸ்டர் நிஜாம், ஷியானை முதல்ல பிடியுங்க. அவர் ஹோட்டல்ல இருக்கலாம்.''

பேசிக் கொண்டே விலகினார். எல்லோரும் அவரைப் பின் தொடர பார்த்திபனும் தலையை உதறிக் கொண்டு பின் தொடர்ந்தான்.

மனதில் குழப்ப சமுத்திரம்.

'பார்த்தது உண்மையா -பொய்யா?'

சட்டென்று அவன் தோள்மேல் ஒரு கரம் விழுந்தது. நாகராஜின் கரம்தான் அது.

''சார்ர்...!- இது பார்த்திபன்

''ஒரு நிமிஷம்'' - இது நாகராஜ்.

''சொல்லுங்க...''

''நீ பார்த்தது உண்மை. ஆனா அது இந்த உலகத்துக்கு பொய்யா இருக்கணும். இருந்தே தீரணும். அப்பதான் இச்சாதாரிகள் ஏகாந்தமா திரிய முடியும். இல்லேன்னா எங்களையும் பிடிச்சு அடக்கி ஆள ஒரு கூட்டம் கிளம்பிடும். அதனாலதான் ஷியானா வந்து விஞ்ஞானம் பேசினேன்.

உன் எதிரே நாகராஜனா நிக்கறேன். நாங்க வடிவம் மாறும் போது யாரும் பார்க்க விட மாட்டோம். ஆனா நீ பார்த்துட்டே. எங்களப் பற்றின ரகசியம் தெரிஞ்ச ஒரே நபர் இந்த உலகத்துலையே நீ மட்டும்தான். என் பேச்ச கேட்டா



நீ உயிர் பிழைப்பே. இல்லேன்னா நீ எங்க போனாலும் இந்த குடும்பத்தை அழிக்க வந்த மாதிரி உன்னையும் அழிக்க வருவேன்.''

பார்த்திபன் அப்படியே நொறுங்கிப் போனான். ஈன சுரத்தில் கேட்டான்.

''இப்ப என்ன பண்ணணும்?''

''உள்ள வா...''

பார்த்திபன் உள்ளே சென்றான். கட்டிலுக்கு கீழே நாகராஜனின் பிணம் கிடந்தது.

''இந்த பிணத்தை இந்த ஜன்னல் வழியா கீழே இறக்கணும்..''

''ஐய்யோ வெளிய திரும்பின பக்கமெல்லாம் ஆட்கள் இருக்காங்களே..''

''எல்லாரையும் ஜன்னல் வழியாவே பார்த்து போகச் சொல்லிட்டேன். இப்ப யாரும் இல்லை.''

''சரி. இதை என்ன பண்ணணும்?''

''பின் பக்கத்துல ஒரு கார் நின்னுகிட்டிருக்கு. அதுல தூக்கி போட்டுகிட்டு போய் எங்கையாவது வெச்சு எரிச்சுட்டு வா... நாகராஜ்னு ஒருத்தன் இறந்ததே உலகத்துக்கு தெரியக் கூடாது. நான் இங்கையே காத்திருக்கேன்.

எனக்கு கை கொடுத்து உதவி செய்து கீழ பேசிகிட்டிருக்காரே எஸ்.பி. சிவபாஸ்கர். அவரைப்போல உன்னை உயர்ந்த இடத்துக்கு கொண்டு போவேன். எனக்கு அதுக்கான சக்தி உண்டு இல்லேன்னா...''

நாகராஜனாகக் காட்சி தந்த அந்த இச்சாதாரி மனிதனின் பேச்சும் தோரணையும் பார்த்திபனை கட்டிப் போடத் தொடங்கியது.

பிணமாகி கிடக்கும் ஒரிஜினல் நாகராஜை பிடித்து வெளியில் இழுத்தான்.

நீலம் பாய்ந்த அந்த உடம்பு பயமுறுத்தியது. தொட்டு தூக்கிய போது மூச்சிரைத்தது.

அப்படியே விக்கிரமாதித்தன் போல நாகராஜன் பிணத்தை தோளில் போட்டுக் கொண்டவன் திரும்பி அந்த இச்சாதாரியைப் பார்த்தான்.

''ஒரு கேள்வி கேட்கலாமா?''

''என்ன?''

''இந்த நாகராஜை கொன்னுட்டு இப்ப அவன் வடிவத்துல இருக்கற நீ இதுக்கு முந்தி எல்லாம் ஏன் அப்படி நடந்துக்கலை?''

''அவசியம் இந்த கேள்விக்கு பதில் தெரியணுமா?''

''உன் இஷ்டம்.''

''என்னோட சந்தோஷமா இருந்த போது சுட்டுக் கொல்லப்பட்ட என் ஜோடி திரும்ப பிறந்திருக்கா அதுவும் மனித குலப் பெண்ணா...! அவளை நான் கல்யாணம் செய்துக்கணும்னா இந்த கவுண்டர் குடும்பத்துக்கு நான் ஒரே வாரிசா இருக்கணும். அவ்வளவு சொத்தும் எனக்கு வரணும். அதுக்கு போட்டி இருக்கக் கூடாதுன்னு தான் அவ்வளவு பேரையும் கொன்னேன். இப்ப இந்த நாகராஜனாவே நான் ஆயிட்டேன். இனி நான் வைக்கப் போறதுதான் சட்டம்.''

''எல்லாம் சரி.. அந்த நாகரத்தினக் கல் உன்னை ஒண்ணுமே செய்யலையே அது எப்படி?''

''அந்த கல் இச்சாதாரிகளை கட்டுப்படுத்தும்னு யார் சொன்னது? அது அந்த வைத்தியன் கற்பனை.''

''மேற்கொண்டு கவுண்டரையும், அவர் மனைவியையும் கொல்வியா?''

''அவசியமில்லை. அவங்க ஜாதகப்படி அவங்க இன்னும் ஒரு வருஷத்துல இயற்கையாகவே இறந்துடப் போறாங்க.''

''அப்ப இனி உன் நோக்கம்?''



''கல்யாணம், சந்தோஷமான வாழ்க்கை. நடுவுல இச்சாதாரிங்கறது ஒரு பெரிய பொய்ங்கறத உரத்த குரல்ல சொல்றது தான்.''

பார்த்திபன் அதைக் கேட்டு வாயடைத்துப் போனான். பிணத்தை ஜன்னலிலிருந்து இறக்க படாத பாடு பட்டான். பின், காரில் கொண்டு போய் போட்டு விட்டு காரைக் கிளப்பினான்.

கார் சீறிக் கொண்டு புறப்பட சப்தம் கேட்டு பலர் வந்து எட்டிப் பார்த்தனர்.

எஸ்.பி. புத்திசாலித்தனமாக அவர்களை போகச் சொல்லி விட்டு காருக்கு வழியை விட்டார்.

காரும் எஸ்.பியை தாண்டிச் செல்லும் முன் நின்றது. பார்த்திபன் எஸ்.பியை கண் சிமிட்டலின்றி பார்த்தான்.

''இப்படி பார்த்தவன்தான் நானும். போ - போய் காரியத்தை கச்சிதமா முடி. இல்லேன்னா நீ, நான் எல்லாரும் முடிஞ்சிடுவோம்.'' என்றார் எஸ்.பி.

தொடர்ந்து கார் சீறத் தொடங்கியது.

## 15

**'இச்சாதாரி பாம்புகள் போல மதங்களில் சொல்லப்பட்டிருப்பவை எல்லாமும் உண்மைதான். எல்லாமும் பொய்தான். பார்த்திபன் மாதிரி மனிதர்களுக்கு..'**

விடிந்து விட்டது.

கண் விழித்த பார்த்திபனுக்கு கலக்கமாக இருந்தது.

'நாகராஜ் விஷயம் - இச்சாதாரி நாகம் - எஸ்பி. சொல்லியனுப்பியது' என்று எல்லாமே நினைவில் ஒரு முறை சுழலத் தொடங்கியது.

''ஒரு வேளை எல்லாமே கனவோ?''

கேள்வி மனதைக் குத்தியது. இல்லை எல்லாம் நிஜம்... பிணத்தை எரித்துவிட்டு நேராக தூங்க வந்து விட்டாய் நீ. அதுதான் இப்படி குழம்புகிறாய் என்றது மனது.

இல்லையில்லை. நான் கவுண்டரின் வீட்டில் பார்த்தது... பேசியது, என்னிடம் அந்த இச்சாதாரி பேசியது எல்லாமே கனவு என்றது அதே மனது...

எது உண்மை?

பார்த்திபன் மண்டை காய்ந்து போனான்.

கனவு போலவும் இருக்கிறது. நிஜம் போலவும் இருக்கிறது. நிஜம் என்றால் ராத்திரி ஓட்டி வந்த கார் வீட்டு முன் இருக்க வேண்டுமே...?

போய்ப் பார்த்தான். காரைக் காணவில்லை.

அப்படியானால் கனவுதானா?

சந்தேகம் வந்து கனவுதான் என்றது!

ஆனால் ஆடையில் பெட்ரோல் வாடை வீசியது.

பிணத்தை எரிக்க அதன் மேல் பெட்ரோலைக் கொட்டியது ஞாபகத்துக்கு வந்தது.

ஐய்யோ... அப்படியானால் நிஜமா?

எதற்குக் குழப்பம். கவுண்டர் வீட்டுக்கே போன் செய்து கேட்டு விடுவோம் என்று போன் போட்டான்.

நாகராஜ்தான் கையிலெடுத்தான்.

''சார். நான் பார்த்திபன் பேசறேன்.''

''சொல்லுங்க மிஸ்டர் பார்த்திபன்.''

''நீங்க சொன்ன மாதிரி எரிச்சுட்டேன்.''

''எதை?''

''என்ன சார் அப்படி கேட்கறீங்க. உடம்பைதான்.''

''யார் உடம்பை?''

''உங்க உடம்பைத்தான் சார்...''



''உங்களுக்கென்ன பைத்தியமா... இது என்ன கேள்வி. பைத்தியம் தான் உங்களுக்கு, இல்லேன்னா நேத்து நான் கண்ணால பார்த்தேன். கண்ணால பார்த்தேன்னு சொல்லிகிட்டே இருப்பீங்களா? இப்ப பொணத்தை எரிச்சதா வேற சொல்றீங்களா? மிஸ்டர் பார்த்திபன் நல்ல டாக்டரைப் பாருங்க. ப்ளீஸ்...'' மறுமுனை முடங்கியது.

''ஏய் இச்சாதாரி... நீ புளுகுகிறாய். உன்னை அடையாளம் காட்டாமல் நான் ஓய மாட்டேன்.'' என்று சொல்ல நினைத்த பார்த்திபன் ஒரு வேளை தன் மனதில் உள்ள பிம்பங்கள் நிஜத்தில் நடக்காமல் கனவில் தோன்றியதோ?

குழம்பத் தொடங்கினான்.

மறுபடியும் தொலைபேசி சிணுங்கியது. பார்த்திபன் ஆவலோடு எடுத்து காதுக்கு கொடுத்தான். ''எது நிஜம் என நீ... குழம்பி கொண்டிருப்பது புரிகிறது. உன் வரையில் நேற்று நடந்தவைகள் அனைத்தும் நிஜம்தான். ஆனால்... மற்ற அனைவருக்கும் இதை சொல்ல நினைத்தால் நீ பார்த்தவைகள் அவ்வளவும் கனவுதான். பைத்தியம் என்ற பட்டத்தோடும் அலைவாய் என்ன புரிந்ததா?''

மறுமுனையில் நாகராஜன் மிரட்டினான். இவன் இச்சாதாரியா, நாகராஜனா...?

**எது நிஜம் என்கிற கேள்வி மட்டும் அவனது பண்ணைப் பாம்புகளைப் போல படமெடுத்து நிற்கத் தொடங்கியது.**

## முற்றும்